KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX
Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 12 September 2025 இதழ்:- 29

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

## ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் மாகாணசபை
## அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வலியுறுத்திய இந்தியா

நாட்டின் அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துதல், மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடாத்துதல் மற்றும் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை மேற் கொள்ளல் என்பவற்றுக்கு நடவடிக்கை எடுக்குமாறு பேரவையில் இலங்கையை வலியுறுத்திய இந்தியா, சகலரையும் உள்ளடக்கிய அர்த்தமுள்ள(6ம் பக்கம் பார்க்க)



ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
**eelanadu.ca**
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd.
Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance
100% Refund

## பாதாள உலகக்குழுத் தலைவர் கமாண்டோ சலித்துவுக்கு தோட்டாக்கள் வழங்கிய மல்லாவி இராணுவ அதிகாரி கைது!


BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvale Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

# சிங்கள தேசத்தைப் பாதுகாத்த "தேசத் தந்தை"யை பாதுகாக்க சிங்கள மக்கள ஏன் கிளர்ந்தெழவில்லை?

தேசத்தை பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து மீட்டதாக இது நாள் வரை பெருமை பேசி வந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச 11 செப் 2025 அநுர அரசால் கொழும்பிலிருந்தே துரத்தப்பட்டுள்ளார் என்று தான் கூற வேண்டும் என பேசிக் கொள்கின்றனர் பலர். இவ்வாறு அரசாங்கத்தினால் வெளி யேற்றப்பட்ட தேசத்தை பாதுகாத்த தந்தையை மீட்க சிங்கள மக்கள் ஏன் கிளர்ச்சி செய்யவில்லை என்பது வியப்பாக உள்ளது எனவும் கூறுகின்றனர் அவர்கள். (5ம் பக்கம் பார்க்க)




## அற்புதன், மகேஸ்வரி, கே.எஸ்.ராஜா உள்ளிட்ட பலரை படுகொலை செய்தது ஈ.பி.டி.பியே - முன்னாள் உறுப்பினர் -



# மஹிந்த - மைத்திரி ஆகியோர் உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து மூட்டை முடிச்சுக்களுடன் சொந்த ஊர் திரும்பினர்!

முன்னாள் ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலம் 09 செப் 2025 புதன்கிழமை பாராளுமன்றத்தில் 150 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதை அடுத்து ஜனாதிபதிகளின் உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலத்தில் சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன 10 செப் 2025 தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார்.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச கொழும்பிலுள்ள விஜேராம வீதியில் அமைந்துள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து 11 செப் 2025 வியாழக்கிழமை வெளியேறினார்.

அதற்குமுன்னதாக கொழும்பு விஜேராம வீதியில் உள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு அரசியல்வாதிகள் வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் ஆதரவாளர்கள் என பல்வேறு தரப்பினர் வியாழக்கிழமை காலை முதல் வருகை தந்திருந்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவரது உத்தியோகபூ ர்வ இல்லத்திலிருந்து வெளியேறவுள்ளதாக வெளியான தகவலையடுத்து அனைவரும் அங்கு சென்றனர். சீனத்தூதுவர் உள்ளிட்ட பல இராஜதந்திரிகள் அரசியல்வாதிகள் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு வருகை தந்திருந்தனர்.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு கொழும்பில் வீடுகளை வழங்க தமிழர் ஒருவர் உட்பட நால்வர் முன் வந்துள்ளதாக சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார். இந்த வீடுகள் கொழும்பு 07 ரோஸ்மீட் பிளேஸ், வார்டு பிளேஸ், உட்பட இரண்டு மூன்று பகுதிகளில் அமைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.



## இல்லத்தைக் காலி செய்தார் மைத்திரி

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொழும்பு ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தையில் உள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்தை காலி செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நீக்கப்பட்ட சட்டத்தின் 2ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி முன்னாள் ஜனாதிபதிக்கு அல்லது முன்னாள் ஜனாதிபதியின் கைம்பெண்ணுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் வதிவிடம் அல்லது செலுத்தப்பட்ட மாதாந்த படி, நீக்கப்பட்ட சட்டத்தின் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி முன்னாள் ஜனாதிபதிக்கு அல்லது முன்னாள் ஜனாதிபதியின் கைம் பெண்ணுக்கு செலுத்தப்பட்ட மாதாந்த செயலகப் படித்தொகை, வழங்கப்பட்ட அலுவலக போக்குவரத்து மற்றும் அத்தகைய வேறு வசதிகள், நீக்கப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி முன்னாள் ஜனாதிபதியின் கைம்பெண்ணுக்கு செலுத்தப்பட்ட மாதாந்த ஓய்வூதியம் என்பன இரத்துச் செய்யப்படும்.

## சந்திரிகாவும் வெளியேறத் தயார்!

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் தனது உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு வெளியேறத் தயாராக இருப்பதாகக் கூறப்படுகிறது.

சட்டத்தின் விதிமுறை விதிகளின்படி முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்களை அரசாங்கத்திடம் திருப்பி ஒப்படைக்க வேண்டும். இதனடிப்படையில், சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் தனது உத்தியோகபூர்வ இல்லத்தை அரசாங்கத்திடம் ஒப்படைக்க தயாராகியுள்ளார்.

எவ்வாறாயினும் முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்சவும் ரணில் விக்ரமசிங்கவும் ஏற்கனவே தனியார் இல்லத்தில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அரசியலை விட்டு வெளியேற மாட்டேன்

தனது விஜேராம இல்லத்தை விட்டு வெளியேறும் போது அரசியலை விட்டு ஒருபோதும் செல்லப் போவதில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அறிவித்துள்ளார்.

தான் தொடர்ந்து அரசியலில் ஈடுபடுவேன் என்று ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

அவரது எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் எப்படி இருக்கும் என்று கேட்டபோது, 'நான் அரசியலைத் தொடர்வேன். நான் ஒருபோதும் அரசியலை விட்டு விலகப் போவதில்லை என கூறியுள்ளார்.

ஓய்வுபெற்ற ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஜனாதிபதி உரித்துரிமைகள் (நீக்குதல்) சட்டமூலம் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.


கந்தன் துணை

வணக்கம் நமது தமிழ் சொந்தங்கள் அனைவருக்கும் நாங்கள் இலங்கையில் உள்ள நாவலர் பரம்பரை வழியில் வந்த தமிழர்களின் பரம்பரை ஜோதிடர் திரு.ஆறுமுக நாவலர் தமிழ்நாட்டிலிருந்து முதன்முறையாக கனடாவிற்கு வருகை தந்துள்ளார். நீங்கள் இதுவரை எத்தனையோ ஜோதிடர்களை சந்தித்து பலன் பெறாத நீங்கள் ஒருமுறை என்னை சந்தித்து உங்கள் ஜோதிட பிரச்சனைகளுக்கு பலன் பெற்று செல்லுங்கள்.




ஸ்ரீ கந்தன் ஜோதிட நிலையம்

ஜோதிடர். ஆறுமுக நாவலர்



1.ஜாதக குறிப்பு பலன்கள் 2.கைரேகை பலன்கள் 3.முக லக்ன பலன்கள் 4.சோழிப் பலன்கள் துல்லியமாக கணித்து கூறப்படும்.

1.உடல்நலம், 2.கல்வி, 3.வியாபாரம், 4.திருமணத்தடை, 5.காதல் பிரச்சனை, 6.குழந்தை பாக்கியம், 7.வாஸ்து சாஸ்திரம், 8.தாம்பத்திய கோளாறு, 9.வழக்கு விவகாரம், 10.வெளிநாட்டு பயணங்கள், 11.செய்வினை, தீயசக்தி தீர்வுகள், 12.கணவன், மனைவி ஒற்றுமை பிரச்சனை, 13.சொத்து பிரச்சனை, 14.செவ்வாய், நாகதோஷ பரிகாரம், 15.எதிரிகளின் பிரச்சனை, 16.குடும்பத்தில் திடீர் இழப்பு

ஆகிய அனைத்து விதமான பிரச்சனைகளுக்கும் சிறந்த முறையில் தீர்வு கொடுக்கப்படும்

தொடர்புக்கு : 437 - 833 - 6651

OUR BRANCHES: TORONTO, SCARBOROUGH, MISSISSAUGA, BRAMPTON

உடனே அப்பாய்மெண்ட் எடுத்துக் கொள்ளுங்கள்

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com


## வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!



என் இனிய உறவுகளே! கனடாவாழ் கருணையாளர்களே! முல்லைத்தீவு பிராந்தியத்தில் அமைந்துள்ள பாரதி இல்லம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அன்பு இல்லம் மற்றும் செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளது உணவுத் தேவையை கடந்த 14 ஆண்டுகளாக தங்கு தடையின்றி நிறைவேற்றி வந்தவர்கள் நீங்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிகள், வீட்டு அடமான வட்டி வீத அதிகரிப்புக்கள் போன்ற பல்வேறு நெருக்கடிகள் காரணமாக இந்தக் குழந்தைகளுக்கான உதவிகள் குறைந் துள்ளது. இதனால் இக்குழந்தைகளின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் என்று பல்வேறு நெருக்கடிகளை எதிர் கொள்ளும் நிலையேற்பட வாய்ப்புள்ளது என்பதால் ஒவ் வொரு தமிழரும் குறிப்பாக கனடியத் தமிழர்கள் இக் குழந்தைகளுக்காக வருடத்தில் ஒருநாள் வரும் உங்கள் பிறந்த நன்நாள்கள், திருமண நன்நாள்கள், உங்கள் குழந்தைகளின் பிறந்த நன்நாள்கள் மற்றும் உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நான் என மலரும் உங்கள் நினைவுகளில் இக்குழந்தைகளையும் நினைத்து ஒருநாள் உணவளிக்க முன்வாருங்கள்!

தர்மம் தலை காக்கும். கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க அன்னதானம் வழங்குவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் குழந்தைகளின் வாழ்த்துக்கள் உங்களை மட்டு மல்ல உங்கள் சந்ததி வாழ வைக்கும்.

நீங்கள் வழங்குகின்ற உதவிகள் சரியான நேரத்தில் சென்ற டைகின்றது என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள eelanadu.ca என்ற மின்னிதழில் வெள்ளிக்கிழமை தோறும் பார்வையிடலாம். உங்கள் ஆதரவே இக்குழந்தைகளின் வாழ்வாதாரம்.

இலங்கை சிறுவர் நன்னடைத்தை மற்றும் பராமரிப்பு கண் காணிப்பு அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கு அமைய முக நூல்களில் இவர்களது புகைப்படங்கள் தவிர்க்கப்பட்டு ள்ளன.


மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகளுக்கும் ஈழநாடு பரமேஸ் 416 8419600 (கனடா) eelanadu1993 @gmail.cam என்ற மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்.

# கனடாவில் குழந்தைகள் காப்பகத்துக்குள் பாய்ந்த கார்!

கனடாவில் குழந்தைகள் காப்பகமொன்றுக்குள் கார் ஒன்று பாய்ந்த சம்பவத்தில் குழந்தையொன்று உயிரிழந்துள்ளமை அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

10 செப்டம்பர் 2025 புதன்கிழமையன்று, நண்பகல் 3.00 மணியளவில், ஒன்ராறியோ மாகாணத்தின் Richmond Hill நகரில் அமைந்துள்ள குழந்தைகளுக்கான பகல் நேரக் காப்பகத்திலேயே குறித்த கார் பாய்ந்தது. இவ் விபத்தில் ஏழு குழந்தைகள் காயமடைந்த நிலையில், அவர்களில் ஒன்றரை வயது சிறுவன் ஒருவன் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அவர்களுடன் காப்பக ஊழியர்கள் மூன்று பேரும் காய மடைந்துள்ளார்கள். இந்நிலையில் 70 வயதான காரின் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். அவர் வேண்டுமென்றே காரைக் கொண்டு மோதியதாக தோன்ற வில்லை எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.




இச் சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை உரு வாக்கியுள்ள நிலையில், இது தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மஹிந்தா வெட்கப்பட வேண்டும் ஆனால் அவர் அனுதாபம் தேடுகிறார்

நாட்டில் அதிகார துஸ்பிரயோகம் செய்தோர் இன்று தண்டிக்கப்படுகின்றார்கள். பொதுமக்களுக்கு நாங்கள் செய்த சத்தி யத்தை இன்று செய்து காட்டி வருகின்றோம் என பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார். 11 செப் 2025 வியாழக்கிழமை பாராளுமன்ற அமர்வில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறும் போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவை சந்திக்க அவரின் ஆதரவாளர்கள் அணி திரண்டு சென்றார்கள். அப்போது, அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருப்பதை பார்த்தால் வியப்பாக இருக்கின்றது. காரணம் எங்களை போக சொல்லி விட்டார்கள். போவதற்கு இடமில்லை. மனைவியுடன் செல்கின்றேன் என பரிதாபகரமாக கூறுகின்றார். சரியாக பார்த்தால் அவர் வெட்கமடைய வேண்டும் என்றார்.


**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**

குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்

**2401 Eglinton Ave East, Suite 300**
**Toronto, Ontario M1K 2M5**
**416 755 5544**



# அற்புதன், மகேஸ்வரி, கே.எஸ்.ராஜா உள்ளிட்ட பலரை படுகொலை செய்தது ஈ.பி.டி.பியே - முன்னாள் உறுப்பினர்




தினமுரசு பத்திரிகையின் ஆசிரியர் அற்புதன் சட்டத்தரணி மகேஸ்வரி , ரூபவாஹினி கூட்டுத்தாபன பணியாளர் கே.எஸ் ராஜா உள்ளிட்ட பலரை படுகொலை செய்தவர்கள் ஈ.பி.டி.பி யினர், படுகொலை தொடர்பில் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டால் அது தொடர்பில் சாட்சியங்கள் அளிக்க தயாராகவுள்ளேன் என ஈ.பி.டி.பி கட்சியின் முன்னாள் உறுப்பினர் சதா என அழைக்கப்படும் சுப்பையா பொன்னையா தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் 09 செப் 2025 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,, 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இறுதியில் மண்டைதீவு பகுதி இராணுவ முற்றுகைக்குள் இருந்த வேளை அங்குள்ள மக்களுக்கு நாங்கள் நிவாரண பொருட்கள் கொண்டு சென்ற வேளை 15 – 20 பேர் அளவில் இராணுவத்தினரால் பிடித்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்களை டக்ளஸ் தேவானந்தா பார்க்க வேண்டும் என சொல்லி இராணுவத்தினரிடம் கேட்டு நாங்கள் நேரில் சென்று அவர்களை பார்த்தோம். அவர்களில் ஒரு 13 வயதுடைய சிறுவனும் இருந்தான். நாங்கள் பார்த்து வந்த சில நிமிடங்களில் வெடி சத்தம் கேட்டது. அத்தனை பேரையும் சுட்டு கொன்று விட்டார்கள்.

அதன் பிறகு நாங்கள் நெடுந்தீவு பிரதேசத்தை கைப்பற்றினோம். அவ்வேளை அங்கிருந்த அரச உத்தியோகஸ்தரான நிக்லஸ் என்பவரை சந்திக்க வருமாறு கேட்டிருந்தனர். அவர் தான் நேரில் வர மாட்டேன் என கூறியதும் அவரை அடித்து சித்திரவதை செய்த வேளை அவர் உயிரிழந்து விட்டார். பின்னர் அவரின் உடலை தூக்கில் தொங்க விட்டனர்.

டக்ளஸ் தேவானந்தாவின் மெய் பாது காவலராக இருந்தவரை புலிகளுடன் தொடர்பு என கொலை செய்தனர். நெல்லியடியை சேர்ந்த சட்டத்தரணி மகேஸ்வரியை கொலை செய்தனர். தம்முடன் முரண்பட்ட ரமேஷ் என்கிற தினமுரசு பத்திரிகையின் ஆசிரியர் அற்புதனை கொலை செய்தனர். அந்த கொலைகளை புலிகள் செய்ததாக கூறினார்கள். ஆனால் புலிகள் அவர்களை கொலை செய்யவில்லை. இவர்களே கொலை செய்தனர்.

இலங்கை ரூபவாஹினி கூட்டு தாபனத்தின் பணியாளர் கே.எஸ் ராஜா என்பவர் இந்தியாவில் இருந்து இலங்கை அழைத்து வந்து தமது ஊடக பணிகளுக்காக வைத்திருந்தனர். அவரும் இவர்களுடன் முரண்பட்ட போது காலி முகத்திடல் கடற்கரை பகுதியில் மதுபானத்தினத்திற்குள் சைனட் கலந்து கொடுத்து அவரை படுகொலை செய்தனர்.

மலையகத்தை சேர்ந்த மோகன் மற்றும் விஜி எனும் இருவரையும் கொலை செய்தனர். அவர்களை மலசல கூட குழிக்குள் போட்டு அசிட் ஊற்றி அவர்களின் உடல்களை பொசுக்கினார்கள்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த சூரி என்பவரை கொழும்பில் கொலை செய்து , கடற்கரையில் அவரின் உடலை போடும் போது அப்பகுதி மக்கள் கண்ணுற்று அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தமையால் உடலை போட வந்தவர்களை அந்நேரம் பொலிஸார் கைது செய்திருந்தனர்

ஈ.பி.டி.பி க்கு சொந்தமான கொழும்பு பார்க் வீதியில் இருந்த வீட்டில் பல கொலைகள் நடைபெற்றன. இந்த படுகொலைகளுக்கு சாட்சியங்களாக நான் இருக்கிறேன். விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டால் உயிர் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டாலும் , துணிந்து சாட்சி சொல்ல நான் தயார் என தெரிவித்தார்.


## ஈஸ்வரன் திருமண சேவை

பதிவு இல. V110 1990 இல் பிறந்த மணமகன் Canada Cityzen - Engineer லக்னத்தில் செவ்வாய். கனடாவில் அல்லது ஊரில் மணமகளை எதிர்பார்க்கின்றனர்

தொடர்புகளுக்கு:-1416 771 6013 Canada



## கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com



# பாதாள உலகக்குழுத் தலைவர் கமாண்டோ சலித்துவுக்கு தோட்டாக்கள் வழங்கிய மல்லாவி இராணுவ கட்டளை அதிகாரி கைது!



ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி எனக் கருதப்படும் கமாண்டோ சலிந்துவுக்கு T-56 துப்பாக்கிகளுக்கான தோட்டாக்களை விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில், இராணுவத்தின் ஒரு லுதினன் கர்னல் 11ஆம் திகதி வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இக்கைது நடவடிக்கையை மேல்மாகாண வடக்கு குற்ற விசாரணைப் பிரிவு முன்னெடுத்துள்ளது. கைது செய்யப்பட்ட இராணுவ அதிகாரி, கைது செய்யப்படும் தருணத்தில் முல்லைத்தீவு — மல்லாவி பகுதியில் உள்ள இராணுவ முகாமின் கட்டளை அதிகாரியாக பணியாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது

விசாரணைகளின் போது குறித்த அதிகாரி கணேமுல்ல கமாண்டோ படைப்பிரிவில் பணியாற்றிய காலத்தில் T-56 துப்பாக்கிகளுக்கான 260 தோட்டாக்களை, இரண்டு முறை, மொத்தம் ரூ. 6.5 இலட்சத்திற்கு கமாண்டோ சலிந்துவுக்கு விற்றுள்ளார் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதனுடன் தொடர்புடைய மேலும் இரண்டு குற்றச்சாட்டுகளும் அந்த அதிகாரிக்கு எதிராக உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட அவர், மேலதிக விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (CID) அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான விசாரணைகள் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## பேரினவாதப் பிரதிநிதிகளை அநுர தண்டிக்க வேண்டும்

காங்கேசன்துறையிலிருந்து கோட்டைக்கு செல்லும் மதியம் 1.30 புகையிரதத்தில் முன்பதிவு செய்த நால்வர் யாழ்ப்பாணத்திலிருந்த ஏறியிருக்கின்றனர். ஆனால் அவர்கள் முன்பதிவு செய்து பயணச்சீட்டுக்களை பெற்றிருந்த ஆசனங்களில் காங்கேசன் துறையிலிருந்து நான்கு சிங்களவர்கள் அமர்ந்து வந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் முன்பதிவு செய்த நான்கு தமிழர்களும் பயணச்சீட்டைக் காட்டி அது தம்மால் முன் பதிவு செய்யப்பட்டது எனவும், ஆசனத்தை விட்டுத் தருமாறு கேட்டபோது தாமும் முன்பதிவு செய்து தான் புகையிரதத்தில் பயணிக்கிறோம் எனவும் தாம் முன்பதிவு செய்த ஆசனங்கள் வேறொரு பெட்டியில் இருப்பதாகவும், தமிழர் நால்வரும் அந்த ஆசனங்களில் அமர்ந்து வருமாறும் கூறியிருக்கின்றனர்.

தாம் முன்பதிவு செய்துள்ள ஆசனத்தை தம்மிடமே ஒப்படைத்து விட்டு நீங்கள் முன்பதிவு செய்த ஆசனங்களுக்கே சென்று அமருங்கள் என யாழ்ப்பாணத்தவர்கள் கோரிய போதும் அதற்கு சிங்களவர்கள் செவிசாய்க்கவில்லை.

இதனையடுத்து புகையிரத பரிசோதகர்களிடம் இந்த விடயத்தை பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்தபோது சாவகச்சேரி புகையிரத நிலையத்தில் புகையிரதம் நிறுத்தப்பட்டு சிங்களவர்களை அவர்கள் முன்பதிவு செய்த ஆசனத்தில் சென்று அமருமாறு புகையிரத பரிசோதகர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அதனை ஏற்காத சிங்கள பயணிகள், தாம் அரசியல் செல்வாக்குடையவர்கள் என்றும் தம்மோடு பகைத்துக் கொண்டு யாரும் புகையிரத த்தில் பயணித்து கொழும்பு வரமுடியாது எனவும் அச்சுறுத்தியுள்ளனர். இந்தப் பிரச்சினைகளால் 30நிமிடம் வரை சாவகச்சேரி புகையிரத நிலையத்தில் நிறுத்தி வைக்ககப்படதாகவும், சிங்கள பயணிகள் அடாத்தாக அமர்ந்த ஆசனங்களிலேயே தொடர்ந்தும் பயணம் செய்வதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

# சிங்கள தேசத்தைப் பாதுகாத்த "தேசத் தந்தை"யை பாதுகாக்க சிங்கள மக்கள ஏன் கிளர்ந்தெழவில்லை?

தேசத்தை பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து மீட்டதாக இதுநாள் வரை பெருமை பேசி வந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச 11 செப் 2025 அநுர அரசால் கொழும்பிலிருந்தே துரத்தப்பட்டுள்ளார் என்று தான் கூற வேண்டும் என பேசிக் கொள்கின்றனர் பலர்.

இவ்வாறு அரசாங்கத்தினால் வெளியேற்றப்பட்ட தேசத்தை பாதுகாத்த தந்தையை மீட்க சிங்கள மக்கள் ஏன் கிளர்ச்சி செய்யவில்லை என்பது வியப்பாக உள்ளது எனவும் கூறுகின்றனர் அவர்கள்.

பயங்கரவாதம், புலம்பெயர் தமிழர்கள், தேச பாதுகாப்பு என இதுநாள்வரை பூ ச்சாண்டி காட்டி இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக இந்த நாட்டை தனது கைக்குள் வைத்திருந்த ஒரு தலைவருக்கு இன்று அரசியல் செய்ய தலைநகரில் ஒரு இடம் இல்லை. இன்று தனது சொந்த இடமான ஹம்பாந்தோட்டைக்கு குடிபெயர்ந்து விட்டார் அவர்.

சிங்கள மக்களை தனது கைக்குள் எப்போதும் மேற்சொன்ன விடயங்களை காட்டி இவற்றின் மூலம் புலி வரப்போகிறது என்று கூறி ஆட்சியும் அதிகாரத்தையும் அரச சுகபோகங்களையும் ஆண்டு வந்த அவருக்கு அரசாங்கம் சட்டமியற்றிய பின்னர்தான் வெளியேற வேண்டும் என்ற நினைப்பு வந்து வெளியேறுவதாக அறிவித்த போதிலும் எங்கே போயினர் அவரை ஆட்சிக் கட்டிலில் ஏற்றிய சிங்கள மக்கள்? என கேட்கின்றனர் அவர்கள்

ரணில் விக்ரமசிங்கவை நீதிமன்றம் விளக்கமறியலில் வைத்த போது இந்த நீதிமன்ற உத்தரவையும் மதிக்காது ஒன்று சேர்ந்த எதிரணிகள் நீதிமன்ற வளாகத்திற்கு முன்பாக தமது ரணில் விசுவாசத்தை காட்டிய போதிலும் மகிந்த வெளியேறிய போது ஏன் காட்டவில்லை என கேட்போரும் உள்ளனர்.

இதற்குத் தான் தமிழ் பழமொழி ஒன்று உள்ளது. அரசன் அன்று அறுப்பான் தெய்வம் நின்று அறுக்கும் என்று. இது முன்னாள் அரச தலைவர் மகிந்தவிற்கும் பொருந்துமோ என சிலர் கேட்பதிலும் நியாயம் இருப்பதாகவே தெரிகிறது.

## கொழும்பில் மஹிந்தாவின் வீடு

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தொடர்ந்து தமக்கு கொழும்பில் தங்க வீடு இல்லை எனக் கூறி வந்த நிலையில், இப்போது அது முற்றிலும் பொய் எனும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சமூக ஊடகங்களில் வெளியான ஆதாரங்களின்படி, மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது மனைவி ஷிராந்தி ராஜபக்ச ஆகியோர், கொழும்பில் சுமார் ரூ. 4000 லட்சம் (400 மில்லியன்) மதிப்புடைய ஆடம்பர இல்லத்தை பெற்றிருப்பது தெரியவந்துள்ளது. இந்த வீடு ஆரம்பத்தில் தொழிலதிபர் ப்ரபாத் ரவீந்திர நானாயக்காரவின் உடமையாக காணப்பட்டதாக கூறப்படுகிறது.



2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின் அப்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் மூலம், எதிர்க் கட்சி தலைவராக இருந்த மகிந்த ராஜபக்சவுக்கு தற்காலிகமாக இவ்வீடு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் பின்னர் வீடு திருப்பிக் கொடுக்குமாறு பலமுறை கோரப்பட்ட போதிலும், மகிந்த ராஜபக்ச அதனை மறுத்து, எனது அதிர்ஷ்ட இல்லம் எனக் கூறி தொடர்ந்தும் பயன்படுத்தி வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதனை தொடர்ந்து 2005ஆம் ஆண்டு அவர் ஜனாதிபதியாக பதவி ஏற்ற பின், 2013 ஆம் ஆண்டு, இந்த வீடு அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி, அவரது மனைவி ஷிராந்தி ராஜபக்ச மேரி லூட்ஸ் விக்ரமசிங்க என்ற பெயருக்கு சட்டபூர்வமாக எழுதப்பட்டதாக தெரிய வருகிறது. இந்த நிலையில், வீடு வாங்கப்பட்டதாக கூறப்பட்டாலும், அதற்குரிய உரிமையாளருக்கு பணம் வழங்கப்படவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில், மகிந்த ராஜபக்சவும் அவரது குடும்பமும் கொழும்பில் வசிப்பதற்கு பிரமாண்டமான வீடு வைத்திருப்பது தெளிவாக உறுதி செய்யப்படுகிறது. இதன்படி கொழும்பில் வீடு இல்லை என தொடர்ந்து மக்களை ஏமாற்றி கூறியமை பொய் எனவும் மக்கள் இதை உணர வேண்டிய அவசியம் உள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

# ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் மாகாணசபை அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை வலியுறுத்திய இந்தியா

நாட்டின் அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துதல், மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடாத்துதல் மற்றும் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை மேற்கொள்ளல் என்பவற்றுக்கு நடவடிக்கை எடுக்குமாறு பேரவையில் இலங்கையை வலியுறுத்திய இந்தியா, சகலரையும் உள்ளடக்கிய அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு மற்றும் நியாயமான நல்லிணக்க செயன்முறை என்பன நிலையான அமைதிக்கு வழிகோலும் எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்தோடு சகல தரப்பினரையும் உள்ளடக்கிய அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மற்றும் நியாயமான நல்லிணக்க செயன்முறை என்பன நிலையான அமைதிக்கு வழிகோலும் எனவும் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர் 08 செப் 2025 திங்கட்கிழமை ஜெனீவாவில் ஆரம்பமானது. தொடக்க அமர்வில் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கினால் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை தொடர்பான அறிக்கை மீதான விவாதத்தில் கருத்துரைத்த இந்தியப் பிரதிநிதி,

2009ஆம் ஆண்டு இலங்கையில் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் நாட்டைக் மீளக் கட்டியெழுப்புவதற்கும், மக்களை மீள்குடியமர்த்துவதற்கும் இந்தியா தொடர்ந்து ஆதரவு வழங்கிவந்ததாக சுட்டிக்காட்டினார்.

அதேபோன்று 2022ஆம் ஆண்டு இலங்கை மிகத்தீவிர பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்த வேளையில் இந்தியாவினால் வழங்கப்பட்ட உதவிகள் தொடர்பில் நினைவு கூர்ந்த அவர், 2024 இல் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டமையும், 2025 ஏப்ரலில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டமையும் இருநாடுகளுக்கும் இடையிலான வலுவான இரு தரப்பு நல்லுறவைக் காண்பிப்பதாகக் குறிப்பிட்டார்.

அதேவேளை இலங்கையின் ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையுடன் தமிழ்மக்களின் அபிலாஷைகளான சமத்துவம், நீதி மற்றும் கௌரவத்தை இந்தியா எப்போதும் வலியுறுத்தி வருவதாகத் தெரிவித்த அவர், நாட்டின் அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறும், மாகாணசபைத்தேர்தல்களை உடனடியாக நடாத்துமாறும், அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்துவதாகக் கூறினார். அத்தோடு சகல தரப்பினரையும் உள்ளடக்கிய அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு மற்றும் நியாயமான நல்லிணக்க செயன்முறை என்பன நிலையான அமைதிக்கு வழிகோலும் எனவும் அவர் குறிப்பிட்டார்.



அது இவ்வாறிருக்க அதிகாரப் பகிர்வு குறித்து மீண்டும் வலியுறுத்தியதற்கும், தமிழ் சமூகத்தின் அவாவான சமத்துவம், நீதி, மாண்பு, சமாதானம் ஆகியவற்றுக்காக ஆதரவு வழங்கியதற்கும் இந்திய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இந்தியா, மாகாண சபைத் தேர்தல்கள் விரைவில் நடத்தப்பட வேண்டும் என்றும், அதிகாரப் பகிர்வு அர்த்தமுள்ளதாக இருக்க வேண்டும் என்றும் அழைத்துள்ளது.

மாறாக, இலங்கை அரசாங்கம் தன் எழுத்திலான பதிலில் எல்லை நிர்ணயிப்பு செயல்முறை முடிந்த பிறகு மட்டுமே மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படும் என்ற நிலை எடுத்துள்ளது. இது பல ஆண்டுகள் தேர்தலை தள்ளிவைக்கும் எண்ணப்பாட்டை காட்டுகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு அரசாங்கம் அளித்த வாக்குறுதியை மீறி அவர்களின் வாக்குரிமையை தொடர்ந்து உதாசீனப்படுதலை காட்டி நிற்கிறது. எமது நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ராசமாணிக்கம் முன்வைத்த தனி நபர் சட்ட மூலத்திற்கு அரசாங்கம் உடனடியாக ஒப்புதல் வழங்கி, மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.என தெரிவிக்கப் பட்டுள்ளது.

# செம்மணி மனிதப் படுகொலை:- புதிய தகவல்களை வெளிப்படுத்துவேன்! மரணதண்டனை விதிக்கப்பட்ட சோமரத்னவின் மனைவி விஜேவிக்ரம தெரிவிப்பு

செம்மணி மனிதப்படுகொலை தொடர்பில் இதுவரையில் வெளிப்படுத்தாத விடயங்களை சகல ஊடகங்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும், நீதித் துறைக்கும் வெளிப்படுத்துமாறு தனது கணவரான சோமரத்ன ராஜபக்ஷ வழங்கிய ஆலோசனைக்கு அமைவாக அவ்வெளிப்படுத்தல்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவிருப்பதாகக் குறிப்பிட்டு கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தினால் தீர்ப்பளிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவின் மனைவி எஸ்.சி.விஜேவிக்ரம ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு மீண்டும் ஒரு கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

பாடசாலை மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் நீதிமன்றத்தினால் பிரதான குற்றவாளியாகப் பெயரிடப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, அப்படுகொலை குறித்தும், செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் குறித்தும் தன்னிடம் கூறிய விடயங்களை உள்ளடக்கியும், இவ்விவகாரம் தொடர்பில் மீண்டும் சுயாதீன விசாரணையைக் கோரியும் அவரது மனைவி எஸ்.சி. விஜேவிக்ரம 10.07.2025 எனும் திகதியிடப்பட்ட கடிதமொன்றை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பி வைத்திருந்தர்ர. அவற்றின் பிரதிகள் பிரதமர் ஹரினி அமரசூரிய மற்றும் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

அக்கடிதத்தில் 7ஆம் இராணுவக் காலாட்படைத் தலைமையகத்தில் படுகொலை செய்யப்பட்டு செம்மணி சோதனைச்சாவடிக்குக் கொண்டு வரப்பட்ட கிருஷாந்தி குமாரசுவாமியினதும், அவரது குடும்பத்தினரினதும் சடலங்களை கப்டன் லலித் ஹேவாகேயின் ஆணைக்கு அமைவாகப் புதைத்ததைத் தவிர தனது கணவர் வேறெந்தக் குற்றத்தையும் புரியவில்லை எனவும், செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று முன்னெடுக்கப்படும் பட்சத்தில் அதில் சாட்சியமளிப்பதற்கு சோமரத்ன ராஜபக்ஷ தயாராக இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.



அதனைத் தொடர்ந்து சோமரத்ன ராஜபக்ஷ மேலும் பல வெளிப்படுத்தல்களைச் செய்திருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த ஜூலை மாதம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் தொடர்பில் இதுவரையில் எந்தவொரு பதிலும் கிட்டாததன் காரணமாக, சோமரத்ன ராஜபக்ஷ மீண்டும் தனது மனைவியின் ஊடாக கடந்த வாரம் ஜனாதிபதிக்கு மற்றுமொரு கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்.

அக்கடிதத்தில் கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை விவகாரத்தில் தனது வகிபாகம், தான் உள்ளடங்கலாக மரண தண்டனை விதிக்கப்பட்ட ஏனைய 5இராணுவத்தினரும் திட்டமிட்டு சிக்க வைக்கப்பட்டமை, இவ்விவகாரத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் வகிபாகம் என்பன உள்ளடங்கலாக சோமரத்ன ராஜபக்ஷவினால் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திலும், முன்னைய வெளிப்படுத்தல்களிலும் குறிப்பிட்டிருந்த விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று செம்மணி மனிதப்படுகொலை தொடர்பில் இதுவரையில் வெளிப்படுத்தாத விடயங்களை சகல ஊடகங்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும், நீதித்துறைக்கும் வெளிப்படுத்துமாறு தனது கணவரான சோமரத்ன ராஜபக்ஷ வழங்கிய ஆலோசனைக்கு அமைவாக அவ்வெளிப்படுத்தல்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி 1996ஆம் ஆண்டில் வடக்கில் இடம் பெற்ற செம்மணி மனிதப்படுகொலை, வடக்கில் சித்திரவதைக்கூடங்கள் நடாத்தப்பட்ட விதம், அவற்றுடன் தொடர்புடைய இராணுவ உயரதிகாரிகள் தொடக்கம் ஜனாதிபதி வரை அவற்றை செயற்படுத்திய சகல அதிகாரிகளினதும் பெயர் விபரங்கள் போன்றவற்றை இந்நாட்டு மக்கள் தெரிந்து கொள்ளக் கூடிய வகையில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இவ்விவகாரம் தொடர்பில் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமித்து விசாரணைகளை முன்னெடுக்குமாறும், சம்பந்தப்பட்ட சகல அதிகாரிகளையும் சட்டத்தின் முன் நிறுத்துமாறும், பாதிக்கப்பட்ட யாழ் மக்களுக்கான நீதியை நிலை நாட்டுமாறும் அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## பிரிட்டன் வரலாற்றில் முதன் முறையாக முஸ்லிம் பெண்மணி உள்துறைச் செயலாளராக நியமனம்

பிரிட்டன் அரசியல் வரலாற்றில் முதல் முறையாக, ஒரு முஸ்லிம் பெண் உள்துறைச் செயலாளராகப் பதவி ஏற்றுள்ளார். பிரிட்டன் பிரதமர் கெய்ர் ஸ்டார்மரின் அமைச்சரவை மறுசீரமைப்பின் ஒரு பகுதியாக, பாகிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்த ஷபானா மஹ்மூத் இந்த முக்கியப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தின் மூலம், பிரிட்டனின் உள்நாட்டுப் பாதுகாப்பு, குடியேற்றக் கொள்கைகள் மற்றும் காவல் துறையின் மிக முக்கியமான துறைகளை ஷபானா மேற்பார்வையிடுவார். பாகிஸ்தானில் இருந்து இங்கிலாந்தின் பர்மிங்காமுக்குக் குடிபெயர்ந்த பெற்றோருக்கு 1980 இல் பிறந்த ஷபானா,



(20ம் பக்கம் பார்க்க)

# ரவிராஜ் படுகொலையில் மகிந்த தரப்பின் முக்கிய சகாவான ஐஸ் வியாபாரி?



தென்னிலங்கையின் மித்தெனியவில் கண்டு பிடிக்கப்பட்ட இரசாயனக் கிடங்கு தொடர்பாக கைது செய்யப்பட்ட மகிந்த தரப்பின் நெருங்கிய சகா முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் படுகொலை சந்தேக நபர் என தெரியவந்துள்ளது.

முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினரான பியல் மனம்பேரி நாரஹேன்பிட்டியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ்ஜை சுட்டுக் கொன்றதாக சந்தேகத்தின் பேரில் அப்போது கைது செய்யப்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

அவர் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் பலருடன் மிகவும் நெருக்கமான தொடர்புடையவர் எனவும் குறிப்பிடப்படுகின்றது. குறிப்பாக கோத்தபாய மற்றும் நாமல் ராஜபக்சவின் நெருங்கிய சகாவென அடையாளம் காணப்பட்டவரெனவும் தெரியவந்துள்ளது.

தென்னிலங்கை மித்தெனிய, தலாவ பகுதியில் புதைக்கப்பட்ட நிலையில் ஐஸ் போதைப்பொருள் தயாரிப்பதற்காக நாட்டிற்கு கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படும் பொருட்கள் அடங்கிய இரண்டு கொள்கலன்கள் குறித்து அமெரிக்க புலனாய்வு நிறுவனம் நாட்டிற்கு முன்கூட்டியே அறிவித்ததாக காவல்துறை தரப்பு தகவல் தெரிவித்துள்ளது.

கொள்கலன் எண்களுடன் கூடிய உளவுத்துறை தகவலின் படி, இரண்டு கொள்கலன்களும் ஈரானின் தெஹ்ரானில் இருந்து இந்த நாட்டிற்கு அனுப்பப்பட்டதாகவும், அவற்றில் போதைப்பொருள் இருந்ததாகவும் புலனாய்வு தகவலில் குறிப்பிடுகிறது. இந்நிலையில் கொள்கலன்களை தருவித்ததாகவே பியல் மனம்பேரி கைதாகியுள்ளார்.

# ஐ.நா.வின் தொழில் நுட்ப உதவியுடன் பொறுப்புக் கூறல் - விஜிதஹேரத் உறுதி

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தொழில்நுட்ப உதவியுடன், உள்நாட்டு பொறிமுறை மூலம் மனித உரிமைகள் மீறல்களுக்கு பொறுப்புக் கூறலைத் தொடர இலங்கை அரசாங்கம் தயாராக உள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹெரத், ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஸ்தானிகர் வோல்கர் டர்க்கிற்குத் தெரிவித்துள்ளார்.

ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 60வது கூட்டத்தொடரில் தற்போது கலந்து கொண்ட அமைச்சர் விஜித ஹெரத், உயர் ஸ்தானிகர் டர்க்கை சந்தித்து கலந்துரையாடினார். இதன்போது உயர் ஸ்தானிகர் வோல்கர் டர்க் கூட்டத் தொடரில் சமர்ப்பித்த அறிக்கை குறித்து ஆழமான விவாதம் நடத்தப்பட்டதாக வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் இலங்கையின் நிலைப்பாடு குறித்து அமைச்சர், இதன்போது விரிவான விளக்கத்தை வழங்கியுள்ளார். இலங்கையில் புதிய அரசாங்கம் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் ஒரு திருப்பு



முனையை ஏற்படுத்தும் என்றும், கடந்த கால மனித உரிமை மீறல்களைக் கையாள ஒரு முறையான சுயாதீன விசாரணை மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறையை நிறுவுவதற்கான வாய்ப்பை இலங்கை இழக்காது என்றும் உயர் ஸ்தானிகர் நம்பிக்கை வெளியிட்டதாக வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

# எலோன் மஸ்க்கிற்கு 1 டிரில்லியன் டொலர் சம்பளம்!



அமெரிக்க மின்சார கார் தயாரிப்பாளரான டெஸ்லாவின் இயக்குநர்கள் குழு, கடந்த வெள்ளிக்கிழமை எலான் மஸ்க்கின் ஊதியத் தொகுப்பை வெளியிட்டது. இது எலோன் மஸ்க்கை உலகின் முதல் டிரில்லியனராக மாற்றக்கூடும். அமெரிக்க பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையத்தின் நிரப்புதலின் படி, ஒரு தசாப்தத்தில் 12 தனித்தனி தொகுப்புகளில் டெஸ்லாவின் மொத்த பங்குகளில் 12வீதத்தை மஸ்க் சம்பாதிக்க முடியும்.

ஃபோர்ப்ஸின் நிகழ்நேர பில்லியனர் டிராக்கரின்படி, மஸ்க் ஏற்கனவே உலகின் மிகப் பெரிய பணக்காரர் ஆவார் இவரது நிகர மதிப்பு கூ437.8 பில்லியன் ஆகும். இது ஆரக்கிளின் லாரி எலிசன், மெட்டாவின் மார்க் ஜுக்கர்பெர்க் மற்றும் அமேசானின் ஜெஃப் பெசோஸை விட முன்னணியில் உள்ளது. அவர் தற்போது நிறுவனத்தின் 13வீத பங்குகளை கட்டுப்பாட்டில் வைத்துள்ளார். மேலும் 6.7வீத சட்டப் பிரச்சினையில் உள்ளது. இந்தத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டால், அவர் மேலும் ஏழு ஆண்டுகள் நிறுவனத்தில் நீடித்தால் மஸ்க் நிறுவனத்தின் குறைந்தது 25வீத பங்குகளை கட்டுப்படுத்துவார். இந்த திட்டம், மஸ்க் தொடர்ந்து கேட்டு வரும், ஆட்டோமொபைல் உற்பத்தியாளர் மீது அவர் கொண்டுள்ள கட்டுப்பாட்டை அதிகரிப்பதைக் குறிக்கிறது . 2018 ஆம் ஆண்டு அவரது 56 பில்லியன் டாலர் சம்பள தொகுப்பு தொடர்பாக சட்டப் போராட்டம் நடந்து வரும் நிலையிலும் இது சாத்தியமாகும்.

டெஸ்லாவில் அவரது பங்கைத் தவிர, ஸ்பேஸ்எக்ஸ் விண்வெளி தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் நிறுவனர் மற்றும் எக்ஸ் சமூக ஊடக தளத்தின் உரிமையாளராகவும் மஸ்க்கின் கவனம் சிதறடிக்கப்பட்டுள்ளது. அவர் முன்னர் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் ஆலோசகராகப் பணியாற்றினார். ஆனால் மே மாதம் நிர்வாகத்தை விட்டு வெளியேறினார்.


## ஈஸ்வரன் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன்/மணமகள் தேவை யெனில் எம்மமுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவு இல K505 1987இல் பிறந்த மணமகள் பட்டதாரி CANADA Cityzen கனடாவிலுள்ள மணமகனை எதிர்பார்க்கின்றார்

தொடர்புகளுக்கு:-1416 771 6013 Canada


# நேபாளப் போராட்டக்காரர்கள் இடைக்காலப் பிரதமராக சுசீலா கார்கியைத் தேர்வு!



ஊழல் முறைகேடுகள், வேலையின்மை, கருத்துச் சுந்திரத்துக்கு கட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து நேபாளத்தில் அரசுக்கு எதிராக வெடித்த இளைஞர்களின் போராட்டத்தால் பதற்றம் நீடித்து வருகிறது.

நேபாளத்தில் 'ஜென் ஸீ' இளைஞர்கள் நடத்திய தீவிர போராட்டங்களால் பிரதமர் கே.பி.சர்மா ஒலி (73) தலைமையிலான கம்யூனிஸ்ட் அரசு கவிழ்ந்தது. அவருடன் சேர்ந்து, நாட்டின் அதிபராக இருந்த ராம்சந்திர பவுடேலும் ராஜினாமா செய்தார். இதனால் அந்நாட்டில் அரசியல் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

நேபாளத்தில் நிலவி வரும் அரசியல் பதற்றமான சூழ்நிலை காரணமாக சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. மேலும், நாட்டின் தலைநகர் காத்மாண்டு உட்பட பல்வேறு பகுதிகளில் வன்முறைச்சம்பவங்கள் தொடர்கின்றன. ஊழல் அரசியல்வாதிகளின் வசிப்பிடங்களைக் குறி வைத்து தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேபாளத்தில் அமைதி திரும்பாத நிலையில், பல்வேறு நகரங்களில் ஊரடங்கு உத்தரவு அமலில் உள்ளது. காத்மாண்டு முழுவதும் போலீஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு, கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இடைக்கால பிரதமர் சுசீலா கார்கி? — நேபாளத்தில் போராட்டம் நடத்தி வரும் இளைஞர்கள் பிரதிநிதியினரை, உச்ச நீதிமன்ற பார் அசோசியேஷன் செயலர் புதன்கிழமை சந்தித்துப் பேசினார். 4 மணி நேரம் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றது. அப்போது, சுசீலா கார்கியை, இடைக்கால பிரதமராக நியமிக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்ததாக பார் அசோசியேஷன் செயலர் தெரிவித்தார்.

எனவே நேபாள உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியான சுசீலா கார்கி, நேபாளத்தின் இடைக்கால பிரதமராக விரைவில் நியமிக்கப்படலாம் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன. அரசியல் பின்புலம் ஏதுமில்லாதவர், நடுநிலையாகவும் நம்பகத்தன்மையுடன் செயல்படக் கூடியவர் என்ற அடிப்படையில் அவரை 'டிக்' செய்ததாக 'ஜென் ஸீ' போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

போராட்டக்காரர்களில் விருப்பப்படி, இடைக்கால பிரதமர் பொறுப்பை ஏற்க முன்வந்துள்ள சுசீலா கார்கி, நேபாளத்திலுள்ள பிராட் நகரில் 1952-ல் பிறந்தார்.

இவர் தனது முதுநிலை படிப்பை இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலம் வாராணசியிலுள்ள பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் படித்துள்ளார். அதன் பின்னர் நேபாளத்தின் திரிபுவன் பல்கலைக்கழகத்தில் சட்டப்படிப்பை படித்துள்ளார்.

கடந்த 2013-ம் ஆண்டு முதல் 2017 வரை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்த சுசீலா கார்கி, தேர்தல் விவகாரம் உள்ளிட்ட முக்கியத்துவம் வாய்ந்த பல வழக்குகளில் தீர்ப்பு வழங்கியவர்.

நீதித் துறை மூலம் ஜனநாயகத்தைக் காப்பவர் என்று போற்றப்பட்டவர். இவருக்கு எதிராக நேபாள பாராளுமன்றத்தில் பதவி நீக்க தீர்மானம் கொண்டு வரப்பட்டு, மக்களின் அழுத்தத்தால் அது கைவிடப்பட்ட வரலாறும் உண்டு.

# கூட்டாட்சி அரசியல் முறைமை பற்றி இலங்கை அரசியல்வாதிகளுக்கு தெளிவூட்ட சுவிஸ் அரசாங்கம் முயற்சி!

இலங்கையின் ஆளும் மற்றும் எதிர்க் கட்சிகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் உறுப்பினர்கள் 13 பேரை சுவிட்ஸர்லாந்துக்கு அழைத்துச் சென்று, அந்நாட்டின் கூட்டாட்சி அரசியல் முறைமை மற்றும் தேசிய ஒருமைப்பாடு வலுவாக்கம் என்பன பற்றி விளக்கமளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கும் அந்நாட்டு அரசாங்கம், அரசியல் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கு உத்தேசித்திருக்கும் இலங்கைக்கு இந்நகர்வு பெரிதும் பயனுள்ளதாக அமையும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் 2026 ஆம் ஆண்டுடன் இலங்கைக்கும் சுவிட்ஸர்லாந்துக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஆரம்பமாகி 70 வருடங்கள் நிறைவடைகின்றன. அதனை முன்னிட்டு இலங்கை – சுவிட்ஸர்லாந்து பாராளுமன்ற நட்புறவு சங்கத்துடன் கூட்டிணைந்து சுவிட்ஸர்லாந்து அரசாங்கம் மேற்படி செயலமர்வை ஏற்பாடு செய்துள்ளது.

இம்மாதம் 14 – 21 ஆம் திகதி வரை சுவிட்ஸர்லாந்தில் நடைபெறவுள்ள இச்செயலமர்வில் பங்கேற்பதற்கு இலங்கையின் ஆளும் மற்றும் எதிர்க் கட்சிகளுக்கு அந்நாட்டின் வெளிவிவகாரங்களுக்கான கூட்டாட்சித் திணைக்களத்தின் சமாதானம் மற்றும் மனித உரிமைகள் பிரிவின் செயலாளரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து அக்கட்சிகளால் உறுதிப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சரும் இலங்கை – சுவிட்ஸர்லாந்து பாராளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவருமான கலாநிதி உபாலி பன்னிலகே, தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர் முனீர் முலஃப்பர், பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை – சுவிட்ஸர்லாந்து பாராளுமன்ற நட்புறவு சங்கத்ததின் செயலாளர் சந்திம ஹெட்டியாராச்சி, பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளருமான கலாநிதி நிஹால் அபேசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான நிலாந்தி கொட்டஹச்சி மற்றும் சமன்மலி குணசிங்க ஆகியோரும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவலவும், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கமும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அதன் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான தலதா அத்துகோரளவும், ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் சார்பில் அதன் ஊடகப்பேச்சாளர் சுரேஷ் பிரேமசந்திரனும், மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் டபிள்யூ .ரி.சி.பத்மா மஞ்சுளவும், தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் யாழ்.மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருக்கான



ஒருங்கிணைப்பு செயலாளருமான கபிலன் சுந்தரமூர்த்தியும் இதில் பங்கேற்கவுள்ளனர்.

சுவிட்ஸர்லாந்தில் 8 நாட்கள் நடைபெறவுள்ள இச்செயலமர்வின் போது சுவிட்ஸர்லாந்தின் அரசியல் முறைமை மற்றும் இருதரப்பு உறவுகள், சுவிட்ஸர்லாந்தின் கூட்டாட்சி முறைமையை ஆழமாகப் புரிந்து கொள்ளல் ஆகிய தலைப்புக்களில் இலங்கை அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு விரிவான தெளிவூட்டல்கள் வழங்கப்படவிருப்பதுடன் முக்கிய கட்டமைப்புக்களுக்கான களவிஜயங்கள் மற்றும் உயர்மட்ட சந்திப்புக்கள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

இச்செயலமர்வானது சுவிட்ஸர்லாந்தின் அரசியல் முறைமையை ஆழமாகப் புரிந்து கொள்வதற்கும், ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களில் ஈடுபடுவதற்குமான வாய்ப்பை இலங்கை அரசியல்வாதிகளுக்கு வழங்கும் என நம்பிக்கை வெளியிட்டுள்ள இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதுவர் சிரி வோல்ற், இலங்கை அரசியல் மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கு உத்தேசித்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் சுவிஸ் அரசியல் முறைமையின் முக்கிய கூறுகளை உள்வாங்குவதற்கும், பல்லின மற்றும் பன்மொழி சமூகங்களுக்கு மத்தியில் தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்புவது குறித்து அறிந்துகொள்வதற்கும் இது உதவும் எனத் தெரிவித்துள்ளார்.




# வெளிப்படையான விசாரணைக்கு சர்வதேச நீதிப் பொறிமுறை இடைஞ்சல் விளைவிக்குமா?

கட்டுரையாளர்:- பனங்காட்டான்



தமிழின அழிப்பு என்ற நீள்வரலாற்றில் ஓரங்கமே செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழிகள். இங்கிருந்து மீட்கப்படும் மனித எச்சங்களே அரச பயங்கரவாதத்தின் அடையாளம். புதைகுழிகளுக்கு வெளிப்படையான விசாரணையை அறிவிப்பவர்கள் சர்வதேச நீதிப்பொறிமுறையை எதற்காக மறுக்க வேண்டும்.

உலகில் பலவிதமான விளையாட்டுகள் உண்டு. அவற்றுள் சில சர்வதேச பிரபல்யம் பெற்றவை. துடுப்பாட்டம் எனப்படும் கிரிக்கெட் இதில் தனித்துவமானது.

இவ்வாறு குறிப்பிடுவதற்கு காரணிகள் பல உண்டு. ஒருநாள் போட்டியிலிருந்து ஐந்து நாட்கள் வரையான டெஸ்ட் போட்டி என இவைகளை வகைப்படுத்தலாம். மற்றெல்லா விளையாட்டுகளையும் விட துடுப்பாட்டத்திலுள்ள சிறப்பு, போட்டி நடைபெறும் மைதானத்தில் இதற்கு மட்டுமே ''ஸ்கோர் போர்ட்'' என்று அழைக்கப்படும் ஓட்ட (ரன்ஸ்) விபரம் உடனுக்குடன் பார்வைக்கு தெரியும் வகையில் அறிவிக்கப்படும்.

ஒரு பந்து வீச்சுக்கு ஒரு ஓட்டமா, இரண்டு ஓட்டங்களா, பௌண்டரி எனப்படும் நான்கு ஓட்டங்களா அல்லது சிக்ஸர் எனப்படும் ஆறு ஓட்டங்களா என்று ஸ்கோர் போர்ட் மாறிக் கொண்டேயிருக்கும். இதனால் ஒவ்வொரு நாளும் ஆட்ட முடிவில் அன்றைய ஸ்கோர் எவ்வளவு என்பது தெரிய வரும்.

செம்மணியிலுள்ள அரியாலை சித்துப்பாத்தி மயான மனித புதைகுழியிலிருந்து தினமும் மீட்கப்படும் மனித எலும்புக் கூடுகளின் எண்ணிக்கை கிரிக்கெட் ஸ்கோர் பாணியில் தினமும் ஊடகங்கள் ஊடாக வெளிவந்து கொண்டிருக்கிறது. மனதுக்கு இறுக்கமாகவும் துயரமாகவும் இருக்கும் இந்த எண்ணிக்கை இப்போது நாளாந்த செய்தியாகிவிட்டது.

அரச பயங்கரவாதத்தின் கூலிப்படைகளாக செயற்பட்ட ராணுவத்தினர் நடத்திய படுகொலைகளின் எண்ணிக்கை ஒவ்வொருவரது மனதையும் பதைபதைக்க வைக்கிறது. இன்னும் எத்தனை மனித எலும்புக்கூடுகள் மீட்கப்படப் போகின்றனவோ என்ற அச்சம் எல்லோர் மனதிலும் குடிகொண்டுள்ளது.

இரண்டு கட்டங்களாக ஐம்பத்திமூன்று நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணியில் ஒவ்வொரு நாளும் மீட்கப்படும் மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை உடனடியாக அறிவிக்கப்படுகிறது. இந்த மாதம் ஐந்தாம் திகதி வரை இதன் எண்ணிக்கை 240 ஆகியுள்ளது.

உயரமானவர்கள், சற்று குட்டையானவர்கள், குழந்தைகள் என்று இவை காணப்படுகின்றன. பாடசாலைச் சிறாரின் பாவனைக்கான உபகரணங்கள், பால்போச்சிகள், புத்தகப் பைகள் என்பனவும் எலும்புகளோடு கிடக்கக் காணப்பட்டன. ஒரு குழந்தையின் எலும்புக்கூடு இன்னொரு எலும்புக் கூட்டின் மார்போடு அணைந்தவாறு மீட்கப்பட்டது.

உயரமான ஒரு எலும்புக 'கூட்டுக்கு அருகே சற்று உயரம் குறைந்த எலும்புக்கூடொன்று மீட்கப்பட்டது. இரண்டு எலும்புக்கூடுகளுக்கும் மேலே குறுக்காக இன்னுமொரு எலும்புக்கூடு இருந்தது. கடந்த வாரம் மீட்கப்பட்ட ஒரு எலும்புக்கூடு கால்களை மடித்து உட்கார்ந்த நிலையில் காணப்பட்டது. ஒருவர் நிஷ்டையில் இருப்பது போன்ற காட்சி இது.

இனியும் மீட்கப்படும் எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை எந்தளவுக்கு செல்லும் என்பதை அங்கு பணியாற்றுபவர்கள் கூற முடியாதுள்ளனர். செம்மணியில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிரிசாந்தி வழக்கில் குற்றவாளியாக நிருபிக்கப்பட்ட இராணுவ கோப்ரல் ராஜபக்ச தெரிவித்த நானூறுக்கும் அதிகமான மனிதப் புதைகுழி சித்துப்பாத்தி தான் என்பது இப்போது அடையாளங்கள் ரீதியாக பார்க்கப்படுகிறது.

இந்தப் படுகொலைகளுக்கு உத்தரவிட்ட இராணுவ உயர் அதிகாரிகளின் பெயர்களும் ஓரளவுக்கு தெரிய வந்துள்ளது. எனினும், நீதிமன்றம் ஒன்றில் கோப்ரல் ராஜபக்ச அதனைத் தெரிவிக்கும் வரை அவர்கள் மீது அதிகார பூர்வமாக எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது போகலாம். சர்வதேச விசாரணை ஒன்றுக்கு இடமளிக்கப்பட்டால் இப்படுகொலை சம்பந்தமான சகல விபரங்களையும் தம்மால் வெளிப்படுத்த முடியுமென கோப்ரல் ராஜபக்ச தமது குடும்பத்தவர்கள் மூலம் அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளார். இதற்குச் சாதகமான பதில் எதுவும் இதுவரை இல்லை.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி அநுர குமர திஸ்ஸநாயக்க மனிதப் புதைகுழி இடத்தை நேரில் சென்று பார்வையிடலாமென அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்திருந்தார். ஆனால் அது நடைபெறவில்லை. எனினும் இது தொடர்பான தமது கருத்தை யாழ்ப்பாண நிகழ்வொன்றில் உரையாற்றும் போது அநுர குமர தெரிவித்தார். மனிதப் புதைகுழிகள் குறித்து வெளிப்படையாக விசாரணை நடைபெறுமென்று ஒரு வரியில் இவரது அறிவிப்பு வந்தது.

சொன்னவர் ஜனாதிபதி என்றபடியால் இவரது ஒரு வரி ஊடகங்களில் தலைப்புச் செய்தியானது. நீதவான் உத்தரவின் பேரில் அகழ்வுப்பணி இடம் பெறுவதாலும், அரச தரப்பு துறைசார் நிபுணர்கள் இதில் பங்கேற்க அனுமதிக்கப்பட்டிருப்பதாலும் பொதுவான வெளிப்படைத் தன்மை அங்கு ஏற்கனவே காணப்படுகிறது. அகழ்வுப் பணி முழுமையாக முடிந்த பின்னர், சர்வதேசப் பொறிமுறையின் கீழ் விசாரணைகள் நடைபெறுமெனவும், குற்றவாளிகள் நீதியின் முன்னால் நிறுத்தப்படுவர் எனவும் எந்த உறுதிப்பாட்டையும் அரச தரப்பில் இதுவரை எவரும் வழங்கவில்லை.

மனிதப் புதைகுழிகளை அகழும் பணியில் அரசதரப்பு இதுவரை எந்த முட்டுக்கட்டையையும் போடவில்லை. இந்தப் புதைகுழிகளுக்குப் பொறுப்பு மகிந்த ராஜபக்சவும், ரணில் விக்கிரமசிங்கவுமே என்று அமைச்சர் ஒருவர் பகிரங்கமாகக் குறிப்பிட்டதையும் இங்கு கவனிக்க வேண்டும்.

அதேசமயம் இனவாதம் கக்கும் கடற்படை முன்னாள் அதிகாரி சரத் வீரசேகர, முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில போன்றவர்களின் கருத்துகள் வேறாக உள்ளன. நாடு முழுவதும் மனிதப் புதைகுழிகள் உள்ளன. செம்மணிக்கு மட்டும் எதற்காக ஆய்வு நடத்த வேண்டுமென்று இவர்கள் கேட்கின்றனர். இவர்கள் கருத்தின்படி பார்க்கின் இலங்கையை மனிதகுழித் தீவு என்று அழைக்க வேண்டுமென ஆலோசனை கூறுவது போல இருக்கிறது. இவ்வாறாக ஏறுக்கு மாறாக கருத்துகள் வெளிவந்து கொண்டிருக்கும் வேளையில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு முக்கியமான பதினாறு பரிந்துரைகளை அரச உயர'மட்டத்துக்கு எழுத்து மூலம் வழங்கியுள்ளது. மனிதப் புதைகுழி விசாரணைகளில் எந்தச் சமயத்திலும் ராணுவத்தினரின் ஈடுபாட்டுக்கு அனுமதி அளிக்கக்கூடாதென ஆணைக்குழு கேட்டுள்ளது. இலங்கையின் பாதுகாப்பு அமைச்சருக்கும் இராணுவத் தளபதிக்கும் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக காணாமல் போனவர்களின் குடும்ப உறவினர்களையோ அல்லது எந்தவொரு உள்ளூர் அதிகாரிகளையோ அல்லது சிவில் சமூக பிரதிநிதிகளையோ எவரும் தொடர்பு கொள்ளக் கூடாதென அறிவுறுத்துமாறும் ஆணைக்குழு கேட்டுள்ளது. மனிதப் புதைகுழிகளின் தற்போதைய நிலைமையை சுட்டிக் காட்டியுள்ள ஆணைக்குழு தனித்தனியாக வெவ்வேறு துறைசார் தலைமைக்கும் பரிந்துரைகளை அனுப்பியுள்ளது. நீதியமைச்சர், பொலிஸ் மாஅதிபர், உயர்கல்வி அமைச்சர் ஆகியோர் இதில் அடங்குவர்.

ஏற்கனவே புதைகுழிகளிலிருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் (உடலங்கள்) ஆடைகள் இல்லாமலும், ஆழமற்ற குழிகளில் புதைக்கப்பட்டதுமானது நீதிக்குப் புறம்பான கொலைகளைக் குறிப்பிடுவதாக இருப்பதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மனிதப் புதைகுழி தொடர்பான சாட்சிகள், ஊடகங்கள் என்பவற்றை அச்சுறுத்துவது தவிர்க்கப்பட வேண்டுமெனவும் இராணுவத்திடம் ஆணைக்குழு கேட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் நீதி கிடைப்பதை உறுதி செய்வதற்குத் தேவையான அவகாசம் இருப்பது அவசியமானது எனவும் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

ஆரம்பத்திலிருந்து கடந்த வாரம்வரை அகழ்வுப் பணியை நேரடியாக பார்வையிட்டு வந்த யாழ்ப்பாண நீதவான் ஏ.ஆனந்தராஜா பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டிருப்பது தொடர்பாக பல்வேறு சந்தேகங்கள் சமூக மட்டத்திலிருந்து கிளப்பப்பட்டுள்ளது. இதுபற்றிக் குறிப்பிட்டுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு, சம்பந்தப்பட்ட நீதவான் பதவி உயர்வு பெற்றுச் சென்றால் அவருக்குப் பதிலாக பொறுப்பேற்கும் நீதவானுக்கும் அனைத்து வசதிகளும் கிடைப்பதை அரசாங்கம் உறுதி செய்ய வேண்டுமென ஆணைக்குழு சுட்டியுள்ளது. இது இவ்வாறிருக்க, இலங்கை அரசு சட்டத்துறை, சட்ட அமலாக்கத்துறை, சட்ட மாஅதிபர் இலாகா போன்றவற்றை நேர்கோட்டில் இணைத்து அதனூடாக நீதி வழங்குவதை அரசியலாக்கி வருவதாக குற்றம் சுமத்தும் எதிர்க்கட்சியினர் இதன் அடிப்படையில் கூட்டணி ஒன்றை உருவாக்க முயன்று வருகின்றனர். இவர்கள் எவரும் இதுவரை மனிதப் புதைகுழி தொடர்பாக எந்தக் கருத்தும் தெரிவிக்காது சிங்களப் படைத் தலைமைகளையும் இராணுவத்தையும் (22ம் பக்கம் பார்க்க)

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.

தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா

செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)

பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)

உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)

உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)

பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்

இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

”தர்மம் தலை காக்கும்” “கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

06 செப்டம்பர் 2025 முதல் 12 செப்டம்பர் 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது. கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

### மேலதிக விபரங்களுக்கு:-

### ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## 35வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம்

யாழ்ப்பாணம் வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 35வது ஆண்டு நினைவு நாள் 26 ஆகஸ்ட் 2025 விநாயகர் சதுர்த்தி தினமான செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது பெற்றோர், சகோதர்கள் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 37வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சிவபாக்கியநாதன் கணபதிப்பிள்ளை

யாழ்ப்பாணம் தொல்புரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திரு கணபதிப்பிள்ளை சிவபாக்கியநாதன் அவர்களது 37வது ஆண்டு நினைவு நாள் 26 ஆகஸ்ட் 2025 விநாயகர் சதுர்த்தி தினமான செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு கணபதிப்பிள்ளை சிவபாக்கியநாதன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக்குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 2வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கோகிலாம்பாள் விவேகானந்தன்

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கோகிலாம்பாள் விவேகானந்தன் அவர்களது இரண்டாவது ஆண்டு நினைவு நாள் 29 ஆகஸ்ட் 2025 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி கோகிலாம்பாள் விவேகானந்தன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


## 23வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பிராஜா ஞானானந்தன்

வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது 23வது ஆண்டு நினைவு நாள் 21 ஆகஸ்ட் 2024 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு இராஜதுரை ஈஸ்வரபாதம்

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த முன்னாள் அஞ்சல் நிலைய உத்தியோகத்தர் திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 13 செப்டம்பர் 2025 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு இராஜதுரை ஈஸ்வரபாதம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 3வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சண்முகம் முத்துலிங்கம்

யாழ்ப்பாணம் மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு சண்முகம் முத்துலிங்கம் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாள் 15 செப்டம்பர் 2025 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். திரு சண்முகம் முத்துலிங்கம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது மனைவி பிள்ளைகளுடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.


# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



25 ஆகஸ்ட் 2025 திங்கட்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி ரஜிதன் பிரசாந்தி இணையர்களின் செல்வப்புதல்வி செல்வி சக்தி ரஜிதன் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



26 ஆகஸ்ட் 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி புனிதவதி தயாளன் அவர்களது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் திருமதி புனிதவதி தயாளன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



26 ஆகஸ்ட் 2025 செவ்வாய்க்கிழமை யாழ்.தொல்புரத்தைச் சேர்ந்த திருசிவபாக்கியநாதன் கணபதிப்பிள்ளை அவர்களது 37வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



26 ஆகஸ்ட் 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி நந்தகுமார் பிரியதர்சினி இணையர்களின் செல்வப்புதல்வி திவ்வியா நந்தகுமாரின் 16வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி திவ்வியா தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து பாரதி இல்லக் கிழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



26 ஆகஸ்ட் 2025 செவ்வாய்க்கிழமை வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 35வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது பெற்றோர்கள் சகோதரங்கள் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



29 ஆகஸ்ட் 2025 வெள்ளிக்கிழமை யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி கோகிலாம்பாள் விவேகானந்தன் அவர்களது 2வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



29 ஆகஸ்ட் 2025 வெள்ளிக்கிழமை கனடாவில் வாழும் திரு மாசிலாமணி ஜெயராஜ் ஸ்ரீபன் அவர்களது 57வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றைய நாளுக்காக திரு மாசிலாமணி ஜெயராஜ் ஸ்ரீபன் அவர்கள் 30 ஆகஸ்ட் 2025 சனிக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்



04 செப்டம்பர் 2025 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கார்த்திகேயனின் 14வது இனிய பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் கார்த்திகேயன் தனது பெற்றோர்கள் சகோதரங்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



04 செப்டம்பர் 2025 வியாழக்கிழமை நோர்வேயில் வசிக்கும் செல்வன் பிரசாந்தன் அவர்களும் செல்வி கோபிதா அவர்களும் இனிய இரு மனம் இணையும் நன்நாளாகும். அன்றைய தினம் இருவரும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள். வாழ்க வளமுடன் என்று பாரதி இல்லக் குழந்தைகள் வாழ்த்தி மகிழ்கின்றார்கள்



# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
**10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),**
**Scarborough ON M1B 3C6**
Tel: **416.949.0404** / Fax: **416.948.0303** • **info@sasilaw.ca** • **www.sasilaw.ca**

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

# செம்மணியின் பின்னணியில் ஐ.நா. கூட்டத் தொடர்

ஐநாவின் அறுபதாவது கூட்டத் தொடர் இம்மாதம் எட்டாம் தேதி அதாவது நாளை ஆரம்பமாகிறது. இக்கூட்டத் தொடரில் அதிசயங்கள் அற்புதங்கள் நிகழ்வதற்கு இடமில்லை. ஏனென்றால் ஈழத் தமிழர்களின் நோக்கு நிலையில் இருந்து பார்த்தால் ஐநா அதிசயங்களும் அற்புதங்களும் நிகழ்வதற்குரிய ஒரு களம் அல்ல. போராடும் மக்கள் மத்தியில் தான் அதிசயங்களும் அற்புதங்களும் நிகழும்.

எனினும் எல்லாவிதமான வரையறைகளோடும், தமிழ் மக்களுக்கு என்று கடந்த 16 ஆண்டுகளாக திறந்து வைக்கப்பட்டிருக்கும் ஒரே அனைத்துலக அரங்கு மனித உரிமைகள் பேரவை தான். அந்த மனித உரிமைகள் பேரவைக்குள் காலை ஊன்றிக் கொண்டுதான் தமிழ் மக்கள் அடுத்த கட்டத்திற்கு பாயலாம். ஐநாவுக்கு கூட்டுக் கடிதம் எழுதும் ஒரு சந்திப்பின் போது சிவாஜிலிங்கம் அதை ஓர் உவமையோடு சுட்டிக் காட்டியிருந்தார். மனித உரிமைகள் பேரவையை முற்றாக நிராகரிக்க முடியாது.

ஏனென்றால் நாங்கள் பாயப் போகிறோம் என்று சொன்னால் எங்கேயாவது ஒரு காலை ஊன்ற வேண்டும். ஒரு காலை ஊன்றினால்தான் பாயலாம். இப்போதைக்கு மனித உரிமைகள் பேரவைதான் எங்களுக்குத் தளம். எனவே அதில் ஊன்றியிருக்கும் காலையும் எடுத்து விட்டால் நாங்கள் விழுந்து விடுவோம் என்று சிவாஜி சொன்னார்.

மனித உரிமைகள் பேரவையில் கடந்த நான்கு ஆண்டுகளாக சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிப்பதற்கான அலுவலகம் ஒன்று இயங்கி வருகிறது. அது தொடர்பாக தமிழ் மக்களுக்கு விமர்சனங்கள் உண்டு. எனினும் அந்த அலுவலகத்தின் அடுத்த கட்டம் தொடர்பாக இந்த முறை கூட்டத் தொடரில் தீர்மானிக்கப்படும். ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வந்து சென்றிருக்கும் ஒரு பின்னணியில் அவர் இங்கு அவதானித்தவற்றின் தொகுப்பாகவும் ஐநாவின் நடவடிக்கைகள் அமையும்.

அனுர அரசுத் தலைவராக தெரிந்தெடுக்கப்பட்டு ஓராண்டு முடியும் ஒரு மாதத்தில் ஐநாவின் 60ஆவது கூட்டத்தொடர் தொடங்குகிறது. இந்த அரசாங்கம் தனக்கு தமிழ் மக்களின் ஆணையும் இருப்பதாகக் கூறிக் கொள்கிறது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தனக்குக் கிடைத்த ஏழு ஆசனங்களையும் அது தமிழ் மக்கள் தனக்கு வழங்கிய ஆணை என்று ஐநாவிலும் உலக அளவிலும் புதுடில்லியிலும் கூறி வருகிறது. ஐநாவும் புதிய அரசாங்கத்தின் கழுத்தை நெரிப்பதற்குப் பதிலாக அதற்க ஒரு சந்தர்ப்பத்தை வழங்கலாம் என்று சிந்திப்பதாகத் தெரிகிறது. இலங்கை வருகையின் பின் மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவிக்கும் கருத்துக்கள் அவ்வாறு கருதத்தக்கவையாக உள்ளன.

இவ்வாறு ஐநா இலங்கைக்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கலாம் என்று சிந்திக்கும் ஒரு கால கட்டத்தில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது கடந்த ஓராண்டு காலப்பகுதிக்குள் பொறுப்புக் கூறல் தொடர்பில் என்னென்ன செய்திருக்கிறது ?

முதலாவதாக, அவர்கள் செம்மணிப் புதைகுழியும் உட்பட எல்லாப் புதைகுழிகளின் விசாரணைகளையும் தொடர்ந்து முன்னெடுத்து வருகிறார்கள். இந்த விடயத்தில் அரசாங்கம் உள்நாட்டு நீதியின் நம்பகத் தன்மையை நிரூபிப்பதற்கான ஒரு வாய்ப்பாக செம்மணியைப் பார்க்கின்றது.

இரண்டாவதாக, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இந்த மாதம் நீக்கப் போவதாக ஒரு தகவல் வெளி வந்திருக்கிறது. எனினும் இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் அதுதொடர்பாக உத்தியோக பூர்வமான அறிவிப்புகள் எவையும் வெளி வந்திருக்கவில்லை.

மூன்றாவதாக ஊழலுக்கு எதிரான கைது நடவடிக்கைகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன. இதுவரை 70க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் அவர்களுக்குள் முன்னாள் ஜனாதிபதி ரணிலும் உட்பட முன்னாள் அமைச்சர்கள், பிரபல அரசியல்வாதிகள், படைத்துறைப் பிரதானிகள், காவல் துறைப் பிரதானிகள்,உயர் அதிகாரிகள், அரசியல்வாதிகளோடு தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படுகின்ற பாதாள உலகத் தலைவர்கள் போன்ற பலரும் அடங்குவர். இக்கைது நடவடிக்கைகளின் மூலம் நாடு ஊழலுக்கு எதிராகத் துணிச்சலாக முன்னேறி வருகிறது என்ற ஒரு தோற்றத்தை அரசாங்கம் கட்டி எழுப்பி வருகிறது. இதுவும் ஐநாவில் அரசாங்கம் காட்டக்கூடிய ஒரு வீட்டு வேலையாக இருக்கும்.



நாலாவதாக அரசாங்கம் அதன் ஓராண்டு நிறைவை முன்னிட்டு வடக்கில் பல அபிவிருத்தி திட்டங்களையும் தொடங்கியிருக்கிறது. இவ்வாறு தொடங்கப்பட்டிருக்கும் அபிவிருத்தித் திட்டங்களில் சர்வதேச விளையாட்டு மைதானம், வட்டுவாகல் பாலத்தைப் புதிதாகக் கட்டுவது, தெங்கு முக்கோணத் திட்டம், வவுனியா,மத்திய பொருளாதாரம் மையத்தைத் திறந்து வைத்தமை, யாழ்ப்பாணத்தில் ஒரு கடவுச்சீட்டு அலுவலகத்தைத் திறந்தமை, மயிலிட்டித் துறைமுகத்தின் மூன்றாம் கட்ட அபிவிருத்தியைத் தொடக்கி வைத்தமை, யாழ் பொதுசன நூலகத்தை டிஜிட்டல் தளத்தில் நுகர்வதற்குரிய ஏற்பாடுகளைத் தொடக்கி வைத்தமை ....போன்ற பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களும் அடங்கும். இந்த அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் அரசாங்கம் தமிழ் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காகப் பாரபட்சமின்றி உழைக்கிறது என்ற ஒரு தோற்றத்தை வெளியே காட்ட முடியும்.

அனுர ஜனாதிபதியாகத் தெரிவு தெரிவு செய்யப்பட்ட ஓராண்டுக்குள் அவர் தமிழ் மக்களுக்குச் செய்தவற்றின் பட்டியல் ஒன்றை அரசாங்கம் ஐநாவில் காட்ட முடியும். மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் அரசாங்கத்துக்கு வாய்ப்புகளை வழங்கலாம் என்று சிந்திக்கின்ற ஒரு இராஜதந்திரச் சூழலில் அரசாங்கம் மேற்கண்டவாறு ஐநாவை நோக்கி ஒரு தொகுதி வீட்டு வேலைகளைச் செய்து வருகிறது.

இது வரையிலுமான கைது நடவடிக்கைகளில் போர்க் குற்றங்கள் அல்லது தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்களோடு தொடர்புடைய குற்றச்சாட்டுகளின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் அநேகமாக இல்லை. ஒரு கடற்படை பிரதானி கைது செய்யப்பட்டிருக்கிறார். அதுவும் தென்னிலங்கையில் இடம்பெற்ற ஒரு கடத்தல் சம்பவத்தோடு தொடர்புடையது என்று ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அவர் மீதான குற்றச்சாட்டுகளில் நேரடியாகப் போர் குற்றங்கள் சம்பந்தப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. தவிர ரணில் விக்கிரமசிங்கவின் கைது நடவடிக்கையின்போது அவரை 40 ஆண்டுகளுக்கு முன்னரே கைது செய்து இருந்திருக்க வேண்டும் என்ற பொருள்பட அமைச்சர் விஜித ஹேரத் யாழ்ப்பாணத்தில் வைத்துச் சொன்னார். அதன் பொருள் என்னவென்றால் 40 ஆண்டுகளுக்கு முன்பு போர்க்காலத்தில் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் எதிராக அவர் அங்கம் வகித்த அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகளுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்திருக்க வேண்டும் என்பதாகும்.

ஆனால் ரணில் அண்மையில் கைது செய்யப்பட்டது அவ்வாறான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அல்ல. பொதுச் சொத்தைத் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் அடிப்படையில் தான். எனவே தொகுத்துப் பார்த்தால் இதுவரை கைது செய்யப்பட்ட 70க்கும் அதிகமானவர்களில் யாருமே போர்க் களத்தில் இடம் பெற்ற தமிழ் மக்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாகக் கைது செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

எனவே இப்பொழுது நடக்கும் கைது நடவடிக்கைகள் நாட்டின் ஒட்டுமொத்த ஊழல் கட்டமைப்புக்கு எதிரானவைகளாகத் தான் காணப்படுகின்றன. ஐநாவில் ஏற்கனவே இயங்கி வருகின்ற சான்றுகளையும் சாட்சிகளையும் சேகரிக்கும் கட்டமைப்பினால் இனங் காடப்பட்ட படைப் பிரதானிகளுக்கு எதிரானவைகள் கூட அல்ல. அவ்வாறு அடையாளம் காணப்பட்ட சில படைப் பிரதானிகளுக்கு எதிராக ஏற்கனவே கனடா அமெரிக்கா பிரித்தானியா போன்றன பயணத் தடைகளை விதித்து, நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றன. ஆனால் அரசாங்கமோ அவர்களுக்குப் பொறுப்புகளை வழங்கி வருகிறது.

எனவே நாட்டில் தற்பொழுது இடம் பெறும் பெரும்பாலான கைது நடவடிக்கைகள் தமிழ் நோக்கு நிலையில் ஐநாவின் பொறுப்புக்கூறும் செய்முறைகளின் பிரதான பகுதிக்குள் வரவில்லை. அதை ஒரு வீட்டு வேலையாக அரசாங்கம் ஐநாவில் காட்ட முடியாது. ஆனால் உள்நாட்டு நீதியின் அந்தஸ்தை உயர்த்துவதற்கு அவை அரசாங்கத்திற்கு உதவும். எனவே கடந்த ஓராண்டு காலப் பகுதிக்குள் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுத்து வரும் திருப்பகரமான மாற்றங்களில் ஐநாவில் காட்டக்கூடிய மாற்றங்கள் ஒப்பீட்டளவில் குறைவுதான்.தமிழ் நோக்கு நிலையில் இருந்து உள்நாட்டு நீதியின் நம்பகத்தன்மையை பலப்படுத்துவதற்கு அரசாங்கம் இன்னும் நீண்ட தூரம் போக வேண்டியிருக்கும்.

அரசாங்கம் போர் வீரர்களை வேட்டையாடுகிறது என்ற பொருள்பட நாமல் அண்மையில் எச்சரித்திருந்தார். இந்த எச்சரிக்கையானது அரசாங்கம் அதன் கைது நடவடிக்கைகளில் எதுவரை போகலாம் என்பதை உணர்த்தும் நோக்கிலானது. எது எவ்வாறு இருப்பினும் ஜெனிவா கூட்டத் தொடரில் இம்முறை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பலவீனமாக இல்லை என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். ஆனால் தமிழ்த் தரப்பு?

இதுவரை நான்குக்கும் குறையாத கடிதங்கள் ஐநாவுக்கு போயிருக்கின்றன. ஒரு கடிதம், தமிழ் தேசிய பேரவையும் சிவில் சமூகங்களும் இணைத்து அனுப்பியது. இரண்டாவது கடிதம், தமிழரசுக் கட்சி அனுப்பியது. மூன்றாவது கடிதம் தமிழ்த் தேசியப் பேரவையின் கடிதத்தில் போதாமைகள் உண்டு என்று கூறி புலம்பெயர்ந்த தமிழ்ச் செயற்பாட்டாளர் ஒருவரும் தாயகத்தில் உள்ள அவருடைய சிவில் சமூக நண்பர்களும் இணைந்து தமிழ்ப் பொது வேட்பாளர் உட்பட சில அரசியல்வாதிகளையும் ஒருங்கிணைத்துக் கொண்டு அனுப்பிய ஒரு கடிதம். நாலாவது கடிதம் பிரித்தானியத் தமிழர் பேரவை அனுப்பியது.

இப்படியாக நான்குக்கும் குறையாத கடிதங்கள் ஐநாவை நோக்கிப் போயிருக்கின்றன. அரசில்லாத சிறிய தேசிய இனமாகிய தமிழ் மக்கள் தங்களுக்குள் ஐக்கியப்படாமல் கட்சிக்கொரு கடிதம் சிவில் சமூகத்துக்கு ஒரு கடிதம் என்று ஈகோக்களாகப் பிரிந்து போய் நிற்கிறார்கள்.

செம்மணி எதிர்பாராத புதிய வாய்ப்புகளைத் தமிழ் மக்களுக்குத் திறந்து விட்டுள்ளது. அதேசமயம் அரசாங்கத்திற்கு அது எதிர்பாராத ஒரு சோதனைக் களம். ஆனால் அந்தச் சோதனைக் களத்தை அரசாங்கம் ஒருமுகமாக எதிர்கொள்கிறது அந்த விடயத்தில் அரசாங்கம் உள்நாட்டு நீதியின் நம்பகத் தன்மையைப் (22ம் பக்கம் பார்க்க)

# “அறகலய” அமெரிக்கத் தயாரிப்பு?

கட்டுரையாளர்:
– அழகு.குணசீலன் –

காலிமுகத்திடல் அறகலய போராட்டம் தொடர்பாக, அது அமெரிக்க, மேற்குலக சக்திகளின் ஆட்சி கவிழ்ப்பு திட்டம் என்று போராட்ட காலத்தில் சில கட்டுரைகள் இப்பத்தியாளரால் எழுதப்பட்டுள்ளன. அதன் பின்னணியிலான ஆதாரங்கள் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைதுக்கு பின்னர் வெளிவர தொடங்கி இருப்பதுடன்சில சிங்கள ஆங்கில தென்னிலங்கை ஊடகங்கள் வெளிச்சம் போடவும் ஆரம்பித்துள்ளன. ஆக, அறகலய ஒரு அமெரிக்கத் தயாரிப்பு''. மேட் இன் அமெரிக்கா. (AMERIKAVE SADANA LADA).

மரபு ரீதியான இடதுசாரிகள் என்று தங்களுக்கு தாங்களே பட்டம் சூட்டிக் கொண்டவர்கள் அது ஒரு மக்கள் புரட்சி என்றும், அதை ஒரு "கோடாக'' பார்க்கவேண்டும் என்றும் மார்க்சிய, லெனிச சாயங்களை பூசினர். உலகின் வர்க்கப்போராட்டங்களுடனும் ஒப்பிட்டனர். அதை மறுத்து அறகலய ஒரு புரட்சி அல்ல என்றும் அது வெறும் சீர்த் திருத்தங்களோடு மழுங்கிப் போகின்ற எதிர்ப்புரட்சி என்றும் தொடர்ந்தும் எழுதியது.

அந்த போராட் டத்தின் பின்னணியில் அமெரிக்க ஆசியையும், ஆதரவையும் பெற்ற ஒரு அணி இயக்குவிக்கப்படுகிறது என்றும் அடித்துச்சொன்னது.

இப்போது ரணில் விக்கிரமசிங்கவின் கைதுக்கு பின்னர் கொழும்பு ஆங்கில ஏடான த ஐலன்ட் தனது ஆகஸ்ட் 27, வெளியீட்டில் SHAMINDRA FERDINANDO வினால் எழுதப்பட்டுள்ள கட்டுரையானது அனைத்து பின்கதவு அரசியலையும் அம்பலப்படுத்துகிறது. இந்த போராட்டத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் யு.என்.பி.க்கும் அநுரகுமார திசாநாயக்கவின் ஜே.வி.பிக்கும் இடையிலான, காலிமுகத்திடல் பின் கதவு காதல் உறவு பற்றியும், அது அமெரிக்காவின் கொழும்பு தூதரகத்தால் எவ்வாறு கச்சிதமாக நகர்த்தப்பட்டது என்பது பற்றியும் பேசுகிறது. இது இருப்பதை அடித்து அழித்து அழித்து விட்டு பின்னர் ஆரத் தழுவி கட்டியணைத்து உதவி செய்கின்ற நவ காலனித்துவ சட்டம் பித்தனத்தின் தொடரும் வரலாற்று தொடர்.

27, ஆகஸ்ட், 2025 த ஐலன்ட் வார ஏட்டில் வெளியான சமீந்திர பெர்டினான்டோவின் கட்டுரையின் தலைப்பு இது.UNP -JVP POLITICAL RELATIONSHIP AND WICKREME SINGHE’S ARREST.

அமெரிக்கா பின்னணி வகித்த, ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவை ஆட்சியில் இருந்து வெளியேற்றுவதற்காக இடம் பெற்ற எதிர்ப்பு போராட்டத்தில், யு.என்.பி. தலைவர் ரணில் விக்கிரமசிங்க சர்ச்சைக்குரிய ஒரு தலைமைப் பாத்திரத்தை ஏற்றிருந்தார்.

விக்கிரமசிங்கவுடன் இது விடயமாக விவகாரத்தை கையாள்பவர்களாக முன்னாள் பாராளுமன்றவாதிகளான ஹரின் பெர்ணான்டோ, பேராசிரியர் அசு மாரசிங்க இருவரும் இணைந்திருந்தார்கள்

யு.என்.பி. போராட்டத்திற்கு தேவையான வசதிகளையும், வாய்ப்புக்களையும் சூழலையும் ஏற்படுத்தியதன் மூலம், என்.பி.பி.யின் நிகழ்ச்சி நிரலுக்கு உதவியாக இருந்தது. ஆனால் விக்கிரமசிங்க ராஜபக்சசாக்களின் பக்கம் திரும்பிய போது, வெளிநாட்டு பின்னணியைக் கொண்ட இந்த வன்முறைப் போராட்டம், பாராளுமன்றத்தை கைப் பற்றுதல் என்ற என்.பி.பி.யின்



இலக்கை முறியடிப்பதாக அமைந்தது. விக்கிரமசிங்கவின் இந்த நிலைப்பாடு போராட்டத்தை பாதி வழியில் பாதித்ததுடன் அறகலயவின் உண்மையான தந்திரோபாய இலக்கு சறுக்குவதற்கும் காரணமானது

ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய கைதுடன் தொடர்பு படுத்தி த ஐலன்ட் பத்தியாளர் இந்த கட்டுரையை எழுதுவதற்கான காரணம் என்ன? என்ற கேள்வி எழுவது பொதுவானது.

அவர் யு.என்பி ஜே.வி.பி.ஃ என்.பி.பி. மறைமுக அரசியல் உறவில் ஏற்பட்ட ஒரு பெரும் வெடிப்பாக இதை பார்க்கிறார். அதுவே ரணிலின் திட்டமிட்ட கைதுக்கான அரசியல் பின்னணியாக அமைகிறது. மக்கள் வங்கி நிதி மோசடி, பட்டலந்த விவகாரத்திற்கும் அப்பால் இருதரப்பு உள் உறவை ரணில் ராஜபக்சாக்களுக்கு காட்டிக் கொடுத்தார் என்பதற்கான அரசநிதி துஷ்பிரயோகத்தின் திரைமறைவில் நடாத்தப்படும் அரசியல் பழிவாங்கலா இது?

பச்சை முதலாளித்துவமும், போலி சோஷலிசமும் அல்லது வலதுசாரி பொருள்முதல்வாதமும், இடதுசாரி நிற வேஷமும் அரசியல் திருமணம் செய்யமுடியாது என்பதற்கும், அப்படி சந்தர்ப்பவாதம் இரு முரண்பட்ட சக்திகளை பின்கதவால் இணைத்தாலும் அது இடைநடுவில் முறிந்து விடும் என்பதற்கும் இந்த யு.என்பி.– ஜே.வி.பி. அரசியல் சிறந்த உதாரணம்.

இது அமெரிக்க தரகர் தனக்கு விரும்பிய முகவரை அதிகாரத்தில் அமர்த்த எடுத்த முயற்சி. அமெரிக்காவின் நோக்கம் அநுரவை ஆட்சியில் அமர்த்துவதல்ல மாறாக ரணிலை ஆட்சியில் அமர்த்த அநுரவை அறகலய ஊடாகப் பயன்படுத்துவது. ஆனால் ரணிலையும், சஜீத்தையும் இணைக்கும் விடயத்தில் அமெரிக்கா தோற்றுப் போனதன் விளைவே இன்றைய ஜனாதிபதி அநுர. இப்போது அநுரவின் இருப்பை எவ்வளவு காலத்திற்கு நீடிப்பது என்பது அமெரிக்காவின் கையில் உள்ளது. ரணில் கைதுக்கு பின்னரான எதிர்க்கட்சிகளின் இணைவும் ஒரு அமெரிக்க தயாரிப்புத் தான். இந்த நெருக்குதலில் இருந்து தப்ப சீனாவையும், இந்தியாவையும் தூரத்து உறவாக அணுக வேண்டிய கட்டாயம் அநுர அரசிற்கு ஏற்பட்டுள்ளது.

பாலஸ்தீன மக்களின் இனப்படு கொலையை கண்டு கொள்ளாத இலங்கை அரசு தலைவர் அநுரகுமார திசாநாயக்க, உக்ரைன் ஜலன்ஸிக்கு சுதந்திர தின வாழ்த்து தெரிவிக்கிறார் என்றால் அநுர யாரைத் திருப்திப்படுத்துகிறார்? இரண்டு போருக்குப் பின்னாலும் உள்ள இரு வல்லரசுகளில் யாருக்கு பின்னால் நிற்கிறார்? 193 ஐ.நா. உறுப்பு நாடுகளில் 147 நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட பாலஸ்தீன தேசத்தின் தலைவருக்கு ஐ.நா. பொதுச்சபை கூட்டத்தொடரில் கலந்து கொள்ள தடை விதித்துள்ளது அமெரிக்கா. பொருளாதார வங்குரோத்தில் இருந்து காப்பாற்றிய இந்தியாவும், சீனாவும் பாலஸ்தீன மக்களின் பக்கம் நிற்கின்றன. தேசிய இனங்களின் சமத்துவம் பேசும் ஜனாதிபதி அமெரிக்காவின் பக்கம் சாய்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது இது வரையான யு.என்.பி.– ஜே.வி.பி. உறவில் இனியும் ஒட்டுப்போட முடியாத பிளவை ஏற்படுத்தியுள்ளது. 1965இல் உருவாக்கப்பட்ட ஜே.வி.பி.க்கும், 2019இல் உருவாக்கப்பட்ட என்.பி.பி.க்கும் ஏக காலத்தில் தலைவராக இருக்கிறார் அநுரகுமார திசாநாயக்க. இந்த என்.பி.பி. கூட்டணி 159 உறுப்பிர்களை நாடாளுமன்றத்தில் கொண்டிருக்கும் போது 1946இல் உருவாக்கப்பட்ட யு.என்.பி. ரணில் விக்கிரமசிங்க தலைமையில் எந்த ஒரு ஒற்றை உறுப்பினரையும் நாடாளுமன்றத்தில் கொண்டில்லை.

யு.என்பி ஜே.வி.பி. நினைத்துப் பார்க்க முடியாத பின்கதவு உறவு அறகலய காலத்தில் ஏற்பட்டதல்ல. 2009 யுத்த முடிவுக்கு பின்னர் 2010 பொதுத் தேர்தலில் ஏற்பட்டது. ராஜபக்சாக்களுக்கு எதிரான இந்தக் கூட்டில் களங்கப்படுத்தப்பட்ட அரசியல் ஊடாக தமிழரசுக்கட்சியின் தலைமையிலான தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் சேர்ந்து கொண்டது. இதில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு விடுதலைப்புலிகளை தமிழ் பேசும் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டிருந்தது என்பதும், புலிகளையும், மக்களையும் அழித்த படைத்தளபதியை வெட்கமின்றி ஆதரித்தது என்பதும் வரலாறு. கொழும்பு அமெரிக்க தூதரகத்தினால் வசதிகள் வழங்கப்பட்ட இந்த கூட்டணி திட்டத்தில் யு.என்.பி தலைவர் ரணில் விக்ரமசிங்க, ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச அமரசிங்க, ரி.என்.ஏ. தலைவர் ஆர். சம்பந்தன் ஆகியோர் ஓரணியில் கொண்டு வரப்பட்டனர். ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக போர் வெற்றித்தளபதி சரத் பொன்சேகா வேட்பாளராக நிறுத்தப்பட்டார். இங்கு கவனிக்க வேண்டியது முள்ளிவாய்க்காலை முடித்து வைத்த அமெரிக்கா, அந்த போரின் இனப்படுகொலை தளபதியை ஜனாதிபதியாக்க திட்டம் தீட்டுகிறது. அந்த திட்டத்தில், முள்ளிவாய்க்கால் அழிவுகளை இனப்படுகொலை என்று கூவுகின்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் இணைந்து கொண்டு சரத்பொன்சேகாவுக்கு வாக்களிக்குமாறு தமிழ்மக்களை கோருகிறது. இந்த பின் கதவு உறவையும், அரசியலையும் புரியாத அப்பாவிமக்கள் வடக்கு கிழக்கில் அமெரிக்க கொடியை உயரப்பிடித்து அமெரிக்காவிடம் நீதி கோருகிறார்கள். இதற்கு சில தமிழ்த்தேசிய பக்தர்களும், பத்தி எழுத்தாளர்களும் இட்டுள்ள பெயர் தேசமாக திரள்தல் மக்கள் திரட்சி இந்த பத்தியாளர்கள் தான் சிறிதர் தியேட்டரில் அடைக்கலம் புகுந்து தப்பிப் பிழைத்துக் கொண்டு டக்ளஸ் தேவானந்தாவை இனப்படுகொலையின் பங்காளி என்று கூறுகிறார்கள்.

சரத் பொன்சேகாவை ஜனாதிபதி பொது வேட்பாளராக்குவதில் அமெரிக்க தூதூவர் PATRICIA BUTENIS முக்கிய பாத்திரத்தை வகித்தார். சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளையும் அவரால் பொன்சேகா ஆதரவு அணிக்கு கொண்டு வர முடிந்தது. தென்னிலங்கையில் மகிந்த ராஜபக்சவுக்கு எதிரான ஜே.வி.பி.யின் கடுமையான பிரச்சாரங்களின் மூலமும், சிறுபான்மை மக்களின் வாக்குகளின் மூலமும் சரத்பொன்சேகா வெற்றி பெறுவார் என்று இந்த அமெரிக்க ஆதரவு அணி திடமாக நம்பியது. ஆரம்பத்தில் சம்பந்தருக்கு தலையை சுற்றிய இந்த விவகாரத்தை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பேயை விடவும் பிசாசு பரவாயில்லை என்று தமிழ்த்தேசியத்தை அமெரிக்காவுக்கு உயில் எழுதிக் கொடுத்தது.

2010 நாடாளுமன்ற தேர்தலில், UNP, JVP, TNA, SLMC, CWC கூட்டணியை தோற்கடித்த மகிந்த ராஜபக்ச தலைமையிலான UPFA 144 இருக்கைகளை நாடாளுமன்றத்தில் பெற்றது. மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு வெறும் ஆறு இருக்கைகளே(22ம் பக்கம் பார்க்க)

# தையிட்டி - மயிலிட்டி கச்சதீவு - செம்மணி

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -



நாங்கள் கேட்டது சர்வதேச விசாரணையை. அனுர தருவது சர்வதேச விளையாட்டு மைதானத்தை. என்று முகநூலில் ஒரு பதிவு காணப்பட்டது. தமிழ் மக்கள் அனைத்துலக விசாரணைப் பொறிமுறை ஒன்றைக் கேட்டுக் கொண்டிருக்கும் ஒரு பின்னணியில் அரசாங்கமோ இதோ உங்களுக்கு விளையாட்டு மைதானம் இதோ உங்களுக்கு மயிலிட்டித் துறைமுகம் இதோ உங்களுக்கு வட்டுவாகல் பாலம் என்றிவ்வாறாக அபிவிருத்தித் திட்டங்களை முன் வைக்கின்றது.

அனுர அரசுத் தலைவராக தெரிவு செய்யப்பட்டு இந்த மாதத்தோடு ஓராண்டு முடிகிறது. பதவியேற்ற ஓராண்டு காலப் பகுதிக்குள் வடக்கிற்கு அதிக தடவைகள் வருகை தந்த ஒரே ஜனாதிபதியாக அவர் காணப்படுகிறார். கடந்த கிழமை அவர் வடக்கில் பல அபிவிருத்தி திட்டங்களையும் தொடக்கி வைத்துள்ளார். இடையில் ஒரு சாகசப் பயணமாக கச்சதீவுக்கும் போய் வந்திருக்கிறார்.

கடந்த ஓராண்டு கால பகுதிக்குள் வடபகுதிக்கு மட்டும் 1250 கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருப்பதாக அவர் முல்லைத்தீவில் வைத்துச் சொன்னார். கடந்த கிழமை வடக்கில் அவர் மண்டைதீவில் ஒரு சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கான அடிக்கல்லை நாட்டினார். மயிலிட்டித் துறைமுகத்தின் மூன்றாம் கட்ட அபிவிருத்திக்கான வேலைகளையும் தொடக்கி வைத்தார். யாழ்.நூலகத்தை டிஜிட்டல் தளத்தில் நுகர்வதற்குரிய வேலைகளையும் தொடக்கி வைத்தார். யாழ்ப்பாணத்தில் ஒரு கடவுச்சீட்டு அலுவலகத்தையும் திறந்து வைத்தார். வன்னியில் தெங்கு முக்கோணத் திட்டம் ஒன்றை தொடக்கி வைத்தார்.வவுனியாவில் 7 ஆண்டுகளுக்கு முன் கட்டி முடிக்கப்பட்டு திறக்கப்படாமல் இருந்த மத்திய பொருளாதாரம் மையத்தைத் திறந்து வைத்தார். முல்லைத்தீவில் வட்டுவாகல் பாலத்தைப் புதிதாகக் கட்டுவதற்கான அடிக்கல்லை நாட்டினார். உங்களுக்கு ஒரு சக்தி வாய்ந்த பொருளாதாரத்தை உருவாக்குவது அரசாங்கத்தின் பொறுப்பு. அந்தப் பொறுப்பை ஏற்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று முல்லைத்தீவில் வைத்து அனுர கூறினார்.

அபிவிருத்தி வேண்டும். அதில் சந்தேகமில்லை. போரால் பாதிக்கப்பட்ட ஒரு பகுதி மக்கள் தொடர்ந்து அந்த பாதிப்பில் இருந்து விடுபடாதவர்களாக காணப்படுகிறார்கள். அவர்கள் தங்களைப் பொருளாதார ரீதியாக பலப்படுத்த வேண்டும். எனவே அபிவிருத்தி வேண்டும்.

ஆனால் தமிழ் மக்கள் போராடியது அபிவிருத்திக்காக அல்ல. அபிவிருத்தி செய்வதற்கான கூட்டு உரிமைகளுக்காகத் தான். அபிவிருத்தி என்பது ஒரு சமூகம் அதன் நோக்கு நிலையில் இருந்து செய்ய வேண்டியது. அது அதன் நோக்கு நிலையிலிருந்து அபிவிருத்தியைத் திட்டமிடுவதற்கு அவசியமான கூட்டு உரிமைகளைக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் தனது கடலின் மீதும், துறைமுகங்களின் மீதும், காட்டின் மீதும், நிலத்தின் மீதும் அதன் வளங்களின் மீதும் அதிகாரத்தைக் கொண்டிராத ஒரு மக்கள் கூட்டமானது தனக்குரிய அபிவிருத்தியைத் தானே திட்டமிட முடியாது.

அபிவிருத்தி செய்வதற்கான கூட்டு உரிமைகளை உறுதிப்படுத்தாமல் அபிவிருத்தியை முன்னெடுப்பது என்பது இனப்பிரச்சினையை ஒரு பொருளாதாரப் பிரச்சினையாக வியாக்கியானப்படுத்தும் ஓர் உத்தி தான்.

எதை அபிவிருத்தி செய்வது? எப்பொழுது செய்வது? எப்படிச் செய்வது? யாரிடம் உதவி எடுப்பது? போன்ற எல்லாவற்றையும் திட்டமிடுவதற்கும் செயற்படுத்துவதற்கும் தமிழ் மக்களுக்கு உரிய கூட்டுஉரிமைகள் வேண்டும். அந்தக் கூட்டு உரிமைகள் அதாவது அரசியல் உரிமைகளைக் கேட்டுத் தான் தமிழ் மக்கள் போராடினார்கள்.



இனப்பிரச்சினைக்கான தீர்வு வரும் வரையிலும் அதாவது தமிழ் மக்களின் கூட்டு உரிமைகள் உறுதி செய்யப்படும் வரையிலும் அபிவிருத்தியைச் செய்யாமல் இருக்க முடியாது என்பதனை கட்டுரை ஏற்றுக் கொள்கிறது. ஆனால் தமிழ்மக்கள் தமது கூட்டுரிமைக்கான கோரிக்கையைக் கைவிட வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு அபிவிருத்தி முன்னெடுக்கப்படுகிறதா என்ற சந்தேகம் தமிழ் மக்களிடம் எப்பொழுதும் இருக்கும். அனுர அவருடைய யாழ்ப்பாண விஜயத்தின் போது தன்னுடைய கட்சிக்காரர்களுக்கு தெரியாமல் தனது நண்பர் ஒருவரின் வீட்டில், தட்டாதெருவில் தங்கியிருக்கிறார். இதற்கு முதல் முறை யாழ்ப்பாணம் வந்த பொழுது அவர் குருநகர் மத்தியூஸ் வீதியில் உள்ள க்யூடெக் அலுவலகத்திற்கு சற்று நேரே உள்ள ஒரு நண்பரின் வீட்டில் தான் இளைப்பாறிக் குளித்து உடை மாற்றிக் கொண்டு சாப்பிட்டார்.

கடந்த கிழமை புதுக்குடியிருப்புக்குச் சென்ற போது அங்கே தன்னுடைய கட்சிக்காக உழைக்கும் ஒருவருடைய வீட்டில் மதிய உணவை எடுத்தபின் அந்த வீட்டுக் குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டு ஒரு படம் எடுத்துக் கொண்டார். பொதுவாக வடக்குக்கு வரும் ஜனாதிபதிகள் இங்குள்ள உயர்தர விடுதிகளில்தான் தங்குவார்கள். பாதுகாப்பு ஒரு காரணமாகக் கூறப்படும். ஆனால் அனுர தன் பழைய நண்பர்களைத் தேடிச் சென்று அவர்களுடைய வீடுகளில் தங்குகிறார் உணவருந்துகிறார் குளித்து உடுப்பு மாற்றிக் கொள்கிறார். சிங்கள மக்கள் மத்தியில் அவர் ஒரு எளிமையான எளிதில் கிடைக்கக் கூடிய தலைவர் என்ற அபிப்பிராயம் ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டு விட்டது. தமிழ் மக்கள் மத்தியிலும் அப்படி ஒரு பிம்பத்தை கட்டியெழுப்ப முயற்சிக்கிறார். அவர் எந்தப் பிம்பத்தை கட்டியெழுப்பினாலும் இறுதியாக நிலைக்கப் போகும் பிம்பம் எது என்பதை இனப்பிரச்சினைக்கான அவருடைய தீர்வு எது என்பது தான் தீர்மானிக்கப் போகிறது.

தேசிய மக்கள் சக்தி தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதனை அதன் தேர்தல் பிரச்சாரங்களிலும் அதன் தேர்தல் அறிக்கையிலும் காண முடிந்தது.தமிழ் மக்களை ஒரு தேசிய இனமென்று ஏற்றுக் கொண்டால் தான் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் அவர்கள் தங்களைத் தாங்களே அபிவிருத்தி செய்யத் தேவையான கூட்டு உரிமைகளை ஏற்றுக்கொள்ளலாம்.

உதாரணமாக மயிலிட்டித் துறைமுகத்தின் மூன்றாம் கட்ட விரிவாக்கம். மயிலிட்டித் துறைமுகம் எனப்படுவது ஒரு காலம் இலங்கைத்தீவின் முன்னணி கடல் வாணிபத் துறைமுகமாக விளங்கியது. தமிழ் மக்கள் நீண்ட கடல் எல்லையைக் கொண்டவர்கள். போருக்கு முன்பு தீவின் மொத்தக் கடலுணவில் கிட்டத்தட்ட 40 விகிதம் வடக்கிலிருந்தே கிடைத்தது. வடக்கில் மயிலிட்டி தான் முன்னணித் துறைமுகமாகக் காணப்பட்டது. போரில்



அது உயர் பாதுகாப்பு வலையத்துக்குள் விழுங்கப்பட்டது. விளைவாக மயிலிட்டி அதன் சோபையை, பொலிவை இழந்து விட்டது. அதன் மக்கள் இடம்பெயர்ந்து, புலம்பெயர்ந்து மெலிந்து போய் விட்டார்கள். தொடர்ச்சியான இடப்பெயர்களால் ஒரு தலைமுறை அதன் பாரம்பரிய தொழில் தொடர்ச்சியை, தொழில் திறன்களின் தொடர்ச்சியை இழந்து வருகிறது. இப்படிப்பட்டதோர் பின்னணியில் மயிலிட்டி துறைமுகத்தின் மூன்றாம் கட்ட அபிவிருத்தியை ஜனாதிபதி தொடக்கி வைத்திருக்கிறார்.

ஆனால் மயிலிட்டி அமைந்திருக்கும் அதே பிரதேசத்தில் சில கிலோ மீட்டர் தொலைவில் தான் தையிட்டி அமைந்திருக்கிறது. அங்கு கட்டப்பட்டிருக்கும் ஒரு விகாரையானது சிங்கள பௌத்த மயமாக்கலின், நிலப் பறிப்பின் ஆகப்பிந்திய குறியீடாக நிற்கிறது. தையிட்டி விகாராதிபதி மயிலிட்டியில் நடந்த வைபவத்துக்கு வருவாராக இருந்தால் அது ஒரு விவகாரமாக மாறும் என்று கருதியதனால் அந்த வைபவத்துக்கு எந்த மதத் தலைவர்களும் அழைக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

ஆனால் மண்டைதீவில் வைத்து அனுர தையிட்டி விகாரதிபதியிடம் ஆசிர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார்.

மயிலிட்டியில் அபிவிருத்தி தையட்டியில் நிலப்பறிப்பும் சிங்கள பௌத்த மயமாக்கலும். இது தற்செயலான முரண்பாடு அல்ல. இவை இரண்டுமே ஒரே நோக்கத்தை கொண்ட அரசு இயந்திரத்தின் இரு வேறு செயற்பாடுகள் தான். ஒன்று வெளிப்படையாக ஆக்கிரமிப்பைச் செய்கின்றது. தமிழ் மக்களுக்கு அவர்களுடைய நிலத்தின் மீதும் கடலின் மீதும் உரிமை இல்லை என்பதனை அது நிரூபிக்கின்றது. இன்னொன்று தமிழ் மக்களை அபிவிருத்திக்குள் கரைத்து விட முயற்சிக்கின்றது. அதனால் தான் திரும்பத் திரும்பக் கூற வேண்டியிருக்கிறது, தமிழ் மக்கள் கேட்பது அபிவிருத்தியை அல்ல. அபிவிருத்தி செய்வதற்கான கூட்டு உரிமைகளை என்று.

கடந்த வாரம் அனுர யாழ்ப்பாணத்தில் நின்ற அன்று செம்மணியில் ஏழு எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன. செம்மணிப் புதைகுழியை உள்நாட்டு நீதியின் நம்பகத்தன்மையை நிரூபிப்பதற்கான ஒரு களமாக அரசாங்கம் கையாண்டு வருகிறது. புதுக்குடியிருப்பில் அனுர ஒரு சிறு பிள்ளையைத் தூக்கி வைத்துக்கொண்டு படம் எடுத்திருக்கிறார்.

அதுபோல ஒரு சிறு பிள்ளையை அணைத்தபடி செம்மணியில் ஒரு தாய் புதைக்கப்பட்டார். அந்தத் தாய்க்கும் குழந்தைக்கும் நீதி கிடைத்தால்தான் புதுக்குடியிருப்பில் அனுர எடுத்த படத்துக்கு ஒரு வரலாற்றுப் பெறுமதியிருக்கும். இல்லையென்றால் அது வரலாற்றின் குப்பை கூடைக்குள் எறியப்பட்டு விடும். ஏனென்றால் வரலாறு ஒரு கண்டிப்பான கிழவி என்று மார்க்சிஸ்டுக்கள் கூறுவார்கள்.

# செம்மணியோடு முடக்கப்படுமா யுத்த கால மீறல்களுக்கான நீதி?

இலங்கையில் மனிதகுலத்துக்கு எதிராக சக மனிதன் நிகழ்த்திய அட்டூழியங்கள் பற்றிய உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டு, நீதி நிலைநாட்டப்படும் எனக் காத்திருந்த காலமும், அந்த அட்டூழியங்களின் சாட்சியாக அமைதிகாத்து நின்ற நிலமும், நீளும் காத்திருப்பின் வலி தாழாமல் இன்று தம் அமைதி கலைத்துப் பேச ஆரம்பித்திருக்கின்றன. இப்போது செம்மணி நிலம் உரத்துச் சொல்லிக் கொண்டிருக்கும் மனிதப் பேரவலக் கதை உலகின் மனசாட்சியை உலுக்க ஆரம்பித்திருக்கிறது. இலங்கையில் இன வழிப்போ, போர்க்குற்றங்களோ இடம் பெறவில்லை எனக் காலம் காலமாக மறுத்து வந்தவர்களை வாயடைக்கச் செய்திருக்கிறது.

### கிருசாந்தி குமாரசாமி கொல்லப்பட்டு 29 ஆண்டுகள்

நாமறிந்த செம்மணி நிலத்தின் கதை கிருஷாந்தி குமாரசுவாமியின் படுகொலையுடன் ஆரம்பமாகிறது. 1996 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி யாழ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் க.பொ.த உயர்தரப்பரீட்சை எழுதச்சென்ற கிருஷாந்தி குமாரசுவாமியும், அவரைத் தேடிச் சென்ற அவரது தாய் இராசம்மா குமாரசுவாமி, இளைய சகோதரன் குமாரசுவாமி பிரணவன், அயலவர் சிதம்பரம் கிருபாமூர்த்தி ஆகியோர் இராணுவத்தினரால் கொல்லப்பட்டு இன்றோடு 29 வருடங்கள் பூர்த்தியடைகின்றன.

கிருஷாந்தி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வழக்கில் பிரதான குற்றவாளியாகப் பெயரிடப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்ட லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, 1998 ஆம் ஆண்டு முதன் முறையாக செம்மணி பற்றிய உண்மைகளை உலகுக்கு வெளிப்படுத்தினார். 1995 – 1996க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அரச படையினரால் கைதுசெய்யப்பட்டதன் பின்னர் காணாமல் போன பலர் கொல்லப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்டதாகவும், அங்கு சுமார் 300 – 400 பேர் வரை புதைக்கப் பட்டிருக்கக் கூடும் எனவும் சோமரத்ன வெளிப்படுத்தியதை அடுத்து, 1999 இல் அவரால் அடையாளம் காண்பிக்கப்பட்ட பகுதிகளில் சர்வதேசக் கண் காணிப்புடன் மேற்கொள்ளப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான அகழ்வுகளில் 15 எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டன. அத்தோடு செம்மணி பற்றிய உண்மைகள் ஓர் தற்காலிக ஓய்வுக்குச் சென்றன.

### மீளப் பேசும் செம்மணி நிலம்

இந்நிலையில் இவ்வாண்டு பெப்ரவரி மாதம் செம்மணி சித்துபாத்தி இந்து மயானத்தின் புனரமைப்புப் பணிகளின் போது சில மனித எச்சங்கள் கண்டறியப்பட்டதை அடுத்து, சட்ட மருத்துவ அதிகாரிகள், பொலிஸார் மற்றும் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளின் மேற்பார்வையின்கீழ் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்குமாறு யாழ் நீதிவான் நீதிமன்றத்தினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன்படி கடந்த வியாழக்கிழமையுடன் (4) இரண்டாம் கட்ட அகழ்வுப்பணிகளில் 43 நாட்கள் பூர்த்தியடைந்துள்ளன. இது வரையான காலப்பகுதியில் (4 செப்டெம்பர் 2025) மொத்தமாக 235 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 224 எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. செம்மணியில் கண்டறியப்பட்ட குழந்தைகள் மற்றும் சிறுவர்களின் எலும்புக்கூடுகள், சிறுவர்கள் பயன்படுத்தும் பாடசாலைப் புத்தகப்பை, விளையாட்டுப்பொம்மை, பால் போத்தல் என்பனவும், கடந்த ஜூன் மாதம் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் செம்மணி மனிதப் புதைகுழிக்கான விஜயமும் இதுவரை வட கிழக்கின் பேரவலக் கதைகளைக் காது கொடுத்துக் கேட்காத, புரிந்து கொள்ள முயற்சிக்காத தெற்கின் கவனத்தைக் கூட செம்மணியின் பக்கம் திருப்பியிருக்கிறது. 'செம்மணிக்கு நீதி' என ஒட்டுமொத்த நாடும் ஒருமித்துக் குரல் எழுப்பா விட்டாலும், அந்நீதியைக் கோரி குறித்தவொரு தரப்பு எழுப்பும் கோஷத்தைத் தடுக்க முற்படாத சூழ்நிலையொன்று தெற்கில் பகுதியளவில் உருவாகியிருக்கிறது.




### சோமரத்னவின் புதிய வெளிப்படுத்தல்கள்

இது ஒரு புறமிருக்க 1996 ஆம் ஆண்டு 7ஆம் காலாட்படை தலைமையகத்தில் கொல்லப்பட்டு செம்மணி சோதனைச் சாவடிக்குக் கொண்டு வரப்பட்ட கிருஷாந்தி குமாரசுவாமியினதும், அவரது குடும்பத்தாரினதும் சடலங்களை கப்டன் லலித் ஹேவாகேயின் ஆணைக்கு அமைவாகப் புதைத்ததைத் தவிர வேறெந்தக் குற்றத்தையும் புரியாத தனது கணவர், செம்மணி மனிதப்புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று முன்னெடுக்கப்படும் பட்சத்தில் அதில் சாட்சியமளிப்பதற்குத் தயாராக இருக்கிறார் எனக் குறிப்பிட்டு மரணதண்டனைக் கைதி சோமரத்ன ராஜபக்ஷவின் மனைவி சேனாலி சம்பா விஜேவிக்ரம அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தார்.

அது மாத்திரமன்றி 'யாழ். அரியாலையில் சம்பத் எனும் பெயரில் குறிப்பிடத்தக்களவு காலம் பணியாற்றியவன் என்ற ரீதியில், 1996ஆம் ஆண்டில் அரியாலை பிரதேசத்தில் காணாமல் போன சகல நபர்களும் 7 ஆவது இராணுவக் காலாட்படை தலைமையகத்தின் உயரதிகாரிகளினாலேயே கைது செய்யப்பட்டனர் என்பதை நானறிவேன். அவ்வதிகாரிகள் யார் என்பதையும், 1996இல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சகல குற்றங்கள் பற்றிய விபரங்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கிறேன்' என சோமரத்ன ராஜபக்ஷ பிறிதொரு வெளிப்படுத்தலையும் செய்திருந்தார்.

### காலம் கனிந்திருக்கிறது

ஆக, கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலையுடன் வெளிச்சத்துக்கு வந்து கிடப்பில் போடப்பட்ட ஒரு மனிதப் பேரவலத்தையும், அதன் காரண கர்த்தாக்களையும் வெளிக் கொணர்வதற்கான காலம் கனிந்திருக்கிறது. செம்மணி மனிதப்புதைகுழி என்பது தனியொரு சம்பவம் அல்ல. மாறாக அது தமிழர்களுக்கு எதிராக அரச அனுசரணையுடன் இராணுவத்தினரால் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட மனிதகுலத்துக்கு எதிரான மீறல்களின் ஒரு சாட்சியம் மாத்திரமே என்பதை சோமரத்ன ராஜபக்ஷவின் அண்மைய வெளிப்படுத்தல்கள் உணர்த்துகின்றன.

இப்போது எம்முன் இரண்டு கேள்விகள் தொக்குநிற்கின்றன. முதலாவது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகிய நிலையில் யுத்த காலத்தில் இடம்பெற்ற சகல மீறல்களுக்குமான நீதியையும், பொறுப்புக்கூறலையும் உறுதி செய்வதற்கான சாட்சியமாகத் திகழும் செம்மணி மனிதப்புதைகுழி விவகாரத்தை எவ்வாறு கையாளப்போகிறோம்? இரண்டாவது, ஒட்டுமொத்த மீறல்களுக்குமான நீதியை அரசாங்கம் செம்மணியோடு மாத்திரம் மட்டுப்படுத்திவிடுமா?

இங்கு முதலாவது கேள்விக்கான பதிலை சரி வரக் கண்டறிந்து, அதனை தமிழ் அரசியல் தலைமைகள், சிவில் சமூகம், புலம்பெயர் தமிழர்கள், பாதிக்கப்பட்ட தரப்பினர் உள்ளிட்ட ஒட்டுமொத்த தமிழ்ச்சமூகமும் ஒன்றிணைந்து உரியவாறு நடைமுறைப்படுத்துவதன் ஊடாக மாத்திரமே இரண்டாவது கேள்வியில் எழுப்பப்பட்டிருக்கும் சந்தேகத்தைக் களைய முடியும்.

மனிதப்புதைகுழி விவகாரத்தையும், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தையும் வேறுபடுத்திப் பார்க்க முடியாத பின்னணியில், சர்வதேச விசாரணை பற்றிய சோமரத்ன ராஜபக்ஷவின் கருத்து நீண்டகாலமாக நீதிக்காகப் போராடி வரும் தமக்குச் சாதகமாக அமைந்திருப்பதாகவும், அதனை தமிழ்த்தரப்புக்கள் சரி வரப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் எனவும் வலியுறுத்தும் வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள், அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சர்வதேச விசாரணையை நோக்கிச் செல்லப்போவதில்லை என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கிறார்கள்.

இருப்பினும் இங்கு மனிதகுலத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நாடுவதற்கு வாய்ப்பளிக்கக்கூடியவகையில் ரோம சாசனத்தில் கையெழுத்திட்டிருக்காத இலங்கையை வேறு எந்த அடிப்படைகளில் நடைமுறைச்சாத்தியமான சர்வதேச நீதி மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறையை நோக்கித் தள்ள முடியும் என்ற கேள்வி எழுகிறது.

### சர்வதேச விசாரணைக்கான சாத்தியப்பாடுகள்

சர்வதேச விசாரணை என்பது கட்டாயமாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற வேண்டிய விசாரணையா? அல்லது வேறு வகையான சர்வதேச விசாரணையா? என்ற வினா மக்கள் மத்தியில் நிலவும் அதேவேளை, அரசியல்வாதிகள் மத்தியிலும் இது பற்றிய புரிதலின்மை காணப்படுகிறது. ரோம சாசனத்தில் உறுப்புரிமை அற்ற நாடுகளிலும், உறுப்புநாடுகள் ரோம சாசனத்தில் கையெழுத்திடுவதற்கு முன்னரான காலப்பகுதியில் அந்நாடுகளிலும் இடம் பெற்ற மனிதகுலத்துக்கு எதிரான மீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கான நியாயதிக்கம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இல்லை.

எனவே ரோம சாசனத்தில் கையெழுத்திடாத இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் அங்கு விசாரணைகளை முன்னெடுப்பதற்கான சாத்தியப்பாடு மிகக்குறைவு. இருப்பினும் சர்வதேச நீதியை நோக்கி நகர்வதற்கான வேறு பல வழிமுறைகள் சர்வதேச சட்டங்களில் உண்டு. உதாரணமாக யூகோஸ்லாவியா மற்றும் ருவாண்டா போன்ற நாடுகளில் இடம்பெற்ற இனப்படுகொலைகள் தொடர்பான விசாரணைகளுக்கான Ad uoc Tribunal எனப்படும் சர்வதேச தீர்ப்பாயங்கள் நெதர்லாந்தின் ஹேக் நகரில் தனியாக உருவாக்கப்பட்டன. அதே போன்று கம்போடியாவில் இடம் பெற்ற இனப்படுகொலை உள்ளடங்கலாக பல்வேறு சந்தர்ப்பங்களில் கலப்புமுறையிலான பல தீர்ப்பாயங்கள் காலத்துக்குக் காலம் நிறுவப்பட்டுள்ளன' என சர்வதேச நீதியை நாடுவதில் உள்ள மாற்றுத்தெரிவுகள் பற்றி விளக்கமளிக்கிறார் சிரேஷ்ட சட்டத்தரணி மரியதாஸ் யூட் டினேஷ்.

அது மாத்திரமன்றி, கனேடிய அரசாங்கத்தின் பங்களிப்புடன் சர்வதேச சட்டத்தில் உட்புகுத்தப்பட்ட விடயமான பாதுகாக்க வேண்டிய கடப்பாடு' பற்றி சுட்டிக் காட்டிய அவர், இக்கோட்பாட்டின் பிரகாரம் இலங்கையில் இடம் பெற்ற மனிதப் பேரவலத்தைத் தடுப்பதற்கு ஐ.நா தவறி விட்டது என்பதை அப்போதைய செயலாளர் நாயகம் பான் கி-மூன் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டிருந்ததாகவும், எனவே மேற்படி கோட்பாட்டின்படி உள்நாட்டில் பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படாதவிடத்து, அடுத்த கட்டமாக அதனைச் செய்ய வேண்டிய கடப்பாடு ஐ.நாவுக்கு இருப்பதாகவும் தெரிவித்தார்.

### செம்மணியோடு நீதி முடக்கப்படக் கூடாது

அதேவேளை கடந்த காலங்களில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் பொறுப்புக்கூறல் விவகாரம் பின்தள்ளப்பட்டுவந்த நிலையில், தற்போது கண்டறியப்பட்டிருக்கும் செம்மணி மனிதப்புதைகுழியானது 1948 ஆம் ஆண்டு முதல் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டு வரும் இனவழிப்பை வெறுமனே இறுதிக் கட்ட யுத்தம் (20ம் பக்க பார்க்க)

# உள்ளக விசாரணைகளின் பொறுப்பாளராக சர்வதேசம் இருக்க முடியாது!

## வெள்ளைக்கொடி " விவகாரம் மாத்திரமல்ல அனைத்தும் விசாரிக்கப்படும்

பொறுப்புக்கூறல் விசாரணகளை முன்னெடுப்பது ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையை திருப்திப்படுத்துவதற்காகவோ அல்லது மகிழ்விப்பதற்காகவோ அல்ல. எமக்கு வாக்களித்த மற்றும் வாக்களிக்காத மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கே கடமைப்பட்டுள்ளோம். செம்மணி மனித புதைக்குழி மாத்திரம் அல்ல வேறு பல மனித புதைக்குழிகள் குறித்து விசாரணைகள் இடம் பெறுகின்றன. இந்த விசாரணைகள் ஊடாக பக்கச்சார்பின்றி நேர்மையாக அரசாங்கத்தினால் செயல்பட முடியும் என்பதனை உலகிற்க வெளிப்படுத்தியுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.



மேலும் இந்த விசாரணைகளுக்கு தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை தேவைக்கு ஏற்ப சர்வதேசத்திடமிருந்து பெற்றுக் கொள்ளவும், விசாரணை பொறிமுறைக்கு பொறுப்பானவர்களாக இலங்கை இருக்க வேண்டுமே தவிர அந்த பொறுப்பில் சர்வதேசம் இருக்க முடியாது. முதலில் ஜெனிவா சக்கரத்தில் இருந்து விடுப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். அவர் வழங்கிய விசேட செவ்வியிலேயே பிரதமர் ஹரிணி அமரசூரிய மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உண்மையிலேயே உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமையினால் தான் ஜெனிவா குற்றச்சாட்டுக்களும் நெருக்கடிகளும் வலுப் பெற்றுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு சென்று, வெறும் அறிக்கைகளை சமர்பித்து வந்துள்ளார்களே தவிர அங்கு வழங்கும் உறுதிமொழிகளை உள்நாட்டில் நிறைவேற்றுவதில் ஆர்வம் செலுத்தவில்லை.

ஜெனிவாவில் மனித உரிமைகள் அமர்வுகள் நடக்கும் போது இலங்கையிலிருந்து செல்லும் தரப்பு அறிக்கையை சமர்பித்து விட்டு நாடு திரும்பியதும் அதனை மறந்து விடுகின்றனர். மறுபடியும் ஜெனிவா அமர்வுகள் ஆரம்பிக்கும் போது தான் வழங்கிய உறுதிமொழிகளும் அறிக்கையும் அவர்களின் நினைவுக்கு வருகிறது. இதுவரை காலமும் இவ்வாறானதொரு நிலைமையே நாட்டில் இருந்துள்ளது.

சர்வதேசத்துடன் தொடர்புப்பட்ட விடயங்களாக இவற்கை கருதும் போது இதுவொரு தவறான அணுகுமுறையாகும். ஜெனிவா மனித உரிமைகள் விடயத்தில் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவது, கொள்கை ரீதியாக செயல்படுவது என்பது தொடர்பில் அரசாங்கம் ஏற்கனவே தீர்மானங்களை எடுத்துள்ளது. உதாரணமாக செம்மணி மனித புதைக்குழி உட்பட பல சம்பவங்கள் குறித்து விசாாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஊடகங்களை அழைத்து சென்று அந்த விசாரணைகளை பிரசாரம் செய்ய வேண்டிய தேவை இல்லை.

மறுபுறம் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எந்தவொரு விசாரணைக்கும் அரசாங்கம் தடையாக இருக்க வில்லை என்பதை அனைவரும் புரிந்துக் கொள்ள வேண்டும். மனித உரிமைகள் சார்ந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆதாரங்கள் இருப்பின் முறைப்பாடு செய்யலாம். சுயாதீனமான விசாரணைகள் முன்னெடுக்கப்படும். ஆகவே யாரையும் பாதுகாப்பதற்காக அரசாங்கம் கடமைப்பட்டில்லை.

அது மாத்திரமன்றி ஜெனிவா குற்றச்சாட்டுகளுக்கு அப்பால் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதே அரசாங்கத்தின் முதன்மையான கடமையாக உள்ளது. எனவே ஜெனிவா சக்கரத்தில் இருந்து முதலில் வெளிவர வேண்டும். பொறுப்புக்கூறல் விசாரணகளை முன்னெடுப்பது ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையை திருப்திப்படுத்துவதற்காகவோ அல்லது மகிழ்விப்பதற்காகவோ அல்ல. மாறாக எமக்கு வாக்களித்த மற்றும் வாக்களிக்காத மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கே கடமைப்பட்டுள்ளோம். விசேடமாக இந்த அரசாங்கம் அவர்களுக்கு உரியது என்பதை பாதிக்கப்பட்ட மக்கள் உணர வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் அனைத்து விசாரணைகளும் முன்னெடுக்கப்படும். இதுவே எமது நிலைப்பாடாகும். ஆனால் இதுவரைக் காலமும் அந்த விசாரணைகள் இடம் பெறவில்லை என்பது வேறு ஒரு விடயமாகும். செம்மணி மனித புதைக்குழி மாத்திரம் அல்ல வேறு பல மனித புதைக்குழிகள் குறித்து விசாரணைகள் இடம் பெறுகின்றன.

இந்த விசாரணைகள் ஊடாக பக்கச் சார்பின்றி நேர்மையாக அரசாங்கத்தினால் செயல்பட முடியும் என்பதனையும் , எந்தவொரு விசாரணையையும் முன்னெடுக்க முடியும் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளோம். இந்த விசாரணைகளுக்கு தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை தேவைக்கு ஏற்ப சர்வதேசத்திடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். ஆனால் விசாரணை பொறிமுறைக்கு பொறுப்பானவர்களாக இலங்கை இருக்க வேண்டும். மாறாக அந்த பொறுப்பில் சர்வதேசம் இருக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை நாங்கள் நிராகரிக்கின்றோம்.

எனவே ஜெனிவா குற்றச்சாட்டுக்களில் நிபுணத்துவ ஒத்துழைப்புகளை சர்வதேசத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளவும் வெளிப்படைத்தன்மையுடன் செயல்படவும் தயாராகவே உள்ளோம். ஆனால் விசாரணைகளின் பொறுப்பாளர்களாக இலங்கை இருக்கும். வெள்ளைக்கொடி மாத்திரமல்ல முன்னெடுக்கப்பட வேண்டிய எந்தவொரு விசாரணைகளுக்கும் அரசாங்கம் தடையாக இருக்காது என தெரிவித்தார்.

# அநுரவின் வடக்கு வருகையும் அவர் சொல்லாமல் சொல்லிச் சென்ற செய்தியும்

(18ம் பக்கத் தொர்ச்சி) அறிக்கை தற்போது ஆராயப்படுவதாக அண்மையில் பிரதமர் தெரிவித்திருந்தார். அதே வேளை மாகாணசபைகளுக்கான எல்லைகள் பற்றி மீள ஆராய்வதானால் இன்னும் மூன்ற ஆண்டுகளுக்கு அவற்றுக்கான தேர்தல் இடம் பெற வாய்ப்பில்லை என முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய அண்மையில் கூறியதும்இங்கு கவனிக்கத்தக்கது.

தேசியப் பிரச்சினையான தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை தொடர்பான அனுர தலைமையிலான அரசாங்கத்தின் நிலைப்பாடு தெளிவானது. தமிழ் மக்களுக்கு அரசியற் பிரச்சினையென எதுவும் கிடையாது. அவர்களுக்கு இருப்பதெல்லாம் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் மட்டுமே என்பது தான் அவர்களது சித்தாந்தம். அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தையும் மாகாண சபை முறைமையையும் தொடக்கத்திலிருந்தே எதிர்த்து வருபவர்கள் அவர்கள். அது மட்டுமன்றி உத்தேச புதிய அரசியலமைப்பில் அம்முறைமை இருக்காது என்பதையும் அவர்கள் தெளிவாகவே சொல்லி விட்டார்கள். இந்த நிலையில் மாகாண சபைக்கான தேர்தல் அவற்றுக்கான அதிகாரங்கள், புதி அரசியலமைப்புத் தொடர்பாக அவர் பேச மறந்ததில் ஆச்சரியம் எதவுமிருக்க முடியாது. அபிவிருத்தியைப் பற்றி மட்டுமே அவரால் இங்கு பேசமுடியும். அதனாற்றான் தனது வடக்குக்கான வருகையின் போது அதனை முதன்மைப் படுத்தியிருந்தார். அதன் ஒரு அங்கம் தான் மண்டைதீவில் யாழ்ப்பாண சர்வதேச விளையாட்டுத் திடலுக்கான அடிக்கல். வரவேற்கக் கூடிய விடயம் தான். ஆனால் இத்திட்டத்துக்கான நிதியை அரசாங்கமோ அன்றி இலங்கைக் கிரிக்கட் சபையோ ஒதுக்கவில்லை. இலங்கைக் கிரிக்கட் சபை சார்பில் அப்போதைய அதன் தலைவர் சனத் ஜெயசூரியா அதற்கான நிதியுதவியை இந்தியாவிடம் கேட்டதற்கும் இது வரை முடிவில்லை. அப்படியிருக்க அவர்கள் கூறுவது போல இன்னும் மூன்று மாதமே எஞ்சியுள்ள இவ்வாண்டின் இறுதியில் இத்திடலில் போட்டிகள் எப்படி நடக்கும் என்று புரியவில்லை.

அதேபோல மயிலிட்டி இறங்குதுறையில் தரித்து நிற்கும் பெரும்பாலான கலங்கள் சிங்கள மீனவருடையது. அனுர நினைக்கும் ஒன்று மட்டும் தெளிவாகப் புரிகிறது. அதாவது தமிழ் மக்களாகிய நீங்கள் அபிவிருத்தியை வரவேற்றாலும் அரசியல் உரிமைக்கே முலிடம் கொடுப்பீர்கள். ஆனால் நாங்கள் அபிவிருத்தி பற்றி மட்டுமே பேசுவோம் என்பதே அது. அடுத்த விடயம் அனுரவின் கச்சதீவுக்கான வருகை.இது அனுரவின் ஒரு அரசியல் ஸரன்ட். தெற்குக்கும் தமிழ் நாட்டுக்கும் ஒரு செய்தியை இதன் மூலம் அனுர சொல்ல விழைந்துள்ளார். நடிகர் விஜய் உட்படப் தமிழ் நாட்டு அரசியல் தலைவர்கள் கச்ச தீவைப் பற்றிக் கதைப்பது அவர்களுக்கான அரசியல். அனுர கச்சத்தீவுக் குச் சென்றது தெற்குக்கான அரசியல். இதில் வடக்கு மக்களுக்கு எதுவுமில்லை. உண்மையில் கச்சத்தீவு தொடர்பான இருநாட்டுப் பிரச்சினை நிலவுரிமை பற்றியதல்ல. கடல்வளப் பயன்பாடும் அதற்கான முறைகளும் பற்றியது. சில விட்டுக் கொடுப்புகளுடனான பேச்சுவார்த்தைகள் மூலம் இப்பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்கக் கூடிய வாய்ப்பிருந்தும் இந்திய ஒன்றிய அரசும் இலங்கை அரசும் அதில் அதிக அக்கறை காட்டுவதைத் தவிர்ப்பதற்கான பிரதான காரணம் இரு நாட்டுத் தமிழர்களும் ஒன்றுபடக் கூடாது என்ற அரசியல் நோக்கந்தான். ஒட்டு மொத்தத்தில் வெளிப்படுவது அனுரவிடமிருந்தும் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை என்பதுவும் அதை உணர்ந்து தமிழ் மக்களுக்கான அரசியலைச் செய்யும் நிலையில் தமிழ் அரசியல் தலைவர்களும் இல்லை என்பதுந் தான்.



# அநுரவின் வடக்கு வருகையும் அவர் சொல்லாமல் சொல்லிச் சென்ற செய்தியும்

இம்மாதம் முதலாம் திகதி வடக்கிற்கு வருகை தந்த ஜனாதிபதி அனுரகுமார திசநாயக்க யாழ் மாவட்டத்திலும் முல்லைத்தீவு மாவட்டத்திலும் சில அபிவிருத்தித் திட்டங்களைத் தொட



க்கி வைத்து மக்கள் சந்திப்பிலும் கலந்து கொண்டதுடன் கச்சதீவிலும் கால் பதித்துச் சென்றுள்ளார். அவரின் இவ்வருகையானது அவர் இந்நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்று ஓராண்டு பூர்த்தியாவதை ஒட்டியது என அவர் தரப்பில் கூறப்பட்டது எனினும் இம்மாதம் 22 ஆம் திகதி தான் அந்த ஓராண்டு நிறைவு நாளாகும். ஜனாதிபதியின் வருகை உத்தியோக பூர்வமானது எனினும் அது அரசியல் நோக்கத்தையும் கொண்டது என்பது வெளிப்படையானது.

ஏனெனில் குறித்த திட்டங்களைத் தொடக்கி வைப்பதற்கு ஜனாதிபதி தான் வர வேண்டும் என்றில்லை. ஆனால் அதில் தவறேதும் இல்லை. அரசியலில் அதிகாரத்தைக் கைப்பற்று வதற்கு மட்டுமன்றி அதனைத் தொடர்ந்து தக்க வைப்பதற்கும் அரசியல் செய்ய வேண்டியது தவிர்க்க முடியாதது. அவரின் வருகையின் போது பல விடயங்களை அவர் தனதுரைகளில் வெளிப்படுத்தியிருந்தாலும் வெளிப் படுத்தாத சில முக்கிய செய்திகள் அவர் வருகையிலும், உரைகளில் சொல்லியவற்றிலும், சொல்லாமல் விட்டவற்றிலும் மறைந்திருப்பதை அவதானிக்க முடியும்.

தமிழ் மக்களுக்கெதிரான கட்டமைக் கப்பட்ட இனப்படுகொலைகளின் சான்றுகளில் ஒன்றாக இன்று பேசப் படும் செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்பாக அவர் சொல்லிய சொல்லாத விடயங்களை முதலில் நோக்குவோம்.

அவரின் வருகையின் போது புதை குழியைப் பார்வையிடக்கூடும் என்ற கதை உலாவ விடப்பட்டிருந்ததுடன் அதனை அவர் பாரவையிடவில்லை என்ற விமர்சனமும் சிலரால் முன் வைக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் அதை பார்வையிடுவதால் எந்த நன்மையும் விளையப் போவதில்லை என்பதற்கப்பால் அவரது உண்மையான அரசியல் நோக்கத்திற்கும் அது பாதகமானது. தமிழ் மக்களின் எதிர் பார்ப்பு அவர் அதைப் பார்வையிட வேண்டுமென்பதல்ல அதற்கான நீதியும் நிவாரணமுமே ஆகும்.

அதற்கான உண்மையான நீதி என்பது இலங்கையின் இன்றைய நீதித்துறைக் கட்டமைப்பில் நிச்சயம் கிடைக்காது என்பது தமிழ் மக்களின் கடந்தகால கசப்பான பட்டறிவின் விளைவு. இதன் காரணமாகவே தமிழ் மக்கள் தம்மினத்துக்கெதிரான அத்தனை குற்றங்களுக்கும் சர்வதேச விசாரணையைக் கோரி நிற்கின்றனர். இந்தவகையில் செம்மணி மனிதப் புதைகுழிக்கும் சர்வதேச விசாரணையைக் கோரி அனைத்துக் கட்சிகளும் இணைந்து கையெழுத்துப் போராட்டத்தைத் தற்போது முன்னெடுத்து வருகிறது. இந்த நிலையில் இது தொடர்பாக அனுர கூறுகையில் வெளிப்படையான விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம். இது போன்ற புதைகுழிகள் நாட்டில் எதிர்காலத்தில் ஏற்படாதிருப்பதே எமது எதிர்பார்ப்பாகும். இதன் மூலம் அவர் தமிழ் மக்களுக்குச் சொல்லாமல் சொல்லிய செய்தி என்னவெனில் நீங்கள் எவ்வளவு கையெழுத்துச் சேகரித்தால் என்ன எத்தகைய போராட்டத்தை நடத்தினாலென்ன எல்லா விசாரணைகளும் எமது கண் காணிப்பின் கீழ் உள்நாட்டிலேயே நடைபெறும் என்பதாகும்.

அதுமட்டுமல்ல பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் கூறுவது போல செம்மணி புதைகுழி பற்றி அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. எங்களை ஆதரித்தால் எதிர்காலத்தில் இது போன்று நடக்காது பார்த்துக் கொள்வோம் என்று அனுர சொல்லாமல் சொல்லியுள்ளார்.

இவ்வாறு கூறும் அனுரகுமார தான் செம்மணி மனிதப் புதைகுழியின் பிரதான சூத்திரதாரியான பிரகேடியர் சசீந்திர விஜேசிரிவர்த்தனவை (அப்போது லெப்ரினற்) சிறிலங்கா இராணுவத் தலைமையகத்தின் ஒரு முக்கிய பிரிவுக்கு(Directorate of Movement) பணிப்பாளராக நியமித்திருக்கிறார். 2000ஆம் ஆண்டில் செம்மணி புதைகுழி வழக்கில் இன்னும் இருவருடன் இவரும் சோமரத்ன ராஜபக்ஷேயினால் அடையாளம் காட்டப்பட்டு குற்றஞ் சாட்டப்பட்டு யாழ்ப்பாண நீதிமன்றினால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தவர். பின்னர் கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றத்தினால் பிணை வழங்கப்பட்ட நிலையில் குறித்த வழக்கு முடக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலாக குறித்த வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டு தண்டனை அனுபவித்து வரும் சோமரத்ன ராஜபக்ஷே இக்குற்றங்களுடன் தொடர்புடையுடைய உண்மையான குற்றவாளிகளைப் பக்கச் சார்பற்ற விசாரணை நடைபெறுமிடத்து இனங்காட்டத் தயார் எனத் தனது மனைவி மூலம் வெளிப்படுத்தியிருந்தும் அது தொடர்பாக இதுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்காத சிறிலங்காவின் நீதித்துறையின் வெளிப்படையான விசாரணை பற்றித் தான் அனுர இங்கு குறிப்பிடுகிறார். ஜனாதிபதி யாழ்ப் பாணத்தில் வைத்துக் கூறிய இந்தக் கருத்து தனியே தமிழ் மக்களுக் கானது மட்டுமல்ல அது சர்வதேச மனித உரிமைப் பேரவைக்கானதும் என்பதை மனதில் கொள்ள வேண்டும். அதாவது தனது ஆட்சியின் கீழ் வெளிநாட்டு விசாரணை அல்லது வெளிநாட்டுப் பொறிமுறைகளுடனான விசாரணை என்பவற்றுக்கு இடமில்லை என்பதை அனைவருக்கும் அவர் சொல்லாமல் சொல்லியுள்ளார்.

அவர் வடக்கில் எல்லாவிடத்திலும் கூறிய இன்னொரு முக்கிய விடயம், தோற்கடிக்கப்பட்ட அரசியல் சக்திகள் அதிகாரத்தைக் கைப்பற்ற இனவாதத்தைக் கையிலெடுத்துள்ளனர் என்பது. தெற்கில் சில கட்சிகள் இனவாதத்தைக் கையிலெடுக்கின்றன என்று கூறுவதை ஓரளவு ஏற்றுக் கொள்ள முடியும். ஆனால் வடக்கில்? இதில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை. அனுர உட்பட சிங்கள பௌத்த ஆட்சியாளர் அனைவருமே தமிழ் மக்களின் நியாயமான உரிமைக் கோரிக்கைகளை இனவாதமாகவே பார்த்தனர். பார்க்கின்றனர். அதுவும் தற்போது தேசிய மக்கள் சக்தி என்ற பேரவையைப் போர்த்திக் கொண்டுள்ள, பேரினவாதத்தில் ஊறிய ஜே.வி.பியின் மூத்த உறுப்பினரான அனுர வடக்கில் இனவாதம் பேசுகின்றனர் எனக் கூறுவது தான் வேடிக்கை.

இலங்கையின் இன்றைய நிலைக்கான பிரதான காரணமே தங்களின் இந்த மனோநிலை தான் என்பதை அனுரவும் உணரத் தயாராக இல்லை என்பதை அவரின் இக்கூற்று வெளிப்படுத்துகிறது. இதில் அவர்கூறிய தோற் கடிக்கப்பட்ட அரசியல்வாதி கள் (வடக்கில்) என்பதையும் ஆழமாகப் பாரக்கவேண்டும். வடக்கில் தேர்தலில் தோற்றவர்கள், வென்றவர்கள் அனைவருமே தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளைத்தானே முன் வைக்கின்றனர். அப்படியானால் இதன் மூலம் அனுர கூறவருவது என்னவெனில் தாங்கள் தமிழ் அரசியல்வாதிகள் அனைவரையும் தோற்கடித்து விட் டோம் என்பதும் தற்போது தாங்களே தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்பதையுமல்லவா?

பாதுகாப்புத் தரப்பினர் கையகப்படுத்தியுள்ள தமிழ் மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பாகவும் அனுர ஒரு கருத்தைக் கூறியிருந்தார். விடுவிக்கப்படக் கூடிய காணிகளை விடுவிப்போம் என்பதே அது. விடுவிக்கப் படக் கூடிய காணிகள் என்பதற்கான வரையறைகள் எவை? அதனை யார் தீர்மானிப்பது? அதற்காக தமிழ் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய உயர் மட்டக் குழு ஏதாவது உள்ளதா? உண்மையில் இங்கு பாதுகாப்புத் தரப்பினரின் தீர்மானமே இறுதியானது. அதன் தீர்மானம் எவ்வாறு இருக்கும் என்பது அனைவரும் அறிந்ததே. அதற்கான மிகப்பிந்திய உதாரணம் தான் வன்னியில் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட காணிகளை மீண்டும் கையகப் படுத்துவதற்கு பாதுகாப்புத் தரப்பினர் முயற்சிப்பதான பாராளுமன்ற உறுப் பினர் ரவிகரனின் குற்றச்சாட்டும் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தீர்மானமும். எனவே தனது கூற்றின்மூலம் அனுர காணி இழந்தவர்க்கு சொல்லாமல் சொல்லிய செய்தி என்னவெனில் நீங்கள் கேட்பதை எல்லாம் நாங்கள் தர முடியாது. நாங்கள் விடுவதையே நீங்கள் பெற வேண்டும் என்பதாகும். சென்ற இடங்களில் மக்களுக்குக் கை கொடுக்கும், கையில் குழந்தைகளைத் தூக்கிப் படம் காட்டும் அனுர மயிலிட்டியில் தங்கள் காணிகளைப் பறி கொடுத்து இருக்க இடமில்லாமல் அலைந்த மக்களின் குரலைக் கேட்க மனமில்லாது அவர்களைத் துரத்தியடித்ததன்மூலம் தமிழ்மக்களுக்கு அவர் சொல்வது என்ன?

அனுர சொல்லியவற்றின் பின்னால் உள்ள சிலவற்றைப் பார்த்தோம். அவர் சொல்ல மறந்த (விரும்பாத) விடயங் களின் பின்னால் உள்ளவற்றையும் பார்க்க வேண்டும். தமிழ் மக்களின் முக்கிய எதிர்பார்ப்புகளான மாகாண சபைத் தேர்தல், அதற்கான அதிகாரங்கள், புதிய அரசியலமைப்பு போன்ற எவை பற்றியும் அனுர வாய் திறக்க வில்லை. ஆனால் அபிவிருத்தி, ஒற்றுமை பற்றி அதிகம் எடுத்துக் கூறினார். அவ்வப்போது அமைச்சர்கள் சிலர் மாகாண சபைத் தேர்தல் அடுத்த ஆண்டில் நடக்கும் என்று உச்சரித்தாலும் அதற்கான நோக்கம் அரசாங்கத்திடம் இருப்பதாகத் தெரியவில்லை. இருந்திருப்பின் அனுர அதைக் கட்டாயம் கூறியிருப்பார்.

மாகாணசபைத் தேர்தலைப் பழைய முறையில் நடத்துவதற்கான தனிநபர் முன்மொழிவை பாராளுமன்றத்தில் சாணக்கியன் சமர்பித்ததற்கு மேலாக அரசாங்க உறுப்பினர் ஒருவரும் சமர்ப் பித்திருந்தும் அதனை இதுவரை விவாதத்திற்கு எடுக்கவில்லை என்பதுடன் அதற்கு மாறாக எல்லைகள் மீள வரையறை செய்த குழுவின் (17ம் பக்கம் பார்க்க)

# இலங்கை - வங்கதேசம் வரிசையில் நேபாளமா? இந்தியாவின் அண்டை நாடுகளில் என்ன நடக்கிறது?

நேபாளத் தலைநகர் காத்மாண்டுவில் சமூக ஊடகங்களுக்கு தடை விதிக்கப்பட்டதற்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களுக்கும் காவல்துறையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் குறைந்தது 17 பேர் உயிரிழந்தனர். நாடு முழுவதும் இந்த எண்ணிக்கை 19 ஆக உயர்ந்தது.

கடந்த வாரம் நேபாள அரசு 26 சமூக ஊடக தளங்களுக்குத் தடை விதித்தது. ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் மற்றும் வாட்ஸ்அப் போன்ற பிரபலமான சமூக ஊடக மற்றும் மெசேஜிங் தளங்களும் இதில் அடங்கும்.

சமூக ஊடகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இளைஞர்கள் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தனர்.

நேபாளத்தில் திங்கள்கிழமை நடந்த போராட்டத்தின் காட்சிகள், கடந்த ஆண்டு வங்கதேசத்தில் நடந்த போராட்டத்தை நினைவூட்டின. இதற்கு முன்னர் 2022ஆம் ஆண்டில் இலங்கையிலும் மக்கள் அரசுக்கு எதிராக பெரிய போராட்டங்களை நடத்தினர்.

சமீபத்திய ஆண்டுகளில், இந்தியாவின் அண்டை நாடுகளில் உள்ள இளைஞர்கள் போராட்டங்கள் மூலம் பல வெற்றிகளைப் பெற்றுள்ளனர்.

தெற்காசியப் புவிசார் அரசியல் நிபுணரும் தெற்காசியப் பல்கலைக்கழகத்தில் இணைப் பேராசிரியருமான தனஞ்சய் திரிபாதி, இந்த தெற்காசியப் பகுதி இளைஞர்கள் நிறைந்த பகுதி. ஆனால் அரசுகளால் இந்த இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியவில்லை. இந்த மூன்று நாடுகளின் போராட்டங்களிலும் இது தான் பொதுவான ஒற்றுமை’ என்கிறார்.

தனஞ்சய் திரிபாதியின் கூற்றுப்படி, நேபாளத்தில் 15 முதல் 24 வயது வரையிலான இளைஞர்களின் எண்ணிக்கை மிக அதிகம். ஆனால் இவர்களுக்கு வேலை வாய்ப்புகள் மிகக் குறைவாக உள்ளன.

நேபாளத்தில் மற்றொரு நெருக்கடி என்னவென்றால், முடியாட்சி முடிந்த பிறகு எந்த ஒரு அரசாங்கமும் ஐந்து ஆண்டுகள் முழுமையாகப் பதவியில் இல்லை. இதன் காரணமாக நாட்டில் அரசியல் ஸ்திரமின்மை நிலவுகிறது. மேலும் ஊழல் குற்றச்சாட்டுகளும் தொடர்ந்து எழுகின்றன. இப்போது, அரசு இளைஞர்களிடையே பிரபலமான செயலிகளையும் தடை செய்துவிட்டது.’ என்று அவர் கூறுகிறார்.

நேபாளத்தில் இருந்து பெருமளவிலான மக்கள் இந்தியா உட்படப் பல நாடுகளுக்கு வேலை தேடிச் செல்கின்றனர். இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகள் இல்லாதது ஒரு புறம் இருக்க, சமீபத்திய தடைகளுக்குப் பிறகு அவர்களால் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்ளக் கூட முடியவில்லை என்று அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

## இளைஞர்களின் பங்கு

கடந்த ஆண்டு வங்கதேசத்தில் நடந்த போராட்டத்தில் இளைஞர்களின் பங்கு மிக முக்கியமானதாக இருந்தது. அதேசமயம், இலங்கையின் போராட்டத்தில் பொருளாதாரப் பிரச்னைகள் ஆதிக்கம் செலுத்தின.

டெல்லியில் உள்ள அப்சர்வர் ரிசர்ச் ஃபவுண்டேஷன் அமைப்பின் ஆய்வு மற்றும் வெளியுறவுக் கொள்கைப் பிரிவின் துணைத் தலைவர் பேராசிரியர் ஹர்ஷ் பந்த் கூறுகையில், ‘இலங்கை, வங்கதேசம் மற்றும் நேபாளம் ஆகிய மூன்று நாடுகளின் போராட்டங்களுக்கான காரணங்கள் வேறுபட்டிருந்தாலும், மக்கள் எதிர்பார்ப்புகளுக்கும் அரசின் செயல்பாடுகளுக்கும் இடையே உள்ள இடைவெளிதான் இந்த போராட்டங்களுக்குப் பொதுவான காரணம்.’ அவரது கூற்றுப்படி, ‘இந்த மூன்று போராட்டங்களிலும் ‘இளைஞர்கள்’ தான் மிகப் பெரிய காரணி. ஆட்சி மாற்றத்தின் மிகப் பெரிய தாக்கம் இளைஞர்கள் மீதே விழுகிறது. இந்த இளைஞர் பிரிவினர் தான் அரசின் மீது கோபமாக உள்ளனர்.’

அரசு இளைஞர்களின் கோபத்தைத் தணிக்க முயற்சி செய்யாவிட்டால், இந்த போராட்டம் இன்னும் பெரிதாக



வளரக்கூடும் என்று ஹர்ஷ் பந்த் நம்புகிறார். இருப்பினும் நேபாளப் போராட்டத்தில் தலைவரோ அல்லது அமைப்போ இல்லை என்றும் அவர் கூறுகிறார். தனஞ்சய் திரிபாதியும் இந்த கருத்தை ஒப்புக் கொள்வதாகத் தெரிகிறது.

அரசு புரிதலுடனும் நெகிழ்வுத்தன்மையுடனும் நடந்து கொண்டால், இந்தப் போராட்டத்தை அமைதிப்படுத்த முடியும். இதில் இறந்தவர்களின் மரணம் குறித்து விசாரிக்க ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட வேண்டும். அரசு இளைஞர்களிடம் உணர்வுபூர்வமாக நடந்து கொள்ள வேண்டும். அது தற்போது காணப்படவில்லை.’ என்று அவர் கூறுகிறார்.

இதற்கு முன்னதாக, வங்கதேசத்தில் அரசு போராட்டக்காரர்களை கடுமையாகக் கையாள முயற்சித்தது. ஆனால் அது இளைஞர்களின் கோபத்தை இன்னும் அதிகரித்தது.

## வங்கதேச மாணவர் போராட்டம்

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் மாணவர் போராட்டம், வன்முறை மற்றும் நூற்றுக் கணக்கானோர் இறப்பு ஆகியவற்றிற்கு மத்தியில், வங்கதேசத்தின் அப்போதைய பிரதமர் ஷேக் ஹசீனா தனது பதவியையும் நாட்டையும் விட்டு வெளியேற வேண்டியிருந்தது.

அரசு வேலைகளில் இடஒதுக்கீட்டிற்கு எதிராகத் தொடங்கிய இந்த மாணவர் போராட்டம், நாடு தழுவிய போராட்டமாக மாறியது. இறுதியில் ஷேக் ஹசீனாவின் அரசு கவிழ்வதற்கு காரணமாக இருந்தது.

இதன் மூலம் அவரது 15 ஆண்டு கால தொடர் ஆட்சி மற்றும் ஐந்தாவது பதவிக்காலம் திடீரென முடிவுக்கு வந்தது.

கடந்த ஆண்டு ஜீலை 1ஆம் தேதி தொடங்கிய மாணவர் போராட்டத்திற்குப் பிறகு, ஜீலை 21ஆம் தேதி வங்கதேச உச்ச நீதிமன்றம் அரசு வேலைகளில் இடஒதுக்கீட்டை கிட்டத்தட்ட ரத்து செய்தது. ஆனால் இந்தத் தீர்ப்பு வந்தபிறகும் மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் கோபம் தீரவில்லை. ஷேக் ஹசீனாவின் ராஜினாமா கோரிக்கை மேலும் வலுப்பெற்றது.

பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் தொடங்கிய போராட்டம், நாட்டின் மூலை முடுக்குகளை அடைந்தது. எதிர்க்கட்சிகளும் வீதியில் இறங்கின.

மாணவர் அமைப்புகள் ஆகஸ்ட் 4 முதல் முழு ஒத்துழையாமைப் போராட்டத்தைத் தொடங்குவதாக அறிவித்திருந்தன.

அரசு இந்தப் போராட்டங்களை கடுமையாக ஒடுக்க முயன்றது. துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது, இராணுவம் வீதியில் இறங்கியது, ஆனால் மக்கள் பின்வாங்கவில்லை. ஆகஸ்ட் 4ஆம் தேதி நடந்த வன்முறையில் குறைந்தது 94 பேர் கொல்லப்பட்டனர்.

மாணவர் போராட்டம் தொடங்கியதில் இருந்து உயிரிழப்புகள் எண்ணிக்கை 300ஐத் தாண்டியது. ஆகஸ்ட் 5ஆம் தேதி ஷேக் ஹசீனா தனது பதவியை ராஜினாமா செய்தார்.

## இலங்கையில் நடந்த போராட்டம்

2022ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இலங்கையில் பணவீக்கம் வேகமாக அதிகரித்தது. அந்நிய செலாவணி கையிருப்பு காலியானது. நாட்டில் எரிபொருள், உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துகளுக்கு பற்றாக்குறை ஏற்பட்டது.

சுதந்திரத்திற்குப் பிறகு ஏற்பட்ட இந்த மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியில், மக்கள் ஒரு நாளைக்கு 13 மணி நேரம் வரை மின்வெட்டை எதிர்கொண்டனர்.



இந்த நிலைக்கு அதிபர் கோட்டாபய ராஜபக்சேவையும் அவரது குடும்பத்தினரையும் பலர் குற்றம் சாட்டினர். அவரது மோசமான கொள்கைகள் தான் அந்நிய செலாவணி கையிருப்பு காலியானதற்குக் காரணம் என்று நம்பப்பட்டது.

ராஜபக்சே குடும்பத்தினர் மீது ஊழல் மற்றும் பொதுமக்களின் பணத்தை தவறாகப் பயன் படுத்தியதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இருப்பினும், இந்த குற்றச்சாட்டுகளை அவர்கள் மறுத்தனர். கோவிட் பெருந்தொற்றுக்குப் பிறகு சுற்றுலா வருவாய் குறைந்தது மற்றும் யுக்ரேன் போரால் எண்ணெய் விலைகள் உயர்ந்ததால் இந்த நெருக்கடி ஏற்பட்டதாக அவர்கள் வாதிட்டனர்.

அப்போது போராட்டங்கள் இரவும் பகலும் தொடர்ந்து நடந்தன. மாலையில் கூட்டம் அதிகரித்தது. பொது மக்கள் மற்றும் மாணவர்கள் முதல் பாதிரியார்கள் மற்றும் புத்த பிக்குகள் வரை அனைவரும் இந்தப் போராட்டங்களில் பங்கேற்றனர்.

நாடு முழுவதும் ‘கோட்டா கோ ஹோம்’ (கோட்டா வீட்டுக்கு போ) என்ற கோஷம் எதிரொலித்தது. இந்தப் போராட்டங்கள் சிங்களர், தமிழர் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய மூன்று முக்கிய சமூகங்களை ஒன்றிணைத்தன.

சில வாரங்களுக்குப் பிறகு, போராட்டக்காரர்கள் அதிபர் மாளிகைக்குள் நுழைந்த போது, இந்தப் போராட்டம் ஒரு முடிவுக்கு வந்தது. சில நாட்களுக்குப் பிறகு, கோட்டாபய ராஜபக்சே நாட்டை விட்டு வெளியேறி, சிங்கப்பூரிலிருந்து தனது ராஜினாமா கடிதத்தை அனுப்பினார்.

இந்த நிகழ்வு ‘அரகலய’ அல்லது மக்கள் போராட்டத்தின் வெற்றியாகப் பார்க்கப்பட்டது. நன்றி:- பிபிசி

# செம்மணியோடு முடக்கப்படுமா யுத்த கால மீறல்களுக்கான நீதி?

16ம் பக்கத் தொடர்ச்சி) இடம்பெற்ற 6 மாதகாலத்துக்குள் முடக்கி விடக் கூடாது எனத் தொடர்ச்சியாகக் கூறி வரும் தரப்பினருக்குக் கிடைத்த பெருவாய்ப்பு என குறிப்பிட்ட தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இலங்கை தொடர்பில் இதுவரை காலமும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டு வந்த தீர்மானங்களின் பலவீனம் மற்றும் குறுகிய தன்மையை வெளிப்படுத்துவதற்கும், அத்தீர்மானங்களைப் பரந்துபட்ட அடிப்படையில் விரிவுபடுத்துவதற்கும் நாம் செம்மணி விவகாரத்தைப் பயன்படுத்த வேண்டும்.

அதேவேளை இலங்கையில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பில் சுமார் 10 ஆண்டுகளுக்கும் மேலாக ஆதாரங்கள் திரட்டப்பட்டிருக்கும் நிலையில், இனி இவ்விவகாரம் சர்வதேச மட்டத்தில் நீதிமன்றப்பொறிமுறை ஒன்றின் ஊடாக விசாரிக்கப்படும் அதேவேளை, அதில் செம்மணி மனிதப்புதைகுழியும் உள்வாங்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்' என்றார்.

### உள்ளகப் பொறிமுறைகளை உதாசீனப்படுத்தக் கூடாது

இருப்பினும் செம்மணி மனிதப்புதைகுழி உள்ளடங்கலாக இலங்கையில் இடம்பெற்ற மீறல் குற்றங்கள் தொடர்பான சர்வதேச நீதி, பொறுப்புக்கூறல் பொறி முறைகளுக்கான சாத்தியப்பாடு குறித்து ஆராய்வதுடன் அவற்றுக்கான முயற்சிகளை மேற் கொள்ளும் அதேவேளை, உள்ளக ரீதியில் இயங்கி வரும் பொறிமுறைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டியது அவசியம் என வலியுறுத்தும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும், மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன், மறுபுறம் மனிதப்புதைகுழி தொடர்பில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகள் குறித்து நிலவும் நம்பிக்கையீனம் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் மத்தியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பக் கூடியவகையில் அச்செயன்முறை மாற்றியமைக்கப்பட வேண்டிய விதம் என்பன பற்றியும் பின்வருமாறு விளக்கமளிக்கிறார்.

'முதலாவதாக செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகளில் சர்வதேச நிபுணத்துவம் மற்றும் சர்வதேச கண்காணிப்பாளர்கள் உள்வாங்கப்பட வேண்டும். அப்புதைகுழி மழைக்காலத்தில் உரியவாறு பேணப்பட வேண்டும். அத்தோடு அங்கு கண்டறியப்படும் எலும்புக்கூடுகள் யாருக்குச் சொந்தமானவை என்பதைக் கண்டறிவதற்கு உள்நாட்டிலேயே மரபணு வங்கியொன்று (DNA Bank) நிறுவப்பட வேண்டும். இவற்றுக்கு அப்பால் இந்த மனிதப்புதைகுழி தொடர்பில் யார் விசாரணைகளை முன்னெடுக்கப் போகிறார்கள் என்பது மிகமுக்கியம். இலங்கையைப் பொறுத்தமட்டில் பொலிஸார் யுத்தத்துடன் தொடர்புடைய மற்றும் அதனுடன் தொடர்பற்ற பல்வேறு மீறல்களில் ஈடுபட்ட வரலாறு இருக்கிறது.






அவ்வாறிருக்கையில் இந்த பொலிஸார் மனிதப்புதைகுழி தொடர்பில் சுயாதீனமானதும், நியாயமானதுமான விசாரணைகளை முன்னெடுப்பார்களா? அவ் விசாரணைகள் மீது பாதிக்கப்பட்ட தரப்பினர் உள்ளடங்கலாகப் பொது மக்கள் நம்பிக்கை வைப்பார்களா? என்ற கேள்வி நிலவுகிறது. எனவே இவ்விசாரணைகளுக்காக பொலிஸ் திணைக்களத்துடன் தொடர்பற்ற, உரிய நிபுணத்துவம் உடைய அதிகாரிகள் மற்றும் சர்வதேச நிபுணர்களை உள்ளடக்கிய சுயாதீன விசாரணைக் கட்டமைப்பொன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டும். அடுத்ததாக சர்வதேச நியாயாதிக்கம் (Universal Jurisdiction) உள்ளடங்கலாக சர்வதேச நீதிக்கான நகர்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் அதேவேளை, உள்நாட்டுப் பொறிமுறைகளை உதாசீனப் படுத்தக் கூடாது. ஏனென்றால் நீதியை நிலைநாட்ட வேண்டிய கடமை அரசாங்கத்துக்கு இருக்கிறது. அவ்வாறிருக்கையில் நாம் அவற்றை உதாசீனப்படுத்துமிடத்து, தாம் மேற்கொண்ட முயற்சிகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை எனவும், ஆகையினால் தம்மால் எதனையும் செய்ய முடியவில்லை எனவும் அரசாங்கம் கூறி விடும்' எனச் சுட்டிக்காட்டினார்.

### மனிதப் புதைகுழிகள் சிக்கலானவை

அதற்கமைய இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்படல்கள் தொடர்பில் இயங்கி வரும் உள்ளகப்பொறி முறையான காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் உறுப்பினர் மிராக் ரஹீம், செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தைப் பொறுத்த மட்டில் அகழ்வுப்பணிகளை முன்னெடுப்பதற்கு அவசியமான நிதியைப் பெற்றுக் கொடுப்பதிலும், கண்காணிப்பு மற்றும் ஆவணப்படுத்தல்களை மேற்கொள்வதிலும் தமது அலுவலகத்தின் பங்களிப்புக் குறித்துத் தெளிவுபடுத்தினார்.

மனிதப் புதைகுழிகளைக் கையாள்வது மிகச்சிக்கலானதாகும். ஏனெனில் இவ் விவகாரத்தில் மனித எச்சங்களை ஆராயவேண்டும். மனிதப் புதைகுழி மண்ணின் தன்மையை ஆராய வேண்டும். வாக்குமூலங்களை சேகரிக்க வேண்டும். முன்னைய ஆணைக் குழுக்களின் அறிக்கைகளைப் பரிசீலிக்க வேண்டும். இவ்வாறு பல்வேறு தரப்பினரின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் ஊடாகவே மனிதப்புதை குழிகளில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள் யாருடையவை? அவர்கள் எவ்வாறு மரணித்தார்கள்? அவர்கள் அங்கு எப்படிப் புதைக்கப்பட்டார்கள்? என்ற கேள்விகளுக்கான பதில்களைப் பெறமுடியும்' எனச் சுட்டிக் காட்டிய மிராக்.

மறுபுறம் மனிதப்புதைகுழி அகழ்வு மற்றும் பகுப்பாய்வுப் பணிகளில் எதிர்வரும் காலங்களில் உள்வாங்கப்பட வேண்டியிருக்கும் தடயவியல் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம், எலும்புக்கூடுகள் தொடர்பான பரிசோதனைகளை முன்னெடுப்பதற்கு அவசியமான ஆய்வுகூட வசதிகள் இன்மை பற்றியும் பிரஸ்தாபித்தார்.

### சகல மீறல்களுக்குமான நீதி

ஆக யுத்தகாலத்தில் இடம்பெற்ற இன வழிப்பு, போர்க்குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான மீறல்கள் என்பன உள்ளடங்கலாக சகல குற்றங்களுக்குமான நீதியையும், பொறுப்புக்கூறலையும் நிலைநாட்டுமாறு தமிழர்கள் கோரி வரும் நிலையில், அது செம்மணிக்கான நீதியாக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டு விடக்கூடாது. மாறாக ஏனைய அனைத்து மீறல்களுக்குமான நீதியை தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் இன்னமும் உரத்து வலியுறுத்துவதற்கான ஆயுதமாக செம்மணி மனிதப்புதைகுழி விவகாரத்தைப் பயன்படுத்த வேண்டும். செம்மணியின் கீழும், இன்னமும் அடையாளம் காணப்படாத மனிதப்புதைகுழிகளின் கீழும் உதவிகோரத் திராணியின்றி உயிரடங்கிப் புதையுண்ட ஆயிரமாயிரம் உறவுகளுக்கான நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய தார்மீகக் கடப்பாடு சகலருக்கும் உண்டு.

## பிரிட்டன் வரலாற்றில் முதன் முறையாக முஸ்லிம்

(6ம் பக்கத் தொடர்ச்சி) புகழ்பெற்ற ஒக்ஸ்போர்ட் பல்கலை க்கழகத்தில் சட்டம் பயின்று சிறிது காலம் வழக்கறிஞராகப் பயிற்சி பெற்றார்.

2010இல் பர்மிங்காம் லேடிவுட் தொகுதியிலிருந்து தொழிலாளர் கட்சியின் எம்.பி.யாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் நுழைந்த முதல் முஸ்லிம் பெண் எம்.பி.க்களில் ஒருவரானார். கட்சியில் பல முக்கிய நிழல் பதவி களை வகித்த ஷபானா, 2024 தேர்த லில் தொழிலாளர் கட்சி ஆட்சிக்கு வந்த பிறகு, நீதித்துறை செயலாளராகவும், லார்ட் சான்சலராகவும் நியமிக்கப் பட்டார். தற்போது, உள்துறைச் செயலாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

## வட கிழக்கில் இராணுவ மயமாக்கலை முடிவுக்கு....

(24ம் பக்கத் தொடர்ச்சி) திரட்டப்பட்டிருப்பதாகவும், சர்வதேச நியாயாதிக்கத்தின் ஊடாக இவற்றைப் பயன்படுத்தி பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு உறுப்பு நாடுகள் முன்வர வேண்டும் எனவும் அழைப்புவிடுத்த உயர்ஸ்தானிகர், மனிதப்புதைகுழிகளின் அகழ்வு நடவடிக்கைகளுக்கு அவசியமான உதவிகளை வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# இனிமேல் தான் காளியின் ஆக்ரோஷ ஆட்டத்தைப் பார்க்கப் போறியள்!

ராஜபக்சக்களால் ஓரம் கட்டப்பட்டு பதவி இறக்கப்பட்ட மிக திறமை வாய்ந்த சிஐடி பணிப்பாளர் ஷானி அபசேகரவின் மீள் வருகை பற்றி பேசுகிறது இந்த கட்டுரை

---

ஷானி அபேசேகரவின் இரண்டாவது இன்னிங்ஸ்' என்பது, ராஜபக்சேக்களின் சாம்ராஜ்யம் அவரை ஒரு குப்பையைப் போலத் தூக்கி எறிந்த பிறகு அவர் மீண்டும் அதிகாரத்திற்கு வந்திருப்பதைக் குறிக்கிறது

எந்த ராஜபக்சேக்கள் அவரைப் பழி வாங்கினார்களோ, அதே ராஜபக்சேக்களின் கதையை முடிக்க அதே அதிகாரி திரும்பி வந்திருக்கிறார். இது ஒரு 'சக்தி வாய்ந்த கர்ம வினை' என்று வர்ணிக்கப்படுகிறது.

ஷானியின் அடையாளம் மற்றும் திறமைகள்:

• ஷெர்லாக் ஹோம்ஸ்': இலங்கை பொலீஸ் திணைக்களத்தில் 'ஷெர்லாக் ஹோம்ஸ்' என்று அழைக்கப்படும் ஒரு கீர்த்திமிகு பொலீஸ் அதிகாரி ஷானி அபேசேகர.

• நிஜ சாதனையாளர்: அவர் ஒரு திரைப்பட கதாபாத்திரம் அல்ல, நிஜ சாதனையாளர். குற்றப் பின்னணி கொண்ட திரைப்படங்கள் மற்றும் தொடர்களுக்கு நமக்கு இருக்கும் அலாதி விருப்பத்தைப் போலவே, ஷானியின் நிஜ வாழ்க்கையும் திகில் நிறைந்ததாக உள்ளது.

• அர்ப்பணிப்புள்ள சேவை: 1986 ஆம் ஆண்டில் சப் இன்ஸ்பெக்டராக பொலீஸ் திணைக்களத்தில் சேர்ந்த ஷானி, ஆரம்பத்தில் பொலீஸ் விசேட அதிரடிப்படையிலும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவிலும் பணி புரிந்தார். அவரது அப்பழுக்கற்ற துணிச்சல் மிகு சேவை அவரை 1999 ஆம் ஆண்டில் சிஐடிக்கு உள்ளீர்க்க வைத்தது.

•நேர்மை மற்றும் சமரசமற்ற தன்மை: சந்திரிகா முதல் கோட்டாபய வரை எந்த ஒரு தலைவருடனும் அவர் சமரசம் செய்து கொண்டதில்லை. அப்படிச் செய்திருந்தால், இலங்கை போன்ற ஒரு தேசத்தில் பில்லியன்களை ஈட்டியிருக்கலாம்.

• எளிமையான வாழ்க்கை: வெறும் ஒரு அறை கொண்ட 550 சதுர அடி வீட்டிலேயே ஷானி வசிக்கிறார்.

•அஞ்சா நெஞ்சன்: இலங்கையில் உள்ள 99 வீதமானோரால் கை வைக்க முடியாது என்று நம்பப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரனில் விக்ரமசிங்கவின் மீதும் கை வைத்தவர் ஷானி. ரணில் உட்பட 90 சதவீத அரசியல்வாதிகளைப் பகைத்துக் கொள்ள வேண்டிய நிர்பந்தம் ஷானிக்கும் அவர் வழியில் செல்லப்போகும் நேர்மையான பொலீஸ் அதிகாரிகளுக்கும் ஏற்படலாம். ஆனால் இது ஷானியின் சர்வீஸில் புதிய விஷயம் அல்ல.

ஷானி அபேசேகர விசாரித்த முக்கிய வழக்குகள்:

ஷானி அபேசேகரவின் விசாரணைகள், இலங்கை மக்களுக்கு அவர் யார் என்பதைப் புரியவைக்கும் அளவுக்கு அமைந்தன. அவர் பல உயர்மட்ட குற்ற வழக்குகளை விசாரித்தவர்:

• பத்திரிகை ஆசிரியர் ரோகணகுமார படுகொலை:

பத்திரிகை ஆசிரியர் ரோகணகுமார் படுகொலையின் சூத்திரதாரி பாதாள உலக தாதா பத்தகானே சஞ்சீவா என்று ஷானி அபேசேகர கண்டு பிடித்தார். ஆனால் விசாரணை உடனடியாக நிறுத்தப்பட்டது.

• ஈவான் ஜான்ஸ் படுகொலை (ராயல் பார்க்):

2005 ஆம் ஆண்டு ராஜகிரிய ராயல் பாக்கில் நடந்த ஸ்வீடன் யுவதியான ஈவான் ஜான்ஸ் படுகொலையின் பின்னணியை சாட்சியே இல்லாமல் விசாரித்து டிஎன்ஏ மாதிரிகள் மற்றும் கைரேகைகள் மூலம் குற்றவாளி ஜீட் மஹா என்பவனைக் கைது செய்தார்.



• ஷியாம் படுகொலை: பம்பலப்பிட்டி கோடீஸ்வர வர்த்தகர் ஷியாம் படுகொலையில் டிஐஜி வாஸ் குணவர்தனவை உள்ளே தள்ளிய பெருமையும் ஷானியையே சேரும்.

• பல முக்கிய குற்றங்கள்: சண்டையிலீட பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க கொலை, பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை, உடத்தளவின முஸ்லிம் இளைஞர்கள் கொலை, பாரத லட்சுமன் கொலை, 11 தமிழ் மாணவர்கள் கொலை, வசீம் தாஜுதீன் கொலை, குடிதண்ணீர் கேட்டு போராடிய ரத்து பஸ்பல மக்களுக்கு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி சூட்டின் பின்னணி, ஊடகவியலாளர்களான போதல ஜயந்தர் மற்றும் கீத் நோயர் போன்றோரின் மீதான தாக்குதல்கள் என்று இலங்கையை ஒரு பாதாள தேசமாக்கிய அத்தனை குற்றங்களின் பைல்களும் ஷானி திறந்தவை தான்.

ஷானியின் முந்தைய சவால்களும் பழிவாங்கல்களும்:

• நல்லாட்சி காலத்தில் புறக்கணிப்பு: 2015-19ஆம் ஆண்டு கால 'நல்லாட்சி' காலத்தில் ஷானி அபேசேகர சிஐடி பணிப்பாளராய் நியமிக்கப்பட்ட போதிலும், அன்றைய ஆட்சியாளர்கள் அவருக்குக் கடமையைச் செய்யச் சரியாய் ஒத்துழைக்கவில்லை. மத்திய வங்கி கொள்ளை தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப் போய் பிரதமர் ரனில் விக்ரமசிங்கவால் விரட்டப்பட்டார்.

• கோட்டாபயவின் பழி வாங்கல்: 2019 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ச வென்றதற்குப் பிறகு, அவர்களுக்கு எதிராக விசாரணைகள் நடத்திய பொலீஸ் உயரதிகாரிகள் தூக்கி பந்தாடப்பட்டார்கள். கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாகிப் பதவிப் பிரமாணம் எடுத்ததும், பிரதமரையும் கேபினெட்டையும் நியமிப்பதைத் ஒத்தி போட்டு விட்டு, ஷானியை அப்படியே தூக்கி இடமாற்றம் செய்தது தான் முதல் காரியம்.

ஷானி அப்போது 2019 ஏப்ரல் மாதம் 21 ஆம் தேதி நடந்த ஈஸ்டர் குண்டு வெடிப்பானது அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்காக நடத்தப்பட்ட ஒரு சதி வலையா என்ற கோணத்தில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தார்.

• பதவி இறக்கம் மற்றும் சிறை: ஷானியை காலிக்கு இடமாற்றம் செய்து, கடிதம் பிரிக்கும் ஒரு பியோன் தரத்துக்கு மிதித்து எரியப்பட்டார். ஷானி மற்றும் சிஐடி அதிகாரிகளின் இட மாற்றங்களால் ஈஸ்டர் உட்பட மொத்த குற்ற விசாரணைகளும் நிலை குலைந்து போயின. ராஜபக்சேக்களும் எடுபிடிகளும் அனைத்து வழக்குகளிலும் இருந்து விடுதலையானார்கள். வேறு வழியின்றிப் பணி ஓய்வு பெற்ற ஷானியை கோட்டாபய விடவில்லை வாஸ் குணவர்த்தனவின் கேசை மையமாக வைத்து சேவை இடை நிறுத்தம், மூன்று வருடம் ஆறு மாதம் ஓய்வுதியம் இடை நிறுத்தம், 10 மாத சிறை என்று பழிவாங்கல் தொடர்ந்தது.

• ரனிலின் பாராமுகம்: கோட்டாபய மக்கள் எழுச்சியால் தப்பியோடிய பிறகு, ரணில் ஜனாதிபதியான போதும் ஷானி விஷயத்தில் பாராமுகமாகவே இருந்தார். கோட்டாபய காலத்தில் மூடப்பட்ட எந்த ஒரு கோப்பும் திறக்கப்படவே இல்லை.

இரண்டாவது இன்னிங்ஸின் துவக்கம் மற்றும் நகர்வுகள்:

• அனுர குமார திசாநாயக்கவின் ஆதரவு:

யாரோடு சேர்ந்தால் கணக்கு தீர்க்க முடியுமோ அவர்களோடு சேரத் தீர்மானித்த ஷானி, ஜனாதிபதி தேர்தலின் பிரச்சாரங்கள் உச்சம் பெற்றிருந்த வேளை, ஓய்வு பெற்ற பொலீஸ் அதிகாரிகள் என்ற விசேட மாநாட்டைக் கூட்டி, அதற்குத் தலைமையேற்று அனுர குமார திசாநாயக்கவுக்குத் தன்னுடைய ஆதரவைத் தெரிவித்தார்.

• மீண்டும் சிஐடி பணிப்பாளர்:

அனுர குமார திசாநாயக்க ஜனாதிபதியால் ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் போலீஸ் சபைக்கு அழைக்கப்பட்ட ஷானி அபேசேகரவுக்கு குற்றப் புலனாய்வு பகுப்பாய்வு மற்றும் குற்றத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் பதவி வழங்கப்பட்டது.

இந்தப் பணியை மிகத் திறம்பட முடித்த ஷானி, மீண்டும் சிஐடி பணிப்பாளராக அனுரவுக்கு சல்யூட் அடித்துத் திரும்பினார்.

• ராஜபக்சே கோட்டையில் முதல் அடி: ஷானியின் முதல் நகர்வு ராஜபக்சேக்களின் கோட்டையிலேயே விழுந்திருக்கிறது. மகிந்த ராஜபக்சவின் ஏக்கர் கணக்கான ஆடம்பர பங்களா இனி இலங்கையின் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (சிஐடி) இன் புதிய தலைமை அலுவலகமாக மாறப் போகிறது. இது 'இனி உங்களின் கோட்டைக்குள்ளிருந்தே உங்களை வேட்டையாடுவோம்' என்கிற ஒரு ஸ்மார்ட்டான ராஜதந்திரச் செய்தியாகப் பார்க்கப்படுகிறது

• அரசியல் தலையீடு இல்லை என்ற நம்பிக்கை: எந்த ராஜபக்சேக்களால் ஷானி பழி வாங்கப்பட்டாரோ, அதே ராஜபக்சேக்கள் 1970க்கு பிறகு நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றில் போட்டியிட முடியாத அளவுக்கு ஓடி ஒளிந்து கொண்டிருக்கும் நிலையில், ஷானி தனது வேலையைத் தொடங்கியிருக்கிறார். இந்த முறை எந்த அரசியல் தலையீடும் இருக்காது என்று நம்பலாம்.

தற்போதைய சவால்கள் (இரண்டாவது இன்னிங்ஸில்):

ஷானி அபேசேகரவின் முன்னால் இரண்டு பிரம்மாண்டமான சவால்கள் காத்திருக்கின்றன:


1.பாதாள உலக கும்பல்களை விசாரிப்பது:

இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டு சிஐடி காவலில் உள்ள பாதாள உலக கும்பலைச் சேர்ந்தவர்கள், தாங்கள் அரசியல்வாதிகளின் ஏவல் நாய்களாகச் செயல்பட்டதாகவும், யாருக்காக வேலை செய்தோம் என்ற உண்மைகளை கக்கத் தொடங்கியுள்ளதாகவும் தெரிகிறது. இவர்களின் வாக்குமூலங்கள் இலங்கையின் பலம் பெரும் தலைவர்களின் முகத்திரையை கிழிக்கப் போகின்றன.


2. ஹன்சீர் அசாத் மௌலானாவை மீண்டும் நாட்டுக்கு கொண்டு வருவது: ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் முக்கிய சாட்சியான ஹன்சீர் அசாத் மௌலானாவை மீண்டும் நாட்டுக்கு கொண்டு வருவது இரண்டாவது மற்றும் இதைவிடப் பெரிய சவால். இந்தத் தாக்குதல் ஒரு அரசியல் சதி என்று மௌலானா அளித்த வாக்கு மூலம் இலங்கையின் சரித்திரத்தையே மாற்றக்கூடியது.

மௌலானா சுவிட்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளதால், அவரை நாட்டுக்கு அழைத்து வருவது சற்று சிக்கலான விவகாரம். இருப்பினும், சிஐடி இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகிறது. ஷானி தனது பாணியில் ராஜபக்சேக்களுக்கு சவால் விட தயாராகிக் கொண்டிருக்கிறார் என்பதையே அவரது நடவடிக்கைகள் காட்டுகின்றன.


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! சுப நிகழ்ச்சிகளில் இருந்து வந்த தடை நீங்கும். மனசோர்வு அகலும். மன அமைதி பாதிக்கும் படியான சூழ்நிலை ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரத்தில் அதிக லாபம் பெறுவர். அலுவலக வேலைகளால் அலைச்சல் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்களால் வீண் டென்ஷன் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி செயல்படுவது நன்மை தரும்.





ரிஸபராசி அன்பர்களே! மனத் துணிவு உண்டாகும். எந்த ஒரு காரியத்தையும் துணிவுடன் செய்து அதிக நன்மை அடைவீர்கள். போட்டி பந்தயங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். உறவினர்களுடன் பேசும் போது நிதானத்தை கடைப் பிடிப்பது நல்லது. புரட்டாதி சனிக்கிழமைகளில் சனிபகவானுக்கு தீபம் ஏற்றி வழிபடவும்.





மிதுனராசி அன்பர்களே! முன்பு தடைபட்ட காரியங்கள் எவ்வித இடையூறுமின்றி நடந்து முடியும். வெளியூர் பயணங்கள் உண்டாகும். அதனால் நன்மையும் ஏற்படும். வழக்குகளில் இருந்து வந்த சோதனைகள் மாறும். சொத்து சம்பந்தமான விஷயங்களில் இருந்து வந்த தடைகள் அகலும். நண்பர்கள் பல விதங்களிலும் ஆதரவாக இருப்பர். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறுகள் குறையும். கணவன் மனைவிக்கிடையே மகிழ்ச்சி நீடிக்கும்.





கடகராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக நடந்து முடியும்.தொழில் வியாபாரத்தில் கூடுதல் அலைச்சல் இருந்தாலும் முடிவில் சாதகமான பலன் கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். கணவன், மனைவி பிரச்னைகளை நிதானமாக பேசுவது நல்லது.





சிம்மராசி அன்பர்களே! எதிர்பாராத நல்ல திருப்பம் உண்டாகும். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடக்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வியாபார போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காணபர்.




கன்னிராசி அன்பர்களே! எதிர்பாராத நல்ல திருப்பம் உண்டாகும். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடக்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வியாபார போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பர். நிலுவையில் உள்ள தொகை வந்து சேரும். கணவன், மனைவி உறவு மகிழ்ச்சிகரமாக இருக்கும்.




துலாம்ராசி அன்பர்களே! நினைத்த காரியத்தை செய்து முடிப்பதில் வேகம் காட்டுவீர்கள். தொழில் வியாபாரத்தில் ஏற்படும் பணதேவையை சரிகட்ட நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான வேலைகளில் அலைச்சல் இருக்கும். மேலிடத்திலிருந்து கனிவான உபசரிப்பு கிடைக்கும். குடும்பத்தில் அனுகூலமான பலன்கள் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே பழைய விஷயங்களை பேசாமல் இருப்பதன் மூலம் ஒற்றுமை இருக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! எதிர்ப்புகள் நீங்கி எதிலும் உற்சாகம் உண்டாகும். மனமகிழ்ச்சிக்காக பணம் செலவு செய்ய தயங்க மாட்டீர்கள். நண்பர்கள் சேர்க்கையும் அவர்களால் உதவியும் கிடைக்கும். வாக்கு வன்மை அதிகரிக்கும். வியாபாரம் தொடர்பான வெளியூர் பயணங்கள் சாதகமான பலன் தரும். உத்யோகத்தில் பொறுப்புகள் கூடும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வும் கிடைக்கக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.








தனுசுராசி அன்பர்களே! எந்த ஒரு காரியம் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுப்பீர்கள். வெளியூரில் இருந்து வரும் கடிதங்கள் மூலம் மகிழ்ச்சி ஏற்படும். தொழில், வியாபாரத்தில் புதிய உத்வேகம் பிறக்கும். தொழில் தொடர்பான விவகாரங்களில் இருந்து வந்த வீண் இடையூறுகள் ஏற்பட்டு நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் மூலம் அனுகூலம் ஏற்படும். புதிய வேலையில் சேர்ந்தவர்களுக்கு பதவி உயர்வு வரும்.




மகரராசி அன்பர்களே! எடுத்த காரியம் கைகூடும். கடன் விவகாரங்களில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். வழக்குகளில் இருந்து வந்த தொய்வு நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். பயணங்கள் மூலம் லாபம் கிடைக்கலாம். மேலதிகாரிகளால் உத்யோகஸ்தர்களுக்கு நன்மை உண்டாகும். சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பர். வாழ்க்கை துணை மூலம் ஆதாயம் கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எதிர்பாராத சுபச்செலவுகள் ஏற்படும். எதிர்ப்புகள் நீங்கும். கவலையை விட்டு விட்டு தொழில் வியாபாரத்தில் கவனம் செலுத்துவது நல்லது. உத்யோகஸ்தர்களுக்கு வெளியூர் மாற்றங்கள் உண்டாகலாம். சக ஊழியர்களிடம் பேசும் போது கோபப்படாமல் இருப்பது நன்மை தரும். குடும்ப உறுப்பினர்களிடம் இருந்த மனத்தாங்கல் நீங்கி மகிழ்ச்சியும், சகஜ நிலையும் காணப்படும்.




மீனராசி அன்பர்களே! வரவை போலவே செலவும் இருக்கும். பயணங்களால் அலைச்சலும், எதிர்பாராத பொருள் இழப்பும் இருக்கும். எனவே கவனமாக இருப்பது நல்லது. திடீர் கவலை ஏற்பட்டு நீங்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் முன்னேற்றம் காண்பர். வியாபாரம் தொடர்பான முயற்சி வீண் முயற்சியாக இருந்தாலும் பின்னாளில் அதற்கான பலன் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் வேலை சுமை இருக்கும்.

வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.

# “அறகலய” அமெரிக்கத் தயாரிப்பு?

(14ம் பக்கத் தொடர்ச்சி) குறைவாக இருந்தன. இந்தத் தோல்வி ரணில் விக்ரமசிங்கவுக்கு JVP கூட்டணியில் தொடர்ந்து பயணிப்பதற்கான ஆர்வத்தை வழங்கவில்லை. தேர்தலை தொடர்ந்து 2010 பெப்ரவரியில் சரத்பொன்சேகா கைது செய்யப்பட்டார். சரத்பொன்சேகாவின் பாராளுமன்ற குழுவில் ஏழு உறுப்பினர்களில் அநுரகுமார திசாநாயக்க உள்ளிட்ட நால்வர் அடங்குவர். அதற்கு முந்திய நாடாளுமன்ற தேர்தலில் 39 உறுப்பினர்களை பெற்றிருந்த ஜே.வி.பி.க்கு இது பலத்த அடியாக அமைந்தது.

சரத்பொன்சேகாவின் கைதை வன்மையாக கண்டித்த ஜே.வி.பி. அதை அரசியல் பழிவாங்கல் என்றும் கூறியது. இன்றைய பொது மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல அப்போது சரத் பொன்சேகாவின் சட்டத்தரணியாக ஆஜராகியவர். அப்போது வழமைக்கு மாறாக சரத்பொன்சேகா நீதிமன்ற விடுமுறை நாட்களில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டதாக அரசாங்கத்தை குற்றம் சாட்டி இருந்தார். தற்போது ரணில் விக்கிரமசிங்கவின் கைதுக்கு அவர் அன்று கூறிய அதேகாரணங்களை எதிர்க்கட்சிகள் இன்று கூறுகின்றனர். ஆனால் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல அவற்றை மறுக்கிறார்.

சரத் பொன்சேகாவின் கைதுக்கு பின்னர் ஜனநாயக தேசிய முன்னணி (DNA) சரியாக இயங்காததால் ஜே.வி.பி. மீண்டும் யு.என்.பி.யுடன் உறவு கொண்டது. இந்த நிலையில் ஜே.வி.பி.யின் தேசிய மாநாட்டில் 2014 இல் அநுரகுமார திசாநாயக்க தலைவராக தெரிவு செய்யப்பட்டார். நல்லாட்சி காலத்தில் யு.என்.பி., ஜே.வி.பி. இணைந்தே நிதிக்குற்றவியல் விசாரணைப்பிரிவை நிறுவினர். (FCID : FINANCIAL CRIMES INVESTIGATION DIVISION). ராஜபக்சாக்களின் நிதி மோசடிகளுக்கு எதிரான விசாரணைகளுக்காகவே இப்பிரிவு நிறுவப்பட்டது. ஆனால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான முரண்பாட்டினால் மைத்திரி மகிந்த ராஜபக்சவை பிரதமராக நியமித்த நிலையில் எல்லாம் பின்நோக்கி தள்ளப்பட்டது. இப்போது ரணில் உருவாக்கிய சட்டமே ரணிலுக்கு எதிராக பாய்ந்துள்ளது. இப்போதைக்கு ராஜபக்சாக்கள் தப்பிக்கொண்டனர். இத் தப்புதல் தற்காலிகமானதா?

2015இல் இவர்கள் மைத்திரிபால சிறிசேனாவை ஆதரித்தனர். நல்லாட்சி அறிவிக்கப்பட்டது. ராஜபக்சாக்களுக்கு எதிரான இந்த அரசியல், தேர்தல் கூட்டுக்களுக்கு பின்னணியில் கொழும்பு அமெரிக்க தூதரகம் இருந்தது. இது அறகலய வரையும் நீடித்தது. என்.பி.பி. அமெரிக்க உறவு இந்திய, சீன உறவுகளை விடவும் நெருக்கமாக திரைமறைவில் நகர்கிறது. இதை இப்பொழுது தான் அறகலய போராட்டக் குழுவினர் உணர்கின்றனர். முறைமை மாற்றம் மற்றும் இடதுசாரி கோசங்கள் அமெரிக்க ஆதரவு பின்னணியில் சாத்தியம் இல்லை என்பதையே படிப்படியாக என்.பி.பி.அரசாங்கத்திற்கு எதிரான தொழிற்சங்க, மற்றும் சிவில் சமூகங்களின் போராட்டங்கள் வெளிக்காட்டுகின்றன.

ஐ.எம்.எப். நிபந்தனைகள், மனித உரிமைகள், போர்க்குற்ற மீறல்கள், சர்வதேச விசாரணை, பயங்கரவாத தடைச் சட்ட நீக்கம், மாகாண சபைத் தேர்தல், அதிகார பரவலாக்கம் எல்லாவறையும் விழுங்கி ஏப்பம் விட்டுக் கொண்டு அமெரிக்கா போட்ட பாதையில் பயணிக்கிறது என்.பி.பி. அரசாங்கம். அமெரிக்க பாதை உண்மையில் பை றோட் தான். ஆனால் என்.பி.பி. அதையே தனது அரசியலுக்கான அகன்ற வேகவீதியாக பயணிக்கிறது. அமெரிக்க என்.பி.பி. உறவில் முக்கிய பங்கு வகித்தவர் ஹரிணி அமரசூரிய, அவர் ரணிலை சுகம் விசாரிக்க ஆஸ்பத்திரிக்கு போயிருந்தால் அதன் பின்னணியும் அமெரிக்கா தான். அதனால் தான் ஆனை அடிக்கும் முன் தானடித்து சாகிறது ஜே.வி.பி. பிரதமர் தனது அரசியல் கற்பை நிரூபிக்க தீக்குளிக்க வேண்டும் என்று கோருகிறது.

ரணிலின் கைதுக்கு பின்னரான அமெரிக்காவின் அடுத்த நகர்வு என்ன? அதை எதிர்கொள்ளும் சக்தி ஜே.வி.பி.க்கு உண்டா?

# செம்மணியின் பின்னணியில் ஐ.நா. கூட்டத்

(13ம் பக்கத் தொடர்ச்சி) பலப்படுத்துகிறது என்ற ஒரு தோற்றத்தைக் கட்டியெழுப்பப் பயன்படுத்தி வருகிறது. ஆனால் செம்மணி திறந்து வைத்திருக்கும் புதிய வாய்ப்புகளைத் தமிழ்த் தரப்பு எவ்வாறு கையாளப் போகின்றது? அதுவும் ஜெனிவா கூட்டத் தொடர் தொடங்கி விட்டது. செம்மணிக்கு நீதி கேட்டும் நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்தில் அனைத்துலக விசாரணையைக் கேட்டும் தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து கையெழுத்துப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்து வருகின்றன. அது வரவேற்கத் தக்கது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அந்த விடயத்தை முன்னெடுத்து வருகிறது. அதில் கட்சி பேதமின்றி தமிழரசுக் கட்சியும் உட்பட அனைத்து தமிழ் தேசிய கட்சிகளும் ஒன்றிணைந்திருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. அது வரவேற்கத்தக்க விடயம்.

ஐநா கூட்டத் தொடருக்கு சில கிழமைகளுக்கு முன்னராவது அப்படி ஒரு ஞானம் உதித்ததைப் பாராட்ட வேண்டும். ஐநா கூட்டத் தொடர்களில் தேசிய மக்கள் சக்திக்கு அனுகூலமான நிலைமைகள் அதிகமிருக்கும் ஒரு இராஜதந்திரச் சூழலில் தமிழ்த் தரப்பு அவ்வாறு ஒன்றிணைந்து செயல்படுவது தான் பலமானது பொருத்தமானது.

# வெளிப்படையான விசாரணைக்கு சர்வதேச..

(9ம் பக்கத் தொடர்ச்சி) காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். மீட்கப்பட்ட மனித எலும்புக்கூடுகளை அடையாளம் காண தடயவியல், தொல்பொருளியல் துறைசார் நிபுணர்கள் சர்வதேச நிபுணத்துவ ஆலோசனையை பெற அனுமதிக்கப்படாத வரை எதிர்பார்க்கப்படும் நீதி கிடைக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

புதைகுழிகள் குறித்து வெளிப்படையான விசாரணை இடம் பெறுமென்று ஓராயிரம் தடவைகள் அரசாங்கம் சொன்னாலும் அதனை நம்புவதற்கு பாதிக்கப்பட்டவர்கள் தயாராகவில்லை. தமிழின அழிப்பு என்ற நீள்வரலாற்றில் ஓரங்கமே செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழிகள். இங்கிருந்து மீட்கப்படும் மனித எச்சங்களே அரச பயங்கரவாதத்தின் அடையாளம். புதைகுழிகளுக்கு வெளிப்படையான விசாரணையை அறிவிப்பவர்கள் சர்வதேச நீதிப்பொறிமுறையை எதற்காக மறுக்க வேண்டும்?


THIRUKKURAL INTERNATIONAL CONFERENCE
6 வது அனைத்துலகத் திருக்குறள் மாநாடு
INTERNATIONAL THIRUKKURAL CONFERENCE
கனடாவின் பிரபல இசை ஆசிரியர்களின்
நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள்
இணைந்து வழங்கும்
இசைத் தமிழ்
01. Sangeetha Poosanam Pon Sundaralingam
02. Sangeetha Vidwan Smt.Parasakthy Vinayagathevarajah
03. Sangeetha Kalavithahar Smt. Lasanthi Rajkumar
04. Smt .Aathirai Sivapalan Roshan
05. Isaikalaimani Smt. Tharmini Thishyan
06. Isai Muthukalamani Smt. Mathumathy Sivakumaran
07. Isai Muthukalaimaani Smt Jeyanthy Lepagaran
08. Yuva Kala Vipanchee Vaaraki Wijayaraj
09. Isai muthukalaimaani Smt Ratneswary kunapalan
10. Shri Vasuthevan Rajalingam
Saturday
20 SEPT
@
6.30PM
UNIVERSITY OF TORONTO
HIGHLAND HALL
1265 MILITARY TRAIL
SCARBOROUGH
ENTRANCE FREE
EEKAI
UNIVERSITY OF TORONTO
for more information
+1 (416) 707 9104
https://internationalthirukkuralconference.org






# வட கிழக்கில் இராணுவ மயமாக்கலை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும்! ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் வலியுறுத்தல்!

இலங்கையில் இடம் பெற்ற கடந்தகால மீறல்கள் மற்றும் வன்முறைகளாலும், தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் போக்கினாலும் உருவான காயங்களை ஆற்றுவதற்கும், அவற்றிலிருந்து மீள்வதற்கும் தற்போது தகுந்த வாய்ப்பு கிட்டியிருப்பதாக பேரவையில் சுட்டிக்காட்டியுள்ள ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க், கடந்த தசாப்தங்களில் இடம் பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகளைக் கையாள்வதற்காக சுயாதீன விசேட சட்டவாதியின் பங்கேற்புடன் கூடிய பிரத்யேக நீதிப் பொறிமுறையை இலங்கை அரசாங்கம் ஸ்தாபிக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடர் திங்கட்கிழமை (8) ஜெனீவாவில் ஆரம்பமானது. கூட்டத்தொடரின் தொடக்க நாள் அமர்வில் ஜெனீவா நேரப்படி காலை 12.15 மணிக்கு உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான தனது எழுத்து மூல அறிக்கையின் உள்ளடக்கம் குறித்து உரையாற்றினார்.

அதன்படி கடந்தகால மீறல்கள் மற்றும் வன்முறைகளாலும், தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் போக்கினாலும் உருவான காயங்களை ஆற்றுவதற்கும், அவற்றிலிருந்து மீள்வதற்கும் இலங்கைக்கு தற்போது வரலாற்று முக்கியத்தும் மிக்க வகையில் வாய்ப்பு கிட்டியிருப்பதாக சுட்டிக் காட்டிய உயர்ஸ்தானிகர், நீதியையும் பொறுப்புக் கூறலையும் உறுதி செய்வதற்கான சந்தர்ப்பம் அமைந்திருப்பதாகத் தெரிவித்தார். அத்தோடு அண்மையில் தான் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த போது முன்னெப்போதுமில்லாத வகையில் சீரான புதிய நடவடிக்கைகளை மேற் கொள்ளவிருப்பதாக அரசாங்கம் வாக்குறுதியளித்ததாகவும், அவ்வாக்குறுதிகளுக்கு செயல்வடிவம் அளித்து அவை உரியவாறு நிறைவேற்றப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

அதே போன்று எதிர் வருங்காலங்களில் நாட்டில் நிலையான நல்லிணக்கத்தையும் அமைதியையும் கட்டியெழுப்புவதற்கு பொறுப்புக்கூறல் மற்றும் நீதி நிலை நாட்டப்பட வேண்டியது அவசியம் எனக் குறிப்பிட்ட வோல்கர் டேர்க், இலங்கைக்கான விஜயத்தின் போது கடந்தகால மீறல்களால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் துயரத்தையும், அத்துமீறல்களையும் அனுபவித்து வருவதாகவும், செம்மணி மனிதப் புதைகுழியைப் பார்வையிடச் சென்றபோது அங்கிருந்தவர்கள் தாம் முகங்கொடுத்துவரும் துன்பத்தைத் தன்னிடம் முறையிட்டதாகவும் தெரிவித்தார். அதுமாத்திரமன்றி தெற்கைச் சேர்ந்த பெண்ணொருவர் தனது கணவருக்காக நீண்ட காலமாகக் காத்திருப்பதாகத் தன்னிடம் கூறியதாகவும் குறிப்பிட்ட அவர், எனவே தண்டனைகளிலிருந்து தப்பிக்கும் போக்கு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு நீதி வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அடுத்ததாக கடந்த காலங்களில் அரசு, பாதுகாப்புப்படையினர் மற்றும் ஆயுதக்குழுவான தமிழீழ விடுதலைப்புலிகள் உள்ளிட்ட தரப்பினரால் மீறல்கள், வன்முறைகள் நிகழ்த்தப்பட்டன என்ற விடயத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும் எனக் கூறிய உயர்ஸ்தானிகர், நினைவு கூரல்களில் ஈடுபடுவதற்கு இடமளிக்கப்பட்டிருப்பது சாதகமான விடயம் எனக் குறிப்பிட்டதுடன் மீள் நிகழாமையை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவான வகையில் அவசியமான சட்ட மறுசீரமைப்புக்க்ள மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.




குறிப்பாக சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலகத்தை ஸ்தாபிக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்திருப்பதை வரவேற்பதாகவும், அச்செயன்முறையில் சிவில் சமூகம் உள்ளடங்கலாக சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் உள்வாங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்திய அவர், கடந்த தசாப்தங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகளைக் கையாள்வதற்காக சுயாதீனமான விசேட சட்டவாதியின் பங்கேற்புடன்கூடிய பிரத்யேக நீதிப் பொறிமுறையை இலங்கை அரசாங்கம் ஸ்தாபிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் 'பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் பிரயோகம் உடன் இடை நிறுத்தப்படவேண்டும். நிகழ்நிலைக் காப்புச் சட்டம், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச் சட்டம், அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பான உத்தேச சட்ட வரைவு மற்றும் தனிநபர் தரவுப்பாதுகாப்பு தொடர்பான உத்தேச சட்ட வரைவு என்பன உள்ளடங்கலாக மீறல்களுக்கு வழிவகுக்கக்கூடிய சட்டங்கள் உரிய நியமங்களுக்கு அமைவாகத் திருத்தியமைக்கப்பட வேண்டும். வலிந்து காணாமலாக்கப்படல்கள் மற்றும் காணி சுவீகரிப்பு உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பில் இயங்கிவரும் செயற்பாட்டாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் மீதான ஒடுக்குமுறைகளும், அச்சுறுத்தல்களும் தொடர்கின்றன. அவை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

அது மாத்திரமன்றி பாதுகாப்புத்துறை மறுசீரமைக்கப்பட வேண்டும். வட, கிழக்கு மாகாணங்களில் இராணுவ மயமாக்கம் முடிவுக்குக் கொண்டு வரப்படுவதுடன் தனியாருக்குச் சொந்தமான காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். மலையகத் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்' என்றும் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் தெரிவித்தார். அத்தோடு இலங்கை தொடர்பில் தமது அலுவலகத்தினால் முன்னெடுக்கப் பட்டுவரும் பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தின் ஊடாக இலங்கையின் கடந்தகால மீறல்கள் தொடர்பில் 105,000 ஆதாரங்கள் மற்றும் தகவல்கள் (20ம் பக்கம் பார்க்க)

